## இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவோம் வாருங்கள்!!

## (The Book of following the Prophet's Path என்ற நூல் மொழி பெயர்த்து வழங்கப்படுகின்றது)

---

இஸ்லாத்தின் அடிப்படையாக, அந்த மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் மீது இருக்கக் கூடிய தலையாய கடமையாக இருப்பது இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் அல்லாஹ்விற்குக் கீழ்படிவதாகும். இதனை அல்லாஹ் தன்னுடைய திருமறைக் குர்ஆனில் இவ்வாறு விவரிக்கின்றான் :

எவர் (அல்லாஹ்வின்) தூதருக்குக் கீழ்படிகிறாரோ, அவர் அல்லாஹ்வுக்குக் கீழ்படிகிறார்

மேலும் சூரா முஹம்மது - வில் இறைவன் இவ்வாறு தெளிவாகக் கூறுகின்றான் :

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிபடுங்கள். இன்னும் இத்தூதருக்கு வழிபடுங்கள். - உங்கள் செயல்களை பாழாக்கி விடாதீர்கள். (47:33)

இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டியதன் தேவை என்ன என்பதைப் பற்றி சூரா அந்நஜ்ம் - ல் இவ்வாறு விவரிக்கின்றான் :

அவர் தம் இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை. அது அவருக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி வேறில்லை. (53:3-4)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சொந்தமாக எதையும் அவர்கள் பேசுவதில்லை. மாறாக இறைவன் தனக்கு அறிவித்துக் கொடுத்தபடியே தான், தன்னுடைய உம்மத்தவர்களுக்கு - பின்பற்றுபவர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார்கள். உதாரணமாக, தொழுகைக்கு முன் எவ்வாறு ஒலுச் செய்வது என்பதை முஹம்மது (ஸல்) அவர்கள் அறியாதிருந்தார்கள். அல்லாஹ் தன்னுடைய தூதரான ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக தன்னுடைய இறைத்தூதருக்குக் கற்றுக் கொடுத்தான். அதைப் போல தொழுகையையும், அதன் நேரத்தையும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக இறைவன் கற்றுக் கொடுக்க, தான் கற்றுக் கொண்டதை தன்னுடைய தோழர்களுக்கு மற்றும் இந்த உம்மத்தவர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஏவினார்கள்.

இதுவல்லாமல், முஹம்மது (ஸல்) அவர்களது வாழ்க்கையில் நடந்த பல்வேறு சம்பவங்களுக்கு, தன்னைப் பின்பற்றிய தோழர்கள் மார்க்கம் சம்பந்தமான கேள்விகளுக்கு உடனடியாகத் தீர்வுகளை வழங்க இயலாமல், இறைவனுடைய வழிகாட்டுதலுக்காக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காத்திருந்திருக்கின்றார்கள். அல்லாஹ் அதற்கான பதிலை வழிகாட்டுதல்களை வழங்கிய பிறகு தான், அதற்கான தீர்வுகளை மக்களுக்கு வழங்கலானார்கள்.

உதாரணமாக, உவைஸ் பின் ஸாமித் (ரலி) அவர்கள் தன்னுடைய மனைவி கவ்லா (ரலி) அவர்களை ளிஹார் செய்து விடுகின்றார்கள். (ளிஹார் என்பது ஒருவன் தன் மனைவியை தன்னுடைய தாயின் முதகைப் போன்றவள் என்று கூறுவதாகும். இதன் அர்த்தம் என்னவெனில் நீ என்னுடைய தாயைப் போன்றவள், இது நாள் முதல் நான் உன்னுடன் உடலுறவு கொள்வது ஹராமாகி விட்டது என்று அறிவிப்பதைக் குறிக்கும்). இது விஷயம் குறித்து கவ்லா (ரலி) அவர்கள் இஸ்லாமியச் சட்டம் என்ன கூறுகின்றது என்று வினவிய பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எந்தப் பதிலையும் தரவில்லை.

இது போலவே, ஆன்மாவைப் பற்றித் தன்னுடைய தோழர்கள் வினவிய பொழுதும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உடனடியாக எந்தப் பதிலையும் சொல்லவில்லை. இறைவழிகாட்டுதல்கள் வந்த பின் தான் அதுபற்றிய விளக்கத்தைத் தன்னுடைய தோழர்களுக்கு வழங்கினார்கள்.

ஒரு முறை அன்ஸாரித் தோழர் ஒருவர் முஹம்மது (ஸல்) அவர்களை அணுகி, ஒரு மனிதன் தன்னுடைய மனைவியுடன் வேறு ஒரு ஆடவன் இருந்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டான் என்றால் அவன் என்ன செய்ய வேண்டும் என்றும், அவன் இஸ்லாமியச் சட்டப்படி நான்கு சாட்சியங்களைக் கொண்டு வரவில்லை என்றால் அவன் பொய்யனாகி விடுகின்றான், உணர்ச்சி வசப்பட்டு கொலை செய்து விடுவானாகில் அவன் கொலைக்குரிய தண்டனையை அடைந்து விடுவான், அல்லது இதனை மான அவமானத்திற்குப் பயந்து எந்த மனிதரிடமும் கூறவில்லை எனில் அவன் பைத்தியமாகியும் விடுவான், இந்த நிலையில் அவன் என்ன செய்ய வேண்டும் என்று வினவி நின்றார். முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனுடைய வழிகாட்டுதல்களை வேண்டி துஆச் செய்தார்கள். வழிகாட்டுதல்கள் வந்த பின்பு தான், இதற்கான தீர்வை இறைத்தூதர் (ஸல்)அவர்கள் வழங்கினார்கள். (சூரா அந்நூர் : 6-9 வரையுள்ள வசனங்கள் இதற்கான தீர்வாக இறைவன் வழங்கினான்).

மேலும், இறைவழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது என்பது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்துடன் முடிவடைந்து விடுவதில்லை, மாறாக, ஒவ்வொரு முஸ்லிமினுடைய வாழ்நாள் முழுவதும் பின்பற்ற வேண்டியது கடமையானதொன்றாக இருக்கின்றது என்பதை ஒவ்வொருவரும் மனதில் இறுத்திக் கொள்ள வேண்டும்.

(நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மாராயங் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமமே யன்றி (வேறெவ்வாறும்) அனுப்பவில்லை. (34:28)

மேலும் சூரா அல் அன்ஆம் - ல் இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

இந்த குர்ஆன் எனக்கு வஹீயாக அருளப்பட்டுள்ளது. இதைக் கொண்டு உங்களையும், (இதை அடைந்தவர்களையும் நான் அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும் (6:19)

கீழ்படிவது என்பதைப் பொறுத்தவரை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டு மிகவும் விசேஷமாகக் கூறியதொரு பொன்மொழி ஒன்று புகாரி ஹதீஸ் தொகுப்பில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எனது உம்மத்தவர்களில் எவனொருவன் மறுத்தானோ, அவனைத் தவிர மற்ற அனைவோர்களும் சொர்க்கம் புகுவார்கள். நபித்தோழர்கள் வினவினார்கள் : யா! ரசூலுல்லாஹ்! மறுத்தவர்கள் என்பவர்கள் யார்? ஏன்று கேட்ட பொழுது, யாரொருவர் எனக்குக் கீழ்ப்படிகின்றாரோ அவர் சொர்க்கம் புகுவார், எவர் எனக்கு மாறு செய்கின்றாரோ அவர் என்னை மறுத்தவர் போன்றவராவார். முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் கீழ்படிவது சம்பந்தமாக இறைவனே தன்னுடைய திருமறைக் குர்ஆனில் இவ்வளவு தெளிவாகக் கூறி விட்டான் : அதாவது,

உம் இறைவன் மேல் சத்தியமாக, அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக, ஏற்றுப் பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரையில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள். (4:65)

இதை இன்னொரு விதமாகச் சொல்ல வேண்டுமென்றால், இறைவன் மீது நம்பிக்கை கொள்வதும், இறைத்தூதருக்குக் கீழ்படிந்து நடப்பதும், மேற்கண்ட இரண்டும் இஸ்லாத்தில் பிரித்துப் பார்க்க முடியாத, நம்பிக்கையின் அம்சங்களில் உள்ளவையாகும். ஒருவன் இறைத்தூதருக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்கின்றவனென்றால், அவன் ஒரு உண்மையான முஸ்லிமாவான், எவனொருவன் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லையோ அவன் உண்மையான முஸ்லிமாக இருக்க மாட்டான். மேலே குர்ஆனில் இருந்தும் மற்றும் சுன்னாவில் இருந்தும் நாம் கற்றுக் கொண்டது என்னவென்றால், இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது என்பது இரண்டாம்பட்சமானதல்ல, மாறாக இஸ்லாத்தின் நம்பிக்கை கொள்ள வேண்டிய அம்சங்களில் -

அதாவது ஈமானில் பிரிக்க முடியாத, பிரித்துப் பார்க்கவே முடியாததொரு பகுதியாக இருக்கின்றது என்ற முடிவுக்கு எந்தவித சிரமமுமின்றி நாம் வந்து விடலாம்.

### குர்ஆனும் சுன்னாவும் ஈமானைப் பாதுகாக்கக் கூடிய கவசங்கள்

குர்ஆனையும், சுன்னாவையும் மறுத்து வாழ்வது என்பது நம்முடைய நம்பிக்கையில் - ஈமானில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அது மிகப் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தி விடக் கூடியதாக இருக்கின்றது. குர்ஆனிலும் மற்றும் சுன்னாவிலும் தகுந்த பரீட்சயம் அல்லது அறிவு இல்லாததன் காரணமாக இன்றைக்கு முஸ்லிம்கள், தாங்கள் கண்களில் காண்பதெல்லாம் இஸ்லாம் என்று ஷேக்மார்கள் பின்னாலும், முரீதுகள் பின்னாலும், அவ்லியாக்கள் பின்னாலும், உலமாக்கள் பின்னாலும் ஓடிக் கொண்டு, அது தான் இஸ்லாம் என்று இஸ்லாம் அல்லாதவைகளை தங்கள் வாழ்க்கையில் கடைபிடித்து வருவதைப் பார்த்து வருகின்றோம். மேலும், இவர்களைப் பின்பற்றுவதும், அவர்களிடம் தங்களது கோரிக்கைகளை வைப்பதும், அவர்களது கப்றுகளுக்கு ஜியாரத் செய்வதும் நன்மையான காரியங்கள் என்றும் அவை நன்மைகளைகளையும், இறைப் பொறுத்தத்தையும் பெற்றுத் தரும் என்றும் நம்பிக் கொண்டு, அவர்களைப் புனிதமானவர்களாகக் கருதி தங்களது பிழை பொறுத்தருளப் பிரார்த்திப்பதும் மற்றும் தமக்காக பிழை பொறுத்தருள இறைவனிடம் வேண்டுமாறும் மற்றும் தமக்கு நெருக்கமானவர்கள் இறந்து விட்டார்கள் என்றால், அவர்களது ஆவிகளிடம் பேசுவது போன்று அவர்களிடம் மறைவானவற்றைக் குறித்துக் கேட்பதும், இவைகள் எல்லாம் இஸ்லாம் என்று இன்று நடைமுறையில் முஸ்லிம்களிடம் காணப்பட்டுக் கொண்டிருக்கும் வழிகேடுகளாகும். இன்னும் முக்கியமான நாட்களாக சில நாட்களைத் தேர்வு செய்து கொண்டு அந்த நாட்களில் சூரா ஃபாத்திஹாவை ஓதுவது, குர்ஆனைக் குழுவாக அமர்ந்து ஓதி அதனை கத்தம் செய்வது, குல் மற்றும் உரூஸ் என்ற சந்தனக் கூடு எடுப்பது, அவுலியாக்களின் பிறந்த மற்றும் இறந்த தின வைபவம், முஹம்மது (ஸல்) அவர்களின் பிறந்த தினமாக மீலாதுந் நபி கொண்டாடுவது, இசை – கவாலி இசை கேட்பது இவைகளெல்லாம் இஸ்லாத்தில் உள்ளவை என்றும் இவற்றை நடைமுறைப்படுத்து இறைவனுடைய நெருக்கத்தையும், பாவ மன்னிப்பையும், நன்மைகளையும் பெற்றுத் தரக் கூடியவைகள் என்று நம் முஸ்லிம்கள் பின்பற்றி வருகின்றார்கள். இவைகளெல்லாம், குர்ஆனைப் பற்றியும், முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்வியல் நடைமுறைகளான சுன்னாவைப் பற்றியும் எந்தவித அறிவுமில்லாதவர்களினால் பின்பற்றப்படுகின்ற வழிகேடுகளாகும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. இறைவனுடைய குர்ஆனையும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் போதனைகளைப் பின்பற்றுவது ஒன்றே ஒரு மனிதனை நரக நெருப்பிலிருந்து பாதுகாக்கக் கூடியதாக இருக்கும், மேலும், இதனைப் பற்றி பூரணமாக அறிந்து கொள்வது ஒன்றே ஒரு முஸ்லிமை இத்தகைய வழிகேடுகளிலிருந்து தூரமாக்கி, பாதுகாக்கக் கூடியதாகவும் இருக்கும்.

முஃதஸிலாக்கள் குர்ஆனானது இறைவனது படைப்புக்களில் ஒன்றாக இருக்கின்றது என்ற வழிகேட்டுக் கொள்கையை இஸ்லாத்திற்குள் புகுத்தினார்கள். ஹிஜ்ரி 218 ல் கலீபா மஃமூன் அர் ரஷீது என்பவர், இந்தக் கொள்கைக்கு ஆதரவாக உலமாக்களின் சம்மதத்தைப் பெற விரும்பினார். ஆனால் இமாம் அஹ்மது இப்னு ஹம்பல்(ரஹ்) இந்த வழிகெட்ட கொள்கை இஸ்லாத்திற்குள் நுழைக்கப்படுவதனின்றும் தடுக்கும் முகமாக, இந்தக் கொள்கைக்கு எதிராக மலை போல உறுதியுடன் எதிர்த்து நின்றார்கள். ஆவர் சிறையிலடைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டார். அவர் மீது விழுகின்ற ஒவ்வொரு கசையடியின் பொழுதும், அவரிடம் குர்ஆன் படைக்கப்பட்டது தானே? என்ற கேள்வியைக் கேட்டு கேட்டு அவரை அடித்தனர். இத்தகைய அடக்குமுறையில் கடுமையான துன்பத்தை அனுபவித்த

பொழுதும், ஒவ்வொரு கேள்வியின் பொழுதும், குர்ஆனில் இருந்தும் சுன்னாவில் இருந்தும் அதற்கான ஆதாரத்தைக் கொண்டு வந்தாலொழிய நீங்கள் கூறுவதை நான் எந்நாளும் கூற மாட்டேன் என்று உறுதிபடக் கூறினார்கள்.

முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் உங்களிடம் ஒன்றை விட்டு விட்டுப் போகின்றேன், அதனைப் பின்பற்றும் காலமெல்லாம் நீங்கள் வழிகெட்டுப் போக மாட்டீர்கள், அது தான் திருமறைக் குர்ஆனும் என்னுடைய வழிமுறையாகிய சுன்னாவும் ஆகும் என்று கூறினார்கள்.

மேற்கண்ட இந்த வரிகள் தான், கடுமையான துன்பம்தன்னை வந்து தாக்கிய பொழுதும், குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் எதிராக நடக்கும் அந்த யுத்தத்தில் மலை போல நின்று, இன்றைக்கு உள்ள இந்த உம்மத்தை அவர்கள், அந்த முஃதஸிலா கொள்கையின் சென்று விடாமல் இருக்க பாதுகாத்து உதவியது. இன்றைக்கு வழிகேடுகள் எல்லாம் காட்டுத் தீ போல மிக வேகமாகப் பரவி வருகின்றது. இதில் ஒரு உண்மையான முஸ்லிம் தன்னை இழந்து விடாமல் பாதுகாக்க விரும்பினால் அவன் குர்ஆனைப் பற்றியும், இறைத்தூதர் (ஸல்) அவர்களது போதனைகளைப் பற்றியும் மிகத் தெளிவாக அறிந்திருப்பதோடு தன்னுடைய வாழ்க்கையில் முழுமையாக அவற்றை பின்பற்றவும் வேண்டும். மேலும், நாம் அறிந்து கொண்ட இந்த சத்தியத்தை பிறருக்கு எடுத்து வைப்பதிலும் நாம் கண்ணுக் கருத்துமாக, இடைவிடாது பாடுபட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

### குர்ஆனும், சுன்னாவும் முஸ்லிம் உம்மத்தின் ஒற்றுமைக்கான அடித்தளமாகும்.

இன்றைக்கு முஸ்லிம் உம்மத்தின் ஒற்றுமை என்பது எந்தவித கருத்து வேறுபாட்டுக் இடமில்லாமல் யாராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதொரு, அது ஏன் எதற்கு? என்று விளக்கப்பட அவசியமற்றதொன்றாகும். நம்மிடையே பிரிவுகள் பிளவுகளாகி, பல்வேறு கிளைகளாகப் பிரிந்து விட்டது என்பது, ஒரு சரி செய்ய முடியாத அளவுக்கு நம்முடைய மார்க்கத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தி விட்டதோடு மட்டுமல்லாது நம்முடைய ஈமானிலும் அது பாதிப்பை ஏற்படுத்தி விட்டது என்பதை நம் கண் முன்னாலேயே நாம் பார்த்து வருகின்றதொரு நிகழ்வாக இருந்து வருகின்றது. இந்த நிலையில் உண்மையிலே இந்த இஸ்லாத்தை மீட்டெடுத்துக் கொண்டு வருவதற்கு நாம் நமக்கு முன்னால் உள்ள தடைகளை எல்லாம் தாண்டி அதற்கான பணியிலே நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, நம்முடைய சொந்த சகோதரர்களாகிய அவர்கள் பல்வேறு பிரிவுகளுக்குள் இருந்துகொண்டு தங்கள் தங்கள் பிரிவுகளுக்கு ஆதரவாகச் செயல்படுகின்றோம் என்ற போர்வையில், தங்கள் தங்கள் கொள்கைகள் கோட்பாடுகளைக் கொண்டு நம்மை எதிர்க்கக் கூடிய சூழ்நிலையை நாம் கண்டு வருகின்றோம். நாம் எப்பொழுதெல்லாம் உண்மையான இஸ்லாத்தை மீட்டெடுப்பதற்காக அரும்பாடுபட்டு, அதனை மீட்டெடுத்துக் கொண்டு வருகின்ற பொழுதெல்லாம் அதன் பாதையில் நின்று கொண்டு, தங்கள் பிரிவுகளின் சட்ட வல்லுநர்களின் துணை கொண்டு அவரவர்களினுடைய சட்டத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, ஓலமிடுவதை நம்மால் காண முடியும். இத்தகையதொரு போக்கு இந்த முஸ்லிம் சமுதாயத்தை நேர்வழியின்பால் கொண்டு செல்வதற்கு நாம் எடுத்துக் கொண்ட முயற்சி முன்னேற்றப்பாதையில் செல்வதை விட்டு விட்டு, சற்றுப் பின்னோக்கிச் சென்று விடுவதைக் காண முடிகின்றது. நாம் எடுத்துச் சொல்லக் கூடிய இந்த சத்தியமானது எப்பொழுது அதன் பலனைத் தரும் என்று சொன்னால், பல்வேறு பிரிவுகளாக இருக்கின்ற நாம் எப்பொழுது குர்ஆனையும், இறைத்தூதர் (ஸல்) அவர்களது போதனைகளையும் சிந்தித்து அதன்படி செயல்பட ஆரம்பிக்கின்றோமோ அப்பொழுது தான் அது நம்மை ஓர் அணியில் சேர்க்கக் கூடியதாக இருக்கும். எப்பொழுதெல்லாம் இறைவன் பல்வேறு குழுக்களாகப் பிரிவதைப் பற்றி நம்மை எச்சரிக்கின்றானோ

அப்பொழுதெல்லாம், குர்ஆனையும் சுன்னாவையும்கொண்டு ஓரணிக்கு வாருங்கள் என்றே கூறுகின்றான். இதனைப் பற்றி தன்னுடைய திருமறைக் குர்ஆனிலே இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள் (3:103)

இந்த வசனத்தில் இறைவன் பல்வேறு குழுக்களாக இந்த உம்மத் பிரிவதைத் தடை செய்திருப்பதோடு, குர்ஆனையும், முஹம்மது (ஸல்) அவர்களது சுன்னாவையும் கெட்டியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டு, அதில் நிலைத்திருக்கும்படியும் அறிவுரை கூறுவதோடு, அதனைக் கடமையாகவும் ஆக்கிஇருக்கின்றான். இந்த முஸ்லிம் உம்மத்தின் ஒற்றுமை என்பது, இந்த உம்மத் எப்பொழுது குர்ஆனையும், சுன்னாவையும் ஏற்றுப் பின்பற்ற ஆரம்பிக்கின்றதோ அப்பொழுது தான் சாத்தியமாகும், அதுவல்லாத எதனைக் கொண்டும் இந்த முஸ்லிம் உம்மத்தை ஓரணிக்குக் கொண்டு வருவது என்பது சாத்தியமில்லாததாகும்.

மிகவும் மிருதுவான நெகிலும் தன்மை கொண்ட கிளையில் கட்டப்படும் கூடானது பாதுகாப்பற்றது.

## தக்லீத் அல்லது கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுதல்

இமாம்களை அச்சொட்டாக அப்படியே பின்பற்றலாமா? கூடாதா? என்பது இன்றைக்கு நேற்றல்ல நெடுங்காலமாக இருந்து வருகின்றதொரு கேள்வியாகும். இதன் அடிப்படையில் ஒவ்வொரு குழுவினரும் தங்களுக்கு சாதகமான வாதப் பிரதிவாதங்களை வைத்துள்ளார்கள். இன்றைக்கு வளர்ந்து வரும் புதிய தலைமுறைகளுக்கு ஓர் இறைக் கொள்கையையும், ஓர் இறைவனையும், ஒரு தூதரையும், ஒரு திருமறையையும், ஒரே கிப்லாவையும், ஒரே மார்க்கத்தையும் கற்றுத் தேறி, அவற்றைப் பற்றி அறிந்து கொண்டு, நடைமுறை வாழ்விலே அவர்கள் அடி எடுத்து வைக்கும் பொழுது, இஸ்லாமிய மார்க்கம் என்பது ஒரே மார்க்கம் என்று நினைத்ததற்கு மாறாக, பல்வேறு குழுக்கள் முஸ்லிம்களிடையே இருந்து கொண்டிருப்பதைக் காணுகின்றார்கள். இந்த பல்வேறு பிரிவினைகள் நமக்குள் இருப்பதைக் கண்ணுற்ற அவற்றினால் மூளைக் குழப்பத்திற்கு ஆளாகி விடாமல், நம்முடைய மார்க்கம் என்பது ஒன்று, இறைவன் ஒருவனே, தூதர் ஒருவரே, வேதம் ஒன்றே, கிப்லாவும் ஒன்றே என்பது பற்றி அந்தப் பிரிவினையில் உழன்று கொண்டிருப்பவர்களுக்கு சுட்டிக் காட்டுவதே, இந்த மூளைக் குழப்பத்திலிருந்து விடுபடுவதற்குரிய தகுந்த வழியாகும்.

எது நேரிய வழி? உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், குர்ஆனையும், முஹம்மது (ஸல்) அவர்களது போதனைகளையும் ஏற்றுப் பின்பற்றி நடப்பது ஒன்றே நேரிய வழியாகும். அது தான் இஸ்லாத்தின் அடிப்படையுமாகும். முஹம்மது (ஸல்) அவர்கள் தங்களது வாழ்விலே பட்ட சிரமங்களிலிருந்து பெற்ற அந்த நடைமுறைகளை நமக்கு மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுத்து வழங்கப்பட்டிருக்கின்றது, அதனைப் பின்பற்றுவது என்பது நம்மால் தவிர்க்க முடியாததொரு கடமையாக இந்த உம்மத்தவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. ஒரு முஸ்லிம் ஹம்பலி மத்ஹப் - பைப் பின்பற்றி நடப்பது கடமையென முடிவெடுத்து விட்டால், மற்ற மூன்று மத்ஹபுகளை (மாலிக், ஹனபி, ஷா∴பிஈ) பின்பற்றாத போதிலும் தன்னுடைய ஈமான் பாதுகாப்பானதாக, முழுமையானதாக இருக்கின்றது என்று நினைத்துக் கொள்கின்றான்.

இதைப் போலவே, ஒரு முஸ்லிம் ஹன∴பி மத்ஹபைப் பின்பற்றிக் கொண்டு மற்ற மூன்று மத்ஹபுகளையும் பின்பற்றாதிருந்த பொழுதும், தன்னுடைய ஈமானில் எந்தவித கெடுதலும்

ஏற்படவில்லை என்றும் நினைக்க ஆரம்பித்து விடுகின்றான். இந்த முஸ்லிம் உம்மத்தவர்களிலேயே மிகவும் கண்ணியமானவர்களான இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நபித்தோழர்கள் மேலே கூறப்பட்ட நான்கு மத்ஹபுகளில் எந்த மத்ஹபையும் பின்பற்றவில்லை என்பதும், மற்றும் இந்த கண்ணியமானவர்களைப் பற்றி முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருக்கின்றார்கள் : என்னுடைய தோழர்கள் வாழும் காலம் தான் மிகவும் உன்னதமான காலமாகும். (முஸ்லிம்).

நாம் இங்கே எடுத்து வைக்கின்ற கருத்தின் முக்கிய சாராம்சம் என்னவென்றால், குர்ஆனிற்கு அடுத்ததாக, இந்த முஸ்லிம் உம்மத் பின்பற்ற வேண்டிய மிகவும் மதிக்கத்தக்கதொரு நடைமுறை என்னவென்றால், இந்த உம்மத் பதிவு செய்து பாதுகாத்து வைத்திருக்கின்ற இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் நடைமுறையாகும். இந்த நடைமுறைப் பதிவுகளான ஹதீஸ்கள், அது எந்த இமாமின் பின்னணியில் வந்தாலும், அது இமாம் அபூஹனீ∴பா அவர்கள் மூலமாகவோ, அல்லது இமாம் ஷா∴பிஈ அவர்கள் மூலமாகவோ அல்லது இமாம் ஹம்பலி அவர்கள் மூலமாகவோ அல்லது இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் மூலமாகவோ, இவர்களில் யார் மூலமாக வந்தாலும் அவற்றைப் பின்பற்றுவதுதான் ஒரு உண்மையான முஸ்லிமிற்கு அழகாகும். இந்த மத்ஹபுகளை அல்லது பல்வேறு பிரிவுகளாக இருந்து கொண்டு மார்க்கத்தைப் பின்பற்றுவது என்பது, உண்மையிலேயே இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நடைமுறைகளாக ஹதீஸ்கள் கிடைத்தபின்பும், தான் ஏற்கனவே பின்பற்றிக் கொண்டிருக்கும் மத்ஹபுச் சட்டங்களுக்கு ஒத்துவராத காரணம் ஒன்றே, அதனை வெகு எளிதாகப் புறக்கணித்து விடக் காரணமாக அமைந்து, நம்முடைய மனங்களிலே பிரிவு மனப்பான்மையை விதைத்து வளரச் செய்து விடும். இத்தகைய நோக்கங்கள் தான் நம்முடைய தீனுள் இஸ்லாத்தைப் பாதிக்கக் கூடிய பாராதூரமானதொரு அம்சமாக அமைந்து, நம்முடைய அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஆணிவேராகவும் இது மாறி விடுகின்றது.

முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது குறித்த இமாம்களின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி இன்ஷா அல்லாஹ் வாசகர்களுக்கு, சுன்னாவும், இமாம்களும் என்ற தலைப்பில் விவரிப்போம். ஏப்பொழுதெல்லாம் சரியான ஹதீஸ்கள் கிடைக்கின்றதோ, அப்பொழுது அந்த ஹதீஸ்களைப் பின்பற்றுவதோடு நாங்கள் என்ன சொன்னோம் என்பதைப் பற்றிக் கணக்கிலெடுக்காமல், அவற்றை எந்தவித தயக்கமுமின்றி தள்ளுபடி செய்து விட வேண்டும் என்பதே அனைத்து இமாம்களின் நிலைப்பாடாக இருந்தது என்பதை அந்தத் தலைப்பில் நீங்கள் கண்டு கொள்வீர்கள். மேலும், இந்த இமாம்களின் வரிசையில், இமாம் அபூ ஹனீ∴பா அவர்களின் கூற்றை நாம் சற்றுக் கவனிப்போம் என்றால், அவர்கள் கூறினார்கள், மார்க்க விஷயத்தில் முஹம்மது (ஸல்) அவர்களின் கூற்றைத் தவிர்த்து மற்ற அனைத்துக் கூற்றுக்களும் குறைபாடுடையது, பொய்யானது என்று அறிவிக்கின்றார்கள். ஊண்மையிலேயே நீங்கள் இமாம் அபூஹனீ∴பா அவர்களைப் பின்பற்றுகின்றவர்கள் என்றால், அவரது (இந்தக்) கூற்றை உண்மையிலேயே மதித்து நடப்பவர்களாக இருக்க வேண்டும்.

இறுதியாக, நாம் நம்முடைய வகையில் குறிப்பாக நம்முடைய இமாம்களின் அந்த நேர்மையான முயற்சிகளின் காரணமாக விளைந்த அந்த பிக்ஹு ச் சட்டங்கள் யாவும் நம்முடைய மார்க்கச் சட்டங்களின் அறிவுப் பொக்கிஷங்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த இமாம்களின் நேர்மையான உழைப்பின் இஜ்திஹாதின் பயனாக விளைந்த இந்த மார்க்கச் சட்டங்கள் குர்ஆனுக்கும் ஹதீஸு க்கும் உட்பட்டு அமைந்தவற்றை யார் மூலமாகப் பெற்றாலும், அதனை இமாம் அபூஹனீ∴பா (ரஹ்) அவர்கள் மூலமாகவோ அல்லது இமாம் மாலிக் அவர்கள் மூலமாகவோ அல்லது இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் மூலமாகவோ அல்லது ஷா∴பிஈ அவர்கள் மூலமாகவோ, ஆக யார் மூலமாகக் கிடைத்தாலும், அவை யாவும் குர்ஆன் மற்றும் ஹதீஸு களின் ஒளியில் வார்த்தெடுக்கப்பட்டதா என்பதை அறிந்து, இவர்களில் எவர் மூலமாக அது கிடைத்தாலும் அதனைப் பின்பற்ற வேண்டும்.

இதனைப் போலவே, மாறக் கூடிய காலச் சூழ்நிலைகளின் காரணமாக, நேர்மையாக மார்க்கத் தீர்ப்புகளை ஆராய்ந்து மக்களுக்கு வழங்கக் கூடிய அளவுக்கு தகுதியான, நேர்மைமிக்கவர்களுக்காக இந்த ஃபிக்ஹு த் துறையின் கதவுகள் வருங்காலத்தில் எப்பொழுதும் திறந்தே வைக்கப்பட்டுள்ளது.

ஏனவே, காலச் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு மாறக் கூடிய சில மார்க்கத் தீர்ப்புக்கள் குர்ஆன் மற்றும் ஹதீஸு க்கு முரணில்லாமல் இருக்கும் பொழுது, அவற்றை மறுதலிக்காமல் ஏற்றுக் கொள்வதே, இந்த சமுதாயம் பிளவுபடாமல் ஒரே சமுதாயமாக இருக்கும். ஆதுவல்லாமல், எங்களது இமாம் கூறிவிட்டார் எனவே, நாங்கள் அதனைத் தவிர வேறு எதனையும் பின்பற்ற மாட்டோம் என்று வாதிடுவது மார்க்கத்தில் பிரிவினையையே உண்டாக்கும் என்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்வதோடு, இந்தப் பிரிவினைகள் தடுக்கப்படுவதற்கு, நாம் குர்ஆன் மற்றும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நடைமுறைகள் தான் நம்முடைய மார்க்கத்தின் அடிப்படை என்ற கருத்துக்கு வர வேண்டும்.

### சுன்னாவிற்குக் கீழ்படிவதும் மற்றும் அதனை மறுக்கும் அற்பமான காரணங்களும்!

நிச்சயமாக, நம்முடைய மார்க்கத்தைப் பொறுத்தவரை அனைத்துக் கட்டளைகளும் ஒரே மாதிரியான வகைகளைக் கொண்டவைகள் அல்ல. அந்தக் கட்டளைகளில் சில முக்கியமான அடிப்படைக் கடமைகளாகவும், இன்னும் சில முக்கியமல்லாத சாதாரண கட்டளைகளைக் கொண்டவைகளாகும். இதில் முதல் தரமான அடிப்படைக் கடமைகளை மறந்து விட்டு அவற்றை சாதாரண கடமைகள் போல ஆக்கி விட்டு, அவற்றைத் தங்களது பிரிவினைக்கு முக்கிய காரணியாகவும் ஆக்கி வைத்திருக்கின்றார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் வழங்கியிருக்கின்ற கட்டளைகளைப் பொறுத்தவரை, சில முக்கியமானதாக இருக்கலாம், சில முக்கியமற்றதாக சாதாரணமாக இருக்கலாம், இருப்பினும் அவை அனைத்தையும் ஒரே தரத்தில் பின்பற்றுவது தான் ஒவ்வொரு முஸ்லிமையும் கட்டுப்படுத்துகின்றவையாகும் என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் தங்களது எண்ணத்தில் பதிய வைத்துக் கொள்வது நல்லது. முஹம்மது (ஸல்) அவர்களது நடைமுறைகளில் எதுவும் எந்தவிதக் குறிக்கோள்களுமின்றி வீணுக்காகச் செயல்படத்தப்படவில்லை. முஹம்மது (ஸல்) அவர்களின் சுன்னத்தில் ஒன்றை எற்றுக் கொண்டு, இன்னொன்றை விட்டு விடுவது அவர்களுக்கு நாம் கொடுக்கும் உண்மையான மரியாதை அதுவாக இருக்காது. அதாவது அல்லாஹ்வையும், அவனது தூதர் (ஸல்) அவர்களையும் ஏற்றுக் கொண்டு அவற்றைப் பின்பற்றுவதிலிருந்து ஒரு முஸ்லிமுக்கு, இவ்வாறான தவறான எண்ணங்கள் நிச்சயமாக பீடிக்க முடியாது. நுமது மார்க்கச் சட்டப்படி அனைத்து வித சுன்னத்துக்களையும் பேணி நடப்பது தவிர்க்க முடியாததொரு கடமையாக இருக்கின்றது.

### சுன்னாவிற்குக் கீழ்படிவது, முஹம்மது (ஸல்) அவர்கள் மீது உண்மையான அன்பு கொள்வதாகும்.

முஹம்மது (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்வது என்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீது தவிர்க்க முடியாத, ஈமானின் ஒரு அங்கமாக இருக்கின்றது. இதைப் பற்றி இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எந்தவொரு முஸ்லிமும் உண்மையான முஸ்லிமாக முடியாது, எதுவரை எனில் அவரது மக்களை விட, அவரது பெற்றோர்களை விட, இன்னும் மற்ற அனைத்தையும் விட, என் மீது அன்பு கொள்ளாத வரை.. .. .. என்று கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

ஒரு முறை நபித்தோழர் ஒருவர், முஹம்மது (ஸல்) அவர்களை அனுகி. நான் என்னுடைய உயிரை விடவம், என்னுடைய செல்வத்தை விடவும், என்னுடைய குடும்பத்தை விடவும் நான் உங்களை அதிகம் நேசிக்கின்றேன். நுான் வீட்டில் என்னுடைய குடும்பத்தவர்களுடன் இருக்கும் பொழுது,

உங்களைக் காணாது நிம்மதியிழந்து, உங்களை ஒரு பார்வை பார்த்து விடத் துடித்தவனாக உங்களைக் காண ஓடி வந்து விடுகின்றேன், ஆனால் என்னுடைய மரணத்தையும், உங்களது மரணத்தையும் நான் நினைத்து விட்டேனென்றால், நீங்கள் அந்தச் சுவனச் சோலைகளில் அந்த நபிமார்களுடன் இருந்து கொண்டிருப்பீர்கள், நானோ - என்னை சுவனத்தினுள் அனுமதிக்கப்பட்டாலும், உங்களை என்னால் அனுக முடியாத அளவுக்கு என் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் நீங்கள் இருப்பீர்களே என நினைத்துத் தான் நான் மிகவும் கவலை கொள்கின்றேன் என்று அந்த நபித்தோழர் சொல்லி முடித்தார். இந்த நேரத்தில் இறைவன் இந்தத் திருவசனத்தை அந்தத் நபித்தோழரின் பொருட்டு இறக்கி வைத்தான் :

யார் அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்களோ அவர்கள் அல்லாஹ்வின் அருளைப் பெற்ற நபிமார்கள், ஸித்தீகீன்கள் (சத்தியவான்கள்) ஷு ஹதாக்கள் (உயிர்த்தியாகிகள்) ஸாலிஹீன்கள் (நற்கருமங்களுடையவர்கள்) ஆகியவர்களுடன் இருப்பார்கள் - இவர்கள் தாம் மிக்க அழகான தோழர்கள் ஆவார்கள். (4:69)

அல்லாஹ் இந்த வசனத்தை ஒரு நபித்தோழர் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் காட்டிய அன்பை வைத்து அருளியிருக்கின்ற நோக்கம் என்னவென்றால், நாம் அந்த மறுமையில் சொர்க்கச் சோலையில் நபிமார்களுடனும், ஷு ஹதாக்களுடனும் இருக்க வேண்டுமென்று விரும்பினால், முஹம்மது (ஸல்) அவர்கள் மீது கண்டிப்பாக அன்பு செலுத்த வேண்டியது நம்மீது உள்ள அடிப்படைக் கடமையாக இருக்கின்றது. நுபி (ஸல்) அவர்களுடன் வாழ்ந்த அவர்களது தோழர்கள் எந்தளவு அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் நடந்து, வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை நாம் ஆராயும் பொழுது தான், முஹம்மது (ஸல்) அவர்கள் மீது எவந்தவு அன்பு செலுத்தியிருக்கின்றார்கள் என்பது நமக்குப் புலப்படும். ஆவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு வார்த்தையையும் உன்னிப்பாகக் கேட்டார்கள், அவரது ஒவ்வொரு அசைவிலும் எந்தளவு கவனம் செலுத்தி இருக்கின்றார்கள், தாங்கள் கேட்டதையும் பார்த்ததையும் எந்தளவு வாய்மையுடன் பின்பற்றி இருக்கின்றார்கள் என்பதும் நமக்குத் தெரியும். நபித்தோழர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு நிமிட வாழ்வையும் எந்தளவு அவதானித்திருக்கின்றார்கள் என்றால், அவர் எவ்வாறு படுத்துத் தூங்கினார், எழுந்தார், எப்படி உணவு உண்டார், நீரருந்தினார், எவ்வாறு பழகினார், எவ்வாறு புன்னகைத்தார், எவ்வாறு சிரித்தார், எவ்வாறு கை கொடுத்தார், வாழ்த்தும் பொழுது எந்த விதமாக வாழ்த்தினார், எவ்வாறு தொழுதார், எவ்வாறு நோன்பு நோற்றார் என்றும், தான் ஒரு அரசின் தலைமை நிர்வாகியாகி இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் எவ்வாறு சொந்த மற்றும் பொது அலுவல்களில் நடந்து கொண்டார்? ஏன்ற அனைத்தையும் அவர்கள் கண்ணும் கருத்துமாக அறிந்து, அவற்றைத் தங்கள் வாழ்விலே பின்பற்றினார்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் தங்களுடைய வாழ்விலே அவற்றை அச்சொட்டாக வாழ்ந்து காட்டியதன் மூலம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது எந்தளவு அன்பு வைத்திருக்கின்றோம் என்பதை பின்வரும் சமுதாயத்திற்கு, ஒரு நற்சான்றாக விட்டு விட்டுச் சென்றுள்ளார்கள். யுாராவது ஒருவர் நான் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை அன்பு கொள்கின்றேன் என்று கூறுவாகில், அந்த அன்பானது அவருக்கு முழுமையாயகக் கட்டுப்படுவதில் தான் அடங்கி இருக்கின்றது. முழுமையாயகக் கீழ்ப்படிவதில் தான் அடங்கியிருக்கின்றது. இதுவல்லாமல், தூதர் (ஸல்) அவர்களுடைய சுன்னாவுக்குக் கட்டுப்படாமல் நான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது அன்பு வைத்திருக்கின்றேன் என்று கூறுவது என்பது ஒரு மிகப் பெரிய மோசடியாகும். ஆந்த அன்பானது பொய்யானதும், அவன் விட்டு விட்ட அந்த சுன்னத்தானது இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குக் கீழ்படிவதினின்றும் அந்த நபரைத் தடுத்தும் விடுகின்றது, இந்த வகையான அன்பானது அவனுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு எவ்வாறு கட்டுப்படுவது என்பது என்பதை அவனுக்குக்

கற்றுத் தரவில்லை என்பதும், அவனது அந்த அன்பு ஒரு நயவஞ்சகத் தன்மையும், பிறருக்குக் காண்பிக்க வேண்டும் என்பதற்காகவுமே இருக்கும், மேலும் இந்த வகை அன்பானது இறைத்தூதர் (ஸல்) அவர்களுடைய சுன்னாவுக்கு அவனை நெருக்கி வைப்பதில்லை, சுருக்கமாகச் சொன்னால் சுன்னாவை அவமதிக்கும் போக்கையும், அதனை எதிர்க்கும் போக்கையும் தான் அவனில் அது உண்டாக்கி விட்டிருக்கும். இதை இப்படி ஒரு வார்த்தைகளால் கவி. இக்பால் அவர்கள் கூறுகின்றார்கள் :

முஸ்தபா (ஸல்) அவர்களுடைய நெருக்கத்தை விரும்பு, அல்லாஹ் தேர்ந்தெடுத்த அந்த தூதருக்கு சொல்லாலும் செயலாலும் கட்டுப்படுங்கள், அவர் தான் இந்த மார்க்கத்திற்கு முன்மாதிரியாக இருக்கின்றார், இந்த அடிப்படையில் இறைத்தூதர் (ஸல்) அவர்களை நீங்கள் அணுகவில்லை என்றால், உங்களது முழு வாழ்க்கையும் யாரைப் போல் அமைந்து விடும் என்றால், எவனது வாழ்நாள் முழுவதும் இறைத்தூதர் (ஸல்) அவர்களை எதிர்ப்பதிலேயே கழிந்ததோ, அத்தகைய அபுலஹப் போல ஆகி விடும்.

## ஆதாரமற்ற மற்றும் ஆதாரமுள்ள ஹதீஸ்களைப் பின்பற்றுவது :

தெளிவான ஹதீஸ்களுடன், பொய்யான ஹதீஸ்களும் கலந்து விட்டிருக்கின்ற காரணத்தால், அதனை இனம் பிரிக்கும் அளவுக்கு அதற்கான கல்வி ஞானம் இல்லாத காரணத்தால், ஹதீஸ்களை என்னால் பின்பற்ற இயலாது, அதனைப் பின்பற்றுவதிலிருந்து நான் விலகி இருக்கவே விரும்புகின்றேன் என்று சிலர் கூறிக் கொண்டு, முஹம்மது (ஸல்) அவர்களுடைய சுன்னாவிற்குக் கட்டுப்படாமல் அவற்றைப் புறக்கணித்துக் கொண்டு இருப்பதை நாம் காண முடிகின்றது. இந்த இவர்களது பிடிவாதத்தை விளக்க வேண்டுமென்றால் : ஒரு மனிதன் நோய்வாய்ப்பட்டு விட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள், அவனுக்கு மருந்துகள் தேவைப்படுகின்றது. இன்று உண்மையில் மருந்துக் கடைகளில் உண்மையான மற்றும் போலி மருந்துகளும் விற்கப்படுகின்றதெனில், போலியைத் தவிர்த்து விட்டு நல்ல மருந்துகளை வாங்குவதற்கு நாம் எவ்வாறு அதில் பரிச்சயப்பட்ட நபரைத் தேடி அவரது துணையை நாம் பெற்றுக் கொள்வதில் எதுவும் நம்மைத் தடுத்து விடாது என்பது நடைமுறை உண்மையாகும். தனக்குரிய அந்த அசலான மருந்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருவன் விரும்புவானா அல்லது அசலும் போலியும் கலந்திருக்கின்றது. எனவே நான் எந்த மருந்தையும் வாங்கப் போவதில்லை யாருடைய துணையையும் தேடப் போவதில்லை என்று கூறி சாவை எதிர்கொள்வானா? இன்றைக்கு கடவுளே இல்லை என்ற கொள்கையும், நன்மைகளும் தீமைகளும் நம்மைச் சுற்றி இருந்து கொண்டிருக்கும்பொழுது, நம்முடைய இந்த நிலைப்பாடு இத்தகைய தீமைகளில் நாம் ஈடுபட்டு விடுவதிலிருந்து நம்மைத் தடுத்து விடாது. எனவே ஆதாரமான ஹதீஸ்களும், ஆதாரமற்ற ஹதீஸ்களும் கலந்து இருக்கின்றது என்ற காரணத்தைக் கூறி நான் சுன்னாவைப் பின்பற்ற மாட்டேன் என்று கூறுவது, சுன்னாவை அவமிதிக்கும்செயலாகும். இந்த உலக வாழ்க்கையில் நமக்கு எது நல்லது எது கெட்டது என்று நாம் தேர்ந்தெடுத்து, தேர்ந்தெடுத்து அனுபவிக்கின்றோமோ அது போல சுன்னாவையும் நாம் எது ஆதாரமுள்ளது எது ஆதராமற்றது என்று ஆய்வு செய்து, அல்லது அதற்கென பயிற்சி பெற்ற உலமாக்களின் துணை கொண்டு சுன்னாவைப் பின்பற்றுவதும், அந்த சுன்னாவிற்குக் கட்டுப்பட்டு தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதும் தான் ஒரு முஸ்லிமின் மீது உள்ள அடிப்படைக் கடமையாகும். சுன்னாவைத் தேர்ந்தெடுக்கின்ற விசயத்தில் எது ஆதாரமற்றது என்று தெரிய வருகின்றதோ அதனை அறிந்த மாத்திரத்திலேயே உதறித் தள்ளிவிடுவதும் ஒரு உண்மையான முஸ்லிமின் மீதுள்ள கடமையுமாகும்.

## பித்அத்துக்கள் அல்லது நூதனச் செயல்கள்

இஸ்லாத்தில் நுழைக்கப்படும் நூதனச் செயல்கள் யாவும், இஸ்லாத்தின் அடிப்படையைத் தகர்த்தெறிபவைகளாக உள்ளன. இஸ்லாத்தைப் பொறுத்தவரை தீமைகள் இரண்டு வகைப்படும். ஒன்று பல தெய்வ வணக்க வழிபாடு அல்லது இறைவனுக்கு இணை வைத்தல் மற்றது சமூகத்தீமைகள் மற்றும் இஸ்லாத்தில் நுழைக்கப்படும் நூதனச் செயல்கள். இவற்றை விட்டொழிக்காதவரை எவருடைய நற்செயல்களும் இறைவனிடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இதில் சமூகத்தீமைகள் மற்றும் நூதனச் செயல்களை இறைவனிடம் மன்றாடி மன்னிக்கக் கோரினால், இறைவன் மன்னித்து விடுகின்றான். ஆனால் இந்த இறைவனுக்கு இணைவைக்கக் கூடிய செயல்களைப் பொறுத்தவரை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இது பற்றிக் கூறுகின்றார்கள் : இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு திரை விழும் வரைக்கும் மனிதன் செய்கின்ற பாவங்களை இறைவன் மன்னித்து விடுகின்றான். ஒரு நபித்தோழர் கேட்டார், திரை என்றால் என்ன? முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள் : ஒரு மனிதன் இணைவைக்கும் நிலையில் மரணமடைவது. (முஸ்னத் அஹ்மது).

இஸ்லாத்தில் புதினங்களைப் புகுத்துபவர்கள் பற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்கள்: இஸ்லாத்தில் புதினங்களைப் புகுத்துபவர்கள் பாவப் பிராயச்சித்தம் தேடாத வரை இறைவன் அவருடைய பாவங்களை மன்னிக்க மாட்டான். (தபரானி).

இஸ்லாத்தில் நூதனங்களையும், புதினங்களையும் புகுத்துபவர்களுடைய நிலை எவ்வாறு இருக்கின்றதெனில், ஒருவன் இரவு பகலாக உழைத்து, தன்னுடைய உழைப்புக்கு எந்தவித ஊதியத்தையும் பெறாமல், தன்னுடைய உழைப்பையும், நேரத்தையும் இழந்ததைத் தவிர வேறொன்றையும் அவன் பெற்றுக் கொள்ளாததற்குச் சமமாகும்.

இன்று இஸ்லாத்தில் நடைமுறையில் பின்பற்றப்பட்டுக் கொண்டிருக்கும் அத்தனை நூதனச் செயல்களும், இறைவனுடைய நெருக்கத்தையும், அவனிடம் நன்மைகளையும் பெற்றுத் தரும் என்ற நோக்கில் தான் பின்பற்றப்பட்டு வருகின்றது, ஆனால் இஸ்லாத்தில் அல்லது சுன்னத்தில் இதற்கு எந்தவித அனுமதியுமில்லை. ஏனெனில் இத்தகைய நூதனங்களை முஹம்மது (ஸல்) அவர்கள் தங்களது வாழ்நாளில் பின்பற்றவுமில்லை அல்லது இவ்வாறு செய்ய அனுமதிக்கவும் இல்லை அல்லது அவ்வாறு அவர்கள் செய்திருக்கவுமில்லை, இத்தகைய செயல்களை அல்லாஹ்வினிடத்தில் எந்த அங்கீகாரமும் இல்லை (புகாரி, முஸ்லிம்).

மறுமைநாளிலே கவ்தர் தடாகத்தின் அருகில் நின்று கொண்டிருக்கும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தன்னுடைய உம்மத்தவர்களின் தாகத்தைத் தீர்ப்பதற்காக அந்த தடாகத்து நீரை வழங்குவார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள், தன்னை நோக்கி வருபவர்கள் தன்னுடைய உம்மத்தவர்கள் என்பதை அறிந்து கொள்வார்கள், ஆனால், வானவர்கள் - மலக்குகள் கூறுவார்கள், இறைத்தூதர் அவர்களே! நீங்கள் வந்தபின்பு இவர்கள் தீனுல் இஸ்லாத்தில் புதினங்களைப் புகுத்தியவர்கள் என்று கூறி, இறைத்தூதர் (ஸல்) அவர்களை நோக்கி வருபவர்களை வானவர்கள் தடுப்பார்கள். அப்பொழுது, முஹம்மது (ஸல்) அவர்களும் அவர்களை விரட்டி விட்டு, நீங்கள் தானே என்னுடைய மார்க்கத்தில் புதினங்களைப் புகுத்தியவர்கள் என்றும் கூறுவார்கள். (புகாரி, முஸ்லிம்).

எனவே சகோதரர்களே! நம்முடைய தொழுகையும், அமல்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காட்டித் தந்த வழிமுறைப்படி அமையவில்லை என்றால், அதுவும் ஒரு வழிகேடும், தவறானதும் ஆகும். விழாக்கள் போன்று அமைக்கப்பட்டு புனிதப் பெயர்களை உச்சரிப்பது, தஸ்பீஹ் செய்வது இவை

போன்றவைகள் இஸ்லாத்தில் புகுத்தப்பட்ட நூதனங்களில் சில வகைகளாகும். இவைகளினால் எந்தவித ஆதாயமும் கிடைக்கப் போவதில்லை. மாறாக, இத்தகையோரது நல்லமல்கள், தானங்கள், அன்பளிப்புகள் ஆகிய யாவும் சுன்னாவின் அடிப்படையில் அமையவில்லை என்றால், அவை யாவும் விழலுக்கு இறைத்த நீராகி விடும் என்பதில் ஐயமில்லை. நாம் செய்யக் கூடிய அமல்கள் யாவும் குர்ஆனினாலோ அல்லது சுன்னாவினாலோ அங்கீகரிக்கபட்டதொன்றாக இல்லையெனில், அவை அத்தனையும் நரக நெருப்பிற்கு இட்டுச் செல்லக் கூடியவைகளாகும் என்பதிலும், அதற்காகச் செலவழித்த நம்முடைய நேரங்கள், உழைப்புகள் யாவும் வீணேயாகும்.

அவை (தவறான காரியங்களை நல்லவை என கருதி) செயல்பட்டவையும் (அதிலேயே) உறுதியாக நின்றவையுமாகும். கொழுந்து விட்டெறியும் நெருப்பில் அவை புகும். (88:3-4)

இனி சாதாரண மக்களும் இதனைப் பற்றி எச்சரிக்கையாக இருந்து கொள்ளும் பொருட்டு, வழிகேட்டுக்கு இட்டுச் செல்லக் கூடிய சில நூதனங்களைப் பற்றி இனி ஆராய்வோம். இதன் மூலம் அவர்களும் நேர்வழியைப் பெற்றுக் கொள்ளக் கூடும்.

## புதினங்கள் அல்லது நூதனங்களின் வகைகள்

முஸ்லிம்களில் இருக்கின்ற பல்வேறு பிரிவினர் தாங்கள் பின்பற்றிக் கொண்டிருக்கும் சுன்னத்தான விஷயங்களில் மிகவும் பலவீனமான சுன்னத்துக்களையே, தங்களது மார்க்கக் கடமையாகப் பின்பற்றி வருகின்றார்கள். மேலும் தாங்கள் பின்பற்றிக் கொண்டிருக்கும் இந்த நூதனச் செயல்களை சட்டப்படி அங்கீகாரம் பெற்றுள்ளது என்ற தகுதியைக் கொடுப்பதுடன், தங்களது நூதனச் செயல்களை நல்ல நூதனச் செயல்கள் என்றும், கெட்ட நூதனச் செயல்கள் என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றனர். இந்த வகையில், குர்ஆனைப் பற்றியும், ஹதீஸ¥ களைப் பற்றியும் சரியான விளக்கமில்லாத மக்களிடம் இந்த கெட்ட நூதனச் செயல்கள் தான் பாவமானது என்றும், நல்ல நூதனச் செயல்கள் மார்க்கச் சட்டங்களினால் அனுமதிக்கப்பட்டது என்றும், அதில் எந்தப் பாவமும் இல்லை என்றும், இதனைப் பின்பற்றுவதனால் நன்மைகள் கிடைக்கும் என்றும் அவர்கள் விளக்கம் கொடுக்கின்றார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள், அனைத்து நூதனச் செயல்களும் வழிகேடுகளே! (முஸ்லிம்) என்று கூறியிருக்கின்றார்கள் என்பது மட்டுமல்ல நமக்கு அது பற்றி எச்சரிக்கையும் செய்திருக்கின்றார்கள். உதாரணமாக, மஃக்ரிப் சுன்னத் தொழுகையில் 2 ரக்அத்துகளுக்குப் பதிலாக 3 ரக்அத்துக்கள் தொழுவதும், லுஹர் சுன்னத்தான 4 ரக்அத்துக்களுக்குப் பதிலாக 5 ரக்அத்துக்கள் தொழுவதும், நல்ல அதிகப்படியான அமல்களாகக் கருதப்பட்டாலும், அவை மார்க்கத்தில் நுழைக்கப்பட்ட, மார்க்கத்தைத் திருத்தி அமைக்கப்பட்ட எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.

இவ்வாறு மார்க்கத்தில் நல்லவைகள் என்று பின்பற்றக் கூடிய அனைத்து பித்அத்துக்கள் நூதனங்கள் யாவும், இஸ்லாத்தில் நுழைக்கப்படுகின்ற அனைத்துத் தீமைகளுக்கும் பின்புறக் கதவைத் திறந்து விட்டதாகி விடுகின்றது. இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற அமல்களின் இடத்தை, இந்த புதிய நூதனங்கள் பிடித்துக் கொண்டு, இவைகள் தான் இஸ்லாத்தின் உண்மையான அமல்கள் என்ற தாக்கத்தை மக்கள் மனதில் ஏற்படுத்தி விடுகின்றன. மேலும்,இந்த நூதனங்களைச் செய்வதன் காரணமாக மார்க்கத்தில் - ஆன்மீக உயர்வை அடைந்து கொள்வதற்கும் மற்றும் இம்மை மற்றும் மறுமையின் நற்பேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் உகந்ததொரு வழிமுறை என்றும் மக்கள் கருதி, எதனைப் பின்பற்றினால் இறைவனின் அருளாசிகள் கிடைக்குமோ அவற்றை விட்டு விட்டு இந்தப் போலிகளின் பின்னால் சென்று விடுகின்றார்கள். இத்தகைய போலி வழிபாடுகள் பலவகைப்படும் :

உதாராணமாக - முரீது வாங்குதல் (பீர் முரீது) - ஒரு ஆன்மீகத் தலைவரிடன் மாணாக்கராகச் சேர்ந்து பின்பு அவரைப் போலவே உயர் நிலையை அடைவதற்கு ஆன்மீகப் பயிற்சி எடுத்தல், இதைப் போலவே கிலாபத், தரீகத், சுலூக், நிஸாபத், இஜாஸத், ஃபைஸ், கரம், ஜலால், ஆஸ்தானா, தர்கா வழிபாடுகள் இன்னும் பல.. .. நூற்றுக்கணக்கான வழிபாடுகள் இன்று முஸ்லிம்களிடையே நிலவி வருகின்றன, இவை தங்களது ஷேக்மார்களைக் கவுரவிக்கின்றோம் என்ற பெயரில், இதனை இஸ்லாத்தில் இருக்கின்றதொரு வழிபாடுகளாகவே அவர்கள் மிகவும் சிரத்தையுடன் செய்து வருகின்றார்கள் குறிப்பாக – முராக்கிபா (ஆழ்நிலை தியானம்), முஜாஹிதா (கடின முயற்சி) ரியாஸத் (ஆன்மீக முக்திக்காக அதிகப்படியான வணக்கங்கள்), ஜில்லா காஸி ( 40 நாட்கள் அவுலியாக்களின் கல்லறையில்தனித்திருத்தல்), கஷ்ஃபுல் குபூர் (மண்ணறையில் அடங்கியுள்ளவர்களின் ஆவிகளுடன் தொடர்பு கொள்ளுதல்) இன்னும் இது போன்ற சபோச்சா, சுமக், ஜதவா ( மண்ணறைகளுக்கு காணிக்கை செலுத்துதல்), கூன்தினம், ஜன்டா, சமா, ரக்ஸ், ஹால், வஜ்த், கைஃபிய்யத், மேலே உள்ள அனைத்து பழக்க வழக்கங்களும் வெறுக்கப்பட்ட மடமைத்தனமான கலாச்சாரங்களிலிருந்து கடன் வாங்கி முஸ்லிம்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது. இது மட்டுமல்ல மண்ணறைகளுக்குத் தினமும் சென்று வருவது ஒரு பழக்கமாக-வழிபாடாகவே இன்று நம்மிடையே இருந்து வருகின்றது. மேலும் சஜ்ஜதா நஸீன் (ஆன்மீக வாரிசு), காத்தி நஸீன், மக்தூம், ஜாரூப் காஸ், தர்வேஷ், முஜாவிர் இவை யாவும் முஸ்லிம்களால் கொண்டாடப்படும் சிறப்பு விழாத் தினங்களாகும். இதைப் போலவே ஃபைதா, குல், தஷ்வான், ஜாலிஸ்வான், கியார்வீன் ஷரீஃப், நியாஸ் ஷரீஃப், உர்ஸ் ஷரீஃப், மீலாது ஷரீஃப், கத்தமே கஜகான், குரான்-கானி, திக்ரே முல்ஃபஸாத், கராமத் இவைகளும் முஸ்லிம்களால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வைபவங்களாகும்.

மேற்கண்ட இவையாவும் இஸ்லாத்தில் இருக்கின்ற அடிப்படைக் கடமைகளான தொழுகை, நோன்பு, ஜகாத், போன்ற அமல்களைப் போல கடமையாக்கப்பட்டதொரு கடமையாகக் கருதி நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். மேலும், தனித்தனியாகச் செய்ய வேண்டிய அமல்களான திக்ர், குர்ஆன் திலாவத், பிரார்த்தனை போன்றவைகளை, கூட்டாக அமர்ந்து செய்வதும் இஸ்லாத்தில் இல்லாத இவர்களாகக் கண்டுபிடித்ததொரு நூதனச் செயல்களாகும்.

ஒவ்வொரு பர்ளுத்தொழுகைக்குப் பின்பும் கூட்டாக அமர்ந்து திக்ர் களை ஓதுவது

திக்ர் அமர்வுகளை ஏற்படுத்தி, குறிப்பிட்ட ராகத்தில் தொனியில் அவற்றை ஓதுவது

திக்ர் களை ஓதும் போது அல்லாஹ்வினுடைய பெயர்கள் வருகின்ற இடங்களில் தொணியை ஏற்றி இறக்கிப் பாடுவது

திக்ர் மஜ்லிஸ் என்ற ஒன்றை உருவாக்கி, ஆயாத்தே கரீமா என்ற அமர்வில் 1 லிருந்து 50 ஆயிரம் தடவை திக்ர்-களை ஓதுவது

முஹர்ரம் முதல் நாள் என்று திக்ர் அமர்வுகளை ஏற்படுத்துவது

சஃபர் மாதத்தை ஒரு பீடை மிக்க மாதமாகக் கருதி, அந்த மாதத்தின் முதல் புதன் கிழமையன்று மஃக்ரிப் மற்றும் இஷாத் தொழுகைக்கு இடையே திக்ர் மஜ்லிஸ் ஏற்பாடு செய்து, திக்ர் செய்வது

ரஜப் மாதம் 27 ஆம் நாளன்று மிஃராஜ் இரவு என்று ஒரு இரவை இவர்களாகவே ஏற்படுத்தி, அந்த நாளில் திக்ர் அமர்வுக்கு ஏற்பாடு செய்து திக்ர்களை ஓதுவது, பயான் செய்வது,

ஷஃபான் 15 ம் நாளன்று திக்ர் அமர்வுகளை ஏற்பாடு செய்வது

செய்யது அப்துல் காதிர் ஜெய்லானி (ரஹ்) அவர்களது பெயரை திக்ர் செய்வதற்கு அமர்வுகள் ஏற்பாடு செய்வது

தினமும் தொழுகையின் பொழுது அப்துல் காதிர் ஜெய்லானி (ரஹ்) அவர்களது அற்புதங்களை நினைவு கூறி, திக்ர் செய்வது

இதைப் போல் துஆ மஜ்லிஸ்கள் ஏற்பாடு செய்வது, அதாவது துஆ கன்ஸு ல் அரூஸ், துஆ ஜமீலா, துஆ சிரியானி, துஆ அகாஸா, துஆ ஹிஸ்புல் பாஹர், துஆ அமன், துஆ ஏ ஹபீப், அஹத் நாமா, துரூதே தாஜ், துரூதே மாஹி, துரூதே துப்கீனா, துரூதே அக்பர், ஹஃப்த் ஹெய்கல் ஷரீஃப், ஜாஹல் காப், கதா முஅஸ்ஸம் வ முஹர்ரம், மற்றும் ஷஷ் குஃபால் இன்னும் பல.. .. இந்த செயல்பாடுகளை விளக்கக் கூடிய புத்தகங்கள் மிகக் குறைந்த விலையில் எங்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. இத்தகைய புத்தகங்களை மக்கள் மகிவும் விரும்பி வாங்கி, பத்திரமாக பாதுகாப்பாக தங்கள் இல்லங்களில் வைத்திருப்பதோடு தங்களுக்கு இடர்கள், துன்பங்கள் ஏற்படும் பொழுதெல்லாம், இவற்றைப் பயன்படுத்தி திக்ர் செய்து துஆக்களைக் கேட்கக் கூடியவர்களாக நம் முஸ்லிம்கள் இருந்த கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இவை யாவும் எத்தகைய வழிகேடுகள் என்பதைப் பற்றி அவர்கள் அறியாத மக்களாக இதனைச் செய்து கொண்டிருப்பது தான் மிகவும் வேதனையான விஷயமாகும்.

இதைப் போலவே இன்னும் நம் வாழ்க்கையில் நிகழக் கூடிய சில சம்பவங்களான குழந்தைப் பிறப்பு, திருமணம், நோய், மரணம், அடக்கம், கப்றுகளை ஜியாரத் செய்வது, இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய அவர்களுக்கு கத்தம், பாத்திஹா ஓதி துஆச் செய்தல், இதன் மூலம் இறந்தவர்களுக்கு நன்மைகளை அதிகப்படுத்துதல் போன்ற காரணங்களுக்காக நாம் விசேஷமான முறையில் குர்ஆன் ஓததல், கத்தம்-பாத்திஹா என பல்வேறு வைபவங்களை ஏற்பாடு செய்து நடத்துகின்றோம். மூார்க்கத்தில் இத்தகைய நவீனங்களைப் புகுத்துவதன் மூலம், உங்களது தொழுகைகள், தான தர்மங்கள், உம்ரா, ஹஜ், நேர்ச்சைகள் ஆகியவற்றில் கிடைக்கக் கூடிய அத்தனை நன்மைகளை அழித்துக் கொள்கின்றீர்கள். மேலே நாம் சுட்டிக் காட்டியுள்ள மார்க்கத்திற்குப் புறம்பான செயல்கள் யாவும், நன்மையை ஈட்டித் தரும் என்ற நோக்கத்தில் தான் மக்களால் செய்யப்படுகின்றது, இருப்பினும் எளிமையான இஸ்லாமிய மார்க்கதத்தை புதினங்கள் நவீனங்கள், பித்அத்-கள் மூலம் சடங்கு ரீதியானதொரு மார்க்கமாக - மதமாக மக்கள் ஆக்கி விடுகின்றார்கள், இந்த நவீனங்கள் தான் உண்மையான இறைவனின் கட்டளைகளை மறக்கச் செய்து, இந்தப் போலிகளையே வணக்கமாக ஆக்கி வைத்து விடுகின்றது என்பதை இன்றும் நம் செயல்களே அதற்கான உதாரணங்களாகத் திகழ்கின்றன என்பதைப் பார்க்கின்றோம்.

இன்னும் படிப்பறிவில்லாத, இஸ்லாத்தைப் பற்றி அறியாத பாமரர்கள் இது தான் இஸ்லாம் என்று ஷேக் மார்கள் சொன்னதையும், உலமாக்கள் என்று சொல்லிக் கொண்டு திரிபவர்களது கட்டளைகளையும் ஏற்றுப் பின்பற்ற ஆரம்பித்து விடுகின்றார்கள். இந்தப் பாமரர்கள் வழிவழியாக தங்கள் மூதாதையர்களிடமிருந்து இந்தப் பழக்கத்தைப் பெற்றுக் கொண்டு வருகின்ற காரணத்தால், இந்தப் பழக்க வழக்கங்கள் இஸ்லாத்தில் உள்ளது தானா? அல்லது இஸ்லாத்தினால் அங்கீகரிக்கப்பட்டது தானா என்பது பற்றி ஆராய்ந்து பார்க்கும் மனநிலைக்கு அவர்கள் செல்வதில்லை. ஒவ்வொரு சமுதாயத்தினரிடமும் அவர்கள் பின்பற்றிக் கொண்டிருக்கும் இந்தப் பழக்கவழக்கங்கள் இஸ்லாத்தினால் அங்கீகரிக்கப்படாததொரு செயல்கள் எனக் கூறினால், அவர்கள் இவ்வாறு தான் பதிலைத் தருவார்கள் என்று குர்ஆன் குறிப்பிட்டுக் கூறுகின்றது :

(அப்போது அவர்கள்) "இல்லை! எங்கள் மூதாதையர் இவ்வாறே (வழிபாடு) செய்ய நாங்கள் கண்டோம்" என்று கூறினார்கள். (26:74)

இந்த வகையில் தான் இன்றும் நாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பிறந்த நாளை மீலாது தினமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இந்த மீலாது தினத்திற்கு குர்ஆனிலோ அல்லது நபிமொழிகளிலோ எந்தவித ஆதாரமும் இல்லை என்று தெரிந்த பின்பும், இது வழிவழியாக எங்கள் மூதாதையர்கள் காலத்திலிருந்தே வருகின்ற பழக்கத்தை இப்பொழுது நிறுத்த முடியுமா என்று கேட்கின்றார்கள். இவை தங்கள் முன்னோர்களை கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுகின்ற தக்லீத் என்று சொல்லக் கூடிய, இஸ்லாம் தடை செய்திருக்கின்றதொரு பழக்கமல்லவா? எந்தவொரு செயல்களாக இருந்தாலும், இது குர்ஆனினால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றதா? சுன்னாவினால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றதா? என்பதை ஆராய்ந்து தான் எந்தவொரு செயலையும் பின்பற்ற வேண்டும்.

## பெரியார்களுக்கு தங்களை அர்பணித்தல்

இன்று நம்முடைய சமூகத்தில் மனிதர்களைப்புனிதர்களாகக் கருதும் பழக்கம் இருந்து வருகின்றது. இத்தகைய போக்கு இஸ்லாமிய மார்க்கத்தில் சீரழிவுகளை ஏற்படுத்தி விடும் என்பதை அவ்வாறு செய்பவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. நல்லதொரு இறையடியாரை தங்களுடைய துணையாக வழிகாட்டியாக ஆக்கிக் கொள்வதில், அதில் விருப்பம் கொள்வதில் எந்தவிதத் தவறுமில்லை. ஆனால் அவர்கள் மீது கொண்டுள்ள அன்பானது, எந்தளவு மக்களை வழிகேட்டின் பக்கம் இழுத்துச் சென்று விடுகின்றதென்றால், அவர்கள் சொல்வது தான் வேதம், அவர்கள் தவறே செய்ய மாட்டார்கள் என்று எண்ணம் கொண்டு அவர்களுக்கு முற்றிலும் தங்களை அர்ப்பணித்து விடுவதைக் காண்கின்றோம். ஆந்தப் பெரியார்களது வாழ்க்கையிலே அன்றாடம் நிகழக் கூடிய சில நிகழ்வுகள், அற்புதங்களாக எடுக்கப்பட்டு அந்த அற்புதங்களுக்கு ஆன்மீகச் சாயம் பூசப்பட்டு, அந்த அற்புதங்கள் யாவும் அவரது ஆன்மீக பலத்தால் ஏற்பட்டது என்ற நம்பிக்கை மக்கிடையே உண்டாகி, அவரை ஒரு அவதார புருஷராகவே ஆக்கி விடுகின்றது. இன்று நடைமுறையில் நாம் காணக் கூடிய எண்ணற்ற பித்அத் - களுக்கு இம்மாதிரி நடைமுறைகளே காரணம் ஆகும்.

குறிப்பாக, சூபித்துவ சிந்தனை கொண்ட முஸ்லிம்கள் இந்தியாவில் முதன் முதலில் இஸ்லாத்தைப் பரப்ப முனைந்த பொழுது, இந்திய பக்கம் இசையின் மீது மிகவும் விருப்பம் கொண்டவர்களாக இருந்தார்கள். எனவே, அந்த இந்துக்களை இஸ்லாத்தின் பால் இழுப்பதற்கு சாமா அல்லது கவ்வாலிப் பாடல்களை உருவாக்கினார்கள். இன்று இதுவும் ஒரு இஸ்லாமிய நடைமுறை என்றளவில் பொதுவாக மக்களிடையே காணப்பட்டு வருகின்றது. இந்த நடைமுறைகள் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதற்கு பயனான ஒன்றாகக் கடந்த காலங்களில் இருந்திக்கின்றதல்லவா? எனவே, இப்பொழுது அதைப் பின்பற்றுவதில் என்ன தவறு இருக்கின்றது, அதைப் பின்பற்றலாமில்லையா? ஏன்ற கேள்வியைக் கேட்க முடியும். முதலில் நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், இது போன்ற கதைகள் எல்லாம் சூபித்துவ சிந்தனையாளர்களால் கற்பனை செய்யப்பட்ட காரணங்கள் என்பதையும், அவர்கள் எடுத்து வைக்கின்ற வாதங்களில் ஒரு சில நடைமுறைகள் உண்மையாகவும், இஸ்லாத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவும் கூடும். எனவே, அவர்கள் செய்கின்ற அனைத்தும் இஸ்லாம் என்று சொல்ல முடியாது. ஆவை யாவும் அல்லாஹ்வினாலும், இறைத்தூதர் (ஸல்) அவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டதொன்று என்றும் நாம் கருத முடியாது. அத்தகைய வழிமுறைகளை எவ்வளவு பெரிய ஷேக், சூபியாக்கள் செய்தாலும் சரியே! எதுவொன்றும் அல்லாஹ்வும், அவனது தூதர் (ஸல்) அவர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட செயலாக இருக்க வேண்டும்.

## மாறுபட்ட கருத்துகள்

தகுதியற்ற மார்க்க அறிஞர்கள் பித்அத்களைப் பொறுத்தவரை அவற்றின் பாரதுாரங்கள் பற்றி அதிகமாக சிரத்தை எடுத்துக் கொள்ளாமல் அவற்றை இலேசாகக் கருதி விடுகின்றார்கள், ஏனெனில் இவைகளைப் பற்றி மார்க்க அறிஞர்களிடைய பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்ற காரணமும் கூறி விடுவார்கள். இத்தகைய இவர்களது இந்த மதிப்பீடு, மார்க்கத்தில் பல்வேறு பித்அத் களை உருவாக்கக் காரணமாக அமைந்து விடுகின்றது. இவர்கள் கூறுவது போலவே, மார்க்க விசயங்களில் சில கருத்து வேறுபாடு கொண்ட அம்சங்கள் இருக்கத் தான் செய்கின்றன. அப்படி கருத்து வேறுபாடு கொள்பவர்கள் தங்கள் தங்கள் சார்பாக முஹம்மது (ஸல்) அவர்கள் பெயரால் அறிவிக்கப்படுகின்ற ஏதாவதொரு ஹதீஸை, அது சரியான ஆதாரங்களின் அடிப்படையில் திரட்ப்பட்ட ஹதீஸாகவோ அல்லது தரம் குறைந்த ஹதீஸாகவோ இருந்தாலும், அவைகளைப் பற்றி வாத விவாதங்கள் தேவையாயிருக்கின்றது என்று வைத்துக் கொண்டாலும், இரண்டு தரப்பாரும் ஏதாவது ஒரு ஹதீஸை தங்களது வாதங்களுக்குச் சார்பாக வைத்திருக்கின்றார்கள் என்பது தெளிவு. ஊதாரணமாக, தொழுகையில் அத்தஹிய்யாத்து இருப்பில் விரல் அசைப்பது, ருகூஉ சுஜு தில் இருந்து திரும்பும் பொழுது கையை உயர்த்துதல், சூரா ஃபாத்திஹா ஓதி முடித்த பின் சப்தமிட்ட ஆமீன் கூறுவது ஆகியவை பற்றி பல்வேறு மார்க்க அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்பது உண்மையாக இருந்தாலும், அவரவர்கள் தங்கள் தங்கள் வாதத்திற்கு ஏதாவது ஒரு ஹதீஸை ஆதாரமாகக் காட்டக் கூடியவர்களாக இருக்கின்றார்கள்

ஆனால் சுன்னாவினால் ஆதராமாகக் காட்டப்பட முடியாத, இன்றைய முஸ்லிம்களிடையே காணப்படும் பல்வேறு அனாச்சாரங்கள் பற்றிய நிலை யாது? ஏன்று சிந்திப்பபோமானால் அவைகள் சரியான ஆதாரங்களினடிப்படையில் அமைந்த ஹதீஸு களினாலோ, ஆதாரமற்ற ஹதீஸ்களினாலோ அல்லது புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்களினாலோ, இவற்றில் எதிலுமே ஆதராமாகக் காட்டப்பட முடியாதவைகளாக உள்ளன என்பதை நீங்கள் அறிய வருவீர்கள். ஆவையாவன : ரசம் ஃபாத்திஹா, ரஸம் குல், தஸ்வான், ஜாலிஸ்வான், கியார்வீன், குரான் கவானி, மீலாது, உர்ஸ், புர்ஸி, கவாலி, சந்தல்மாலி, ஜிராகான், கூன்தினம், ஜன்டாய், இன்னும் பல.. .. இவைகளெல்லாம் நபி (ஸல்) அவர்களது காலத்திலோ அவர்களுக்குப் பின்னால் வந்த ஸஹாபாக்கள் காலத்திலோ காணப்படாததொரு செயல்களாகும். இவைகளைப் பற்றி சுன்னாவின் விளக்கத்தை நாம் கொடுத்தால் இது எங்களுக்கு மனநிறைவைத் தருகின்றது, அதனால் தான் நாங்கள் இதைச் செய்கின்றோமே ஒழிய, மார்க்கத்தை அவமதிப்பதற்காகவோ அல்லது மார்கத்துடன் விளையாடுவதற்காகவோ நாங்கள் இதனைச் செய்யவில்லை என்று கூறுகின்றார்கள்.

## தெளிவான சுன்னாவைப் பற்றிய அறிவின்மை.

இறைத்துாதர் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்வதும், சொல்லுக்குக் கட்டுப்படுவதும் ஒவ்வொரு முஸ்லிமின் மீது அடிப்படைக் கடமையாக இருக்கின்றது. இந்த நிலையில் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்படுகின்ற பல்வேறு ஹதீஸ்களையும், அதன் தரங்களைப் பற்றிய தெளிவின்மை இல்லாதவர்களாகவும், அவற்றைப் பற்றி ஆய்வு செய்ய இயலாதவர்களாகவும், அவற்றைப் பற்றிய எந்தவித ஞானமில்லாமலும் அதனைப் பின்பற்றிக் கொண்டு வருவதை நாம் காணலாம். ஆனால் ஒரு சிலர் தான் முஹம்மது (ஸல்) அவர்களது பெயரைக் கொண்டு அறிவிக்கப்பட்ட இந்த ஹதீஸ் தரமானதா? அல்லது அவர்களது பெயரால் பொய்யாகப் புனைந்துரைக்கப்பட்டதா? என்பதை ஆராய்ந்து பின்பற்றக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். இந்த மாதிரியான அணுகுமுறை எல்லா மக்களிடமும்

காணப்படாததன் காரணமாகத் தான், பெரும்பாலான மக்கள் மார்க்கத்தின் பெயரால் கூறப்படும் அனைத்தையும், மார்க்கச் சட்டமாக எடுத்துக் கொண்டு, அதனைப் பற்றிய விழிப்புணர்வே இல்லாமல் பின்பற்றிக் கொண்டு வருவதை நாம் காணலாம். தங்களது இந்த நடைமுறையானது சுன்னாவுக்குப் புறம்பானது எனக் கண்டு கொண்ட உடனேயே, சிலர் தங்களது தவறைத் திருத்திக் கொண்டு, உடனே உண்மையான சுன்னாவின் பக்கம்திரும்பி விடுகின்றார்கள், தங்களது பழைய இஸ்லாத்திற்குப் புறம்பான செயல்களை விட்டொழித்து விடுகின்றார்கள். இது தான் ஒரு உண்மையான முஸ்லிமிற்கு இருக்க வேண்டிய சிறப்புப் பண்பாகும். சத்தியம் இது தான் என்று அறிந்த பின்பு, அசத்தியத்தில் நிலைத்திருக்காமல், எந்தவித விருப்பு வெறுப்புக்கும் இடங்கொடாமல், சத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதனைப் பின்பற்றுபவராகத் திகழ வேண்டும். எனவே, சத்தியத்தை தேடக் கூடிய ஒவ்வொருவருக்கும் நாம் கூறிக் கொள்வது என்னவென்றால், உங்கள் முன் ஒரு செயல் செய்யப்படுகின்றதென்றால், அந்தச் செயல் முஹம்மது (ஸல்) அவர்களின் சுன்னத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதா? என்பதை ஆய்வு மனப்பான்மையுடன் நோக்கி, அதன்படிச் செயல்பட வேண்டிக் கொள்கின்றோம். முஹம்மது (ஸல்) அவர்களது பெயரால் கூறப்படும் ஒவ்வொரு செயல்பாட்டைப் பற்றியும் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள் : என் பெயரால் எவன் ஒருவன் இட்டுக்கட்டுகின்றானோ, அவன் தன்னுடைய இருப்பிடத்தை நரகத்தில் ஆக்கிக் கொள்ளட்டும் (முஸ்லிம்), என்று கூறியுள்ளார்கள். எனவே, இதனைப் பற்றி எச்சரிக்கையைப் பெற்றுக் கொண்ட நாம், இது பற்றிய வழிப்புணர்வை சாதாரண பாமர மக்களிடத்திலும் ஏற்படுத்த வேண்டியது, ஒவ்வொரு விசயம் அறிந்த முஸ்லிமின் மீதும் கடமையாக இருக்கின்றது.

### சுன்னாவின் மீது சந்தேகம் கொள்ளுதலும், அதனை மறுத்தலும்.

இன்று துரதிருஷ்டவசமாக முஸ்லிம்களில் மிகச் சிலர் சுன்னாவையும், அதனைப் பின்பற்றுவதன் மதிப்பையும் மறுக்கின்றவர்களாக இருக்கின்றார்கள். இன்னும் சிலர் தாங்கள் பின்பற்றிக் கொண்டிருக்கும் நடைமுறைகள் உண்மையான சுன்னாதானா என்பதைப் பற்றி அறிய முற்படுவது, அவர்களைப் பற்றிய உண்மைகள் எங்கே வெளிவந்து விடுமோ என்ற எண்ணத்தில், சுன்னாவைப் பின்பற்றுவதன் அவசியத்தைப் பற்றி அறிந்து கொள்ள முற்படாமலேயே இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் சுன்னாவைப் பற்றிய சந்தேகத்திலேயே தங்களது வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருக்கின்றார்கள். நூம் இப்பொழுது ஒரு கடைத்தெருவுக்குப் போகின்றோம் என்றால், நமக்குத் தேவையான பொருள்களில் எது சிறந்தது என்பதைத் தேர்ந்தெடுத்து வாங்கின்றோமில்லையா? ஆதைப் போல சுன்னாவிலும் எது ஸஹீஹானது (ஆதாரமுள்ளது), எது ழயீஃபானது (புனைந்துரைக்கப்பட்டது, பொய்யானது) என்பதை இனங் கண்டு பின்பற்றுவதும் அவசியம் தானே! ஆதே போல புத்தகக் கடைக்குச் சென்றால், நமக்குப் பிடித்த புத்தகத்தைத் தேர்ந்தெடுத்து, அந்தப் புத்தகத்தின் மீது நம்முடைய முகங்களைத் தொலைத்து விடும் அளவுக்கு அதில் மூழ்கி விடுகின்றோம், அதைப் போலவே நமக்குப் பிடிக்காத புத்தகத்தை தொட்டுக் கூடப் பார்ப்பதில்லை. இதே போல மனநிலையை சுன்னாவிலும் செலுத்துவது எவ்வாறு? ஏனக்குச் சுன்னாவைப் பின்பற்றுவது பிடிக்கவில்லை, அதனால் நான் அதனை அறிந்து கொள்ள எனக்கு விருப்பமில்லை என ஒதுங்கி விடலாமா?! ஓருவர் இறைத்தூதர்கள் செய்து காட்டிய அற்புதங்களை மறுக்கின்றார், ஒருவர் ஐந்து நேரத் தொழுகைகளுக்குப் பதிலாக, இரண்டு அல்லது மூன்று நேரத் தொழுகைகள் போதுமென்கின்றார், நோன்பு நோற்க வேண்டும் தான், அதற்கு எதற்கு 30 நாட்கள், ஒன்றிரண்டு நாட்கள் இருந்தால் போதும் தானே! ஏனச் சிலர், ஹஜ்ஜு க்கும், குர்பானிக்கும் செலவழிக்கும் பணத்தை அறப்பணிகளுக்கு செலவழித்து விடலாமே எனச் சிலர், ஜகாத் என்ன கொடுக்க வேண்டுமா?

ஆதைத் தான் அரசுகள் செய்து கொண்டிருக்கின்றனவே எனச் சிலர், இன்னும் சிலர் முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் கீழ்படிவது, அவர்களது வாழ்நாளுடன் முடிந்து விட்டது, இப்பொழுது அதற்குஅவசியமில்லை எனச் சிலர், என்று சுன்னாவை மறுப்பதில் ஒவ்வொரு அளவுகோள்களை வைத்துக் கொண்டு,அதனை மறுத்துக் கொண்டு இருப்பதை நம் நடைமுறையில் காண முடிகின்றது

இது இவர்கள் கற்றறிந்த மேலை நாட்டுக் கலாச்சாரம் மற்றும் அவர்களது சிந்தனைகளில் உதித்தவைகளாகும். இவர்கள் தங்களது அலுவல்கள் மற்றும் நேரங்களை இந்த சுன்னாவை எதிர்ப்பதிலும், அதனைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதிலேயே கழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் இந்தச் செயல்கள் எல்லாம், இவர்கள் கற்றறிந்திருக்கின்ற கீழை நாட்டுக் கலாச்சாரத்துடன் இணைந்த மேலைநாட்டு பேச்சு மற்றும் செயல் சுதந்திரத்தை இஸ்லாத்திற்குள் கொண்டு வர நினைக்கின்றார்கள். பேச்சு மற்றும் செயல் சுதந்திரமாக இவர்கள் நினைத்துக் கொண்டிருப்பதெல்லாம் பெண்களை அழகுப்பதுமைகளாக உலா வர விடுவது, ஆணும் பெண்ணும் கலந்து பழகுவது, ஆண்-பெண் இருபாலர்களையும் பாலின் அடிப்படையில் சரிசமமாக்குவது, இசை மற்றும் நடனம் இன்னும் பல.. ..இது போன்ற எவை எவை எல்லாம் இன்று ஒழுக்கச் சீர்கேட்டை மேலைக்கலாச்சாரத்தில் புகுத்தியிருக்கின்றனவோ அவற்றை எல்லாம் இஸ்லாத்திற்குள் கொண்டு வர நினைக்கின்றார்கள். இதைப் போலவே லஞ்சம், வட்டி, சூதாட்டடம், குடி, விபச்சாரம் ஆகியவற்றையும், சீர்திருத்தம் என்ற பெயரில், நவீன அறிஞர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்கள் இஸ்லாத்திற்குள் கொண்டு வந்து, இஸ்லாத்தைக் கூறு போட நினைக்கின்றார்கள்.

### ஹதீஸைத் தொகுப்பதில் இமாம்களின் அர்ப்பணிப்பு

சுன்னாவை எதிர்க்கின்ற அதனைப் பின்பற்ற மறுக்கின்றவர்கள் எழுப்புகின்ற எதிர்ப்பு வாதங்களை செவிமடுக்க விரும்புகின்ற ஒருவர், அந்த சுன்னாவைத் தாங்கி நிற்கின்ற ஹதீஸ்களைச் சேகரிப்பதிலும், அவற்றைப் பாதுகாப்பதிலும், அவற்றைத் (அதாவது ஆதாரமானது, ஆதாரமற்றது என) தரம் பிரிப்பதிலும் இமாம்கள் எந்தளவு பாடுபட்டுள்ளார்கள், அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளார்கள், இன்று நாம் நினைத்தாலும் அவர்களது அந்த அர்ப்பணிப்புகள் இதயத்தை நடுநடுங்கச் செய்து விடுகின்ற அளவுக்கு இருக்கின்றன. நுபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாறுகளைச் சேகரிப்பதிலும், அவற்றைப் பாதுகாப்பதிலும், அவற்றை ஒருங்கிணைப்பதிலும் நம்முடைய முன்னோர்கள் செய்த அந்தச் சேவையை இன்றளவும், முஸ்லிமல்லாதவர்கள் கூட மனந்திறந்து பாராட்டுகின்ற அளவுக்கு அவர்களது சாதனைகள் இருந்த கொண்டிருக்கின்றன.

புகழ்பெற்ற மேற்கத்திய சிந்தனைவாதியான பேராசிரியர் மார்கரெட் கூறுகின்றார் : இந்த முஸ்லிம்கள் - இந்த சுன்னாவைத் தொகுத்திருக்கின்ற துறையில் அவர்களது பங்கு இணையற்றது – அதில் காரணமில்லாமல் இல்லை.

மேலும் புகழ்பெற்ற மேற்கத்தியவாதியான கோல்ட்ஸிஹர் இக்னாஸ் என்பவர், இந்த ஹதீதுகளைத் தொகுத்தளித்திருக்கின்ற அறிஞர் பெருமக்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: இந்த அறிஞர்கள், ஹதீஸு களைச் சேகரித்தவர்கள், பரந்து விரிந்த இந்த முஸ்லிம் உலகத்தில் ஒரு மூலையில் இருந்து இன்னொரு மூலைக்குப் பயணம் செய்து ஒரே ஒரு சுன்னாவை அறிந்து பதிவு செய்து பாதுகாப்பதற்காக, அதைத் தன்னைப் பின்பற்றுகின்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்து பரப்புவதற்காக, ஒவ்வொரு நகரம், கிராமம் என்று விடாமல் சுன்னாவைத் தேடி அலைந்து, ஸ்பெயினில் இருந்து மத்திய ஆசியா வரை வெறும் பாதங்களினாலேயே நடந்து பயணம் செய்துள்ளார்கள்.

சந்தேகமில்லாமல், இவர்கள் தான் கீழ்க்கண்ட பட்டப் பெயர்களுக்கு உரித்தானவர்கள், ரஹ்ஹால் மற்றும் ஜவ்வால், இதன் அர்த்தம் என்னவெனில் சளைக்காத பயணிகள் என்பதாகும்.

இவர்களில் சிலரைப் பற்றி இங்கு நாம் பார்ப்போம் :

அபு அய்யூப் அல் அன்சாரி (ரலி) : இவர்கள் ஒரே ஒரு ஹதீஸைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மதீனா நகரிலிருந்து எகிப்துக்குப் பயணமானார்.

ஜாபிர் பின் அப்துல்லா (ரலி) : ஒரு தான் அறிந்து கொண்ட ஹதீஸைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக ஒரு மாதம் பயணம் மேற்கொண்டார்.

மு∴கூல் (ரஹ்) : ஹதீஸ் கலையைப் பற்றி அறிந்து கொள்வதற்காக சிரியா, ஹிஜாஸ், ஈராக் ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்தார்.

இமாம் ராஸி (ரஹ்) அவர்கள் தன்னைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள் : ஹதீஸை அறிந்து கொள்ள வேண்டும் என்ற தாகத்தால், என்னுடைய வீட்டை விட்டு வெளியேறி, பயணத்திலேயே ஏழு ஆண்டுகளைக் கழித்தேன்.

இமாம் தகபி (ரஹ்) அவர்கள் இமாம் புகாரி (ரஹ்) அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள் : ஹதீஸ் கலையைப் பற்றிய ஒழுங்குகளை தன்னுடைய நகரமான புகராவில் கற்றுத் தெரிந்து கொண்ட பின்னர், பலக், பாக்தாத், மக்கா, பஸ்ரா, கூ∴பா, சிரியா, உஸ்கலன், ஹாமுஸ், மற்றும் டமாஸ்கஸ் ஆகிய நகரங்களில் அன்று வாழ்ந்த அறிஞர்களைக் கண்டு, மேலும் ஹதீஸ்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக பயணம் செய்தார்கள்.

யுஹ்யா பின் சயீத் அல் கத்தான் (ரஹ்) அவர்கள் சுன்னாவைப் பற்றி கற்றுக் கொள்வதற்காக, இமாம் சு∴பா (ரஹ்) அவர்களிடம் 10 வருடங்கள் மாணவராக இருந்துள்ளார்கள்.

நூா∴பிஉ பின் அப்துல்லா (ரஹ்) அவர்கள் தன்னைப் பற்றி இவ்வாறு கூறினார்கள் : இமாம் மாலிக் அவரது உரைகளை காலையிலும் மாலையிலும், பகலின் நடுப்பபாகத்திலும் என எல்லா நேரங்களிலும் அவர்களுடன் நான் 35 லிருந்து 40 வருடங்கள் ஒன்றாக இருந்து செவிமடுத்துள்ளேன்.

இமாம் ஸு ஹ்ரி (ரஹ்) அவர்கள் தன்னைப் பற்றிக் கூறுகின்றார்கள் : ஸயீத் பின் முஸய்யிப் (ரஹ்) அவர்களுடன் 20 வருடங்கள் இருந்து படித்துள்ளேன்.

அப்துல்லா பின் முபாரக் (ரஹ்) அவர்கள் ஆயிரத்து நூறு அறிஞர்களிடம் இருந்து ஹதீஸ்களைப் பற்றிய குறிப்புகளைப் பெற்றுள்ளார்கள்.

இமாம் மாலிக் அவர்கள் ஹதீஸ்களைப் பற்றி 900 ஆசிரியர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

ஹிஸாம் பின் அப்துல்லா (ரஹ்) அவர்கள் 700 ஹதீஸ் கலை ஆசிரியர்களிடம் இருந்து சுன்னாவைப் பற்றி அறிந்துள்ளார்கள்.

அபு நயீம் அஸ்பஹானி (ரஹ்) அவாகள் 800 ஹதீஸ் கலை ஆசிரியர்களிடமிருந்து பயன் பெற்றுள்ளார்கள்.

மிகப் பெரிய ஹதீஸ்கலை அறிஞர்கள் பலர் ஹதீஸ்களைத் தொகுப்பதற்காக,அவற்றைப் பாதுகாப்பதற்காக, அவற்றை முறைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்காக தன்னுடைய வாழ்நாளையும், பொருளையும் அர்ப்பணித்து வந்திருக்கின்றார்கள். ஆவர்கள் தங்களுடைய பொருள்களை மட்டும் இதற்காக இழக்கவில்லை, அவர்கள் ஹதீஸ்களைச் சேகரிப்பதற்காக, அறிந்து கொள்வதற்காக, அவற்றின் நம்பகத் தன்மையைப் பற்றி முடிவெடுப்பதற்காக தங்களுக்கு நேர்ந்த அத்தனை இன்னல்களையும், துன்பங்களையும் சகித்துக் கொண்டு, ஹதீஸ்கள் மீது கொண்ட அன்பின்

காரணமாக, மேற்கண்ட அத்தனையையும் துச்சமாக நினைத்து வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இமாம் மாலிக் (ரஹ்)அவர்கள் தன்னுடைய ஆசிரியராகிய ராபியா (ரஹ்) அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள் : ஹதீஸைச் சேகரிக்கும் பணியில் அவர்கள், தன்னுடைய வீட்டின் தூண்களைக் கூட அவர் விற்றிருக்கின்றார், என்று தெரிவிக்கின்றார். இதுவல்லாமல், மிகவும் கஷ்டமாக காலங்களில், ஹதீஸு களுக்காக அனைத்தையும் விற்றுத் தீர்ந்த பிறகு, சாப்பாட்டிற்காக குப்பையில் கிடந்த பேரீத்தம் பழங்களைப் பொறுக்கித் தின்று, தன் வயிற்றுப் பசியைப் போக்கி இருக்கின்றார்கள்.

## முஹம்மது (ஸல்) அவர்களின் சுன்னாவும் மரியாதைக்குரிய இமாம்களும்

அனைத்து இமாம்களும் முஹம்மது (ஸல்) அவர்களது சுன்னாவிற்கே முதலிடம் கொடுக்கச் சொல்லி இருக்கின்றார்கள். ஒரு ஸஹீஹான ஹதீஸ் கிடைத்து விட்டால், அந்த ஹதீஸிற்கே முதலிடம் கொடுக்கச் சொல்லியிருக்கும் அதே வேளையில், தங்களுடைய கருத்துக்களை ஒதுக்கித் தள்ளி விடும்படிக் கூறியிருக்கின்றார்கள் என்பதை கீழ்க்கண்ட அவர்களின் ஆதாரப்பூர்வமான நூற்களில் இருந்து எடுக்கப்பட்ட அவர்களது கருத்துக்களில் இருந்து நாம் அறிந்து கொள்ள முடியும் :

### இமாம் அபூ ஹனிஃபா (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்டது

உங்களுடைய கருத்துக்களுக்கு மாற்றமாக குர்ஆனினுடைய கருத்துக்களை இருந்தால், நாங்கள் என்ன செய்து கொள்ள வேண்டும்? அதற்கு இமாம் அபூ ஹனிஃபா அவர்கள் கூறினார்கள், என்னுடைய கருத்துக்கள் குர்ஆனினுடைய கருத்துக்களுக்கு மாற்றமாக இருப்பின் என்னுடைய கருத்துக்களைத் தூக்கி எறியுங்கள் என்றார்கள். உங்களுடைய கருத்துக்கள் முஹம்மது (ஸல்) அவர்களது கருத்துக்களுக்கு மாற்றமாக இருப்பின் என்னசெய்து கொள்ள வேண்டும்? என்று கேட்கப்பட்டதற்கு, என்னுடைய கருத்துக்கள் முஹம்மது (ஸல்) அவர்களுடைய கருத்துக்களுக்கு மாற்றமாக இருப்பின், என்னுடைய கருத்துக்களைத் தூக்கி எறியுங்கள் என்று கூறினார்கள்.

மீண்டும், உங்களுடைய கருத்துக்கள் நபித்தோழர்களது கருத்துக்களுக்கு மாற்றமாக இருப்பின் என்ன செய்து கொள்ள வேண்டும்? என்று கேட்கப்பட்ட போது, என்னுடைய கருத்துக்கள் நபித்தோழர்களது கருத்துக்களுக்கு மாற்றமாக இருப்பின், என்னுடைய கருத்துக்களைத் தூக்கி எறியுங்கள் என்று கூறினார்கள்.

ஆதாரம் : ஹக்கீகத்துல் ஃபிக்ஹு , முஹம்மது யூசுப் ஜெய்ப்பூரி, இதாரா தாவத்துல் இஸ்லாம் வெளியீடு, பம்பாய், பக்கம், 69, (The Book of following the Prophet’s path, Darussalam publishers, Riyadh)

### இமாம் மாலிக் பின் (ரஹ்) அனஸ் கூறியதாவது

எந்தவித சந்தேகமுமில்லாமல் நானும் ஒரு மனிதன் தான். நான் கூறுவது சரியாகவும் இருக்க முடியும் அல்லது தவறாகவும் இருக்க முடியும். எனவே நான் கூறுவதை நீங்கள் சிநதித்துப் பாருங்கள். நான் கூறியதில் எவை எல்லாம் குர்ஆனையும், முஹம்மது (ஸல்) அவர்களுடைய சுன்னாவையும் உறுதி செய்வதாக அமைந்துள்ளதோ அவற்றைப் பின்பற்றிக் கொள்ளுங்கள், எவை எல்லாம் இவற்றிற்கு முரணாக இருக்கின்றதோ அவற்றைப் புறக்கணித்து விடுங்கள். (Mentioned in Hadith Hujjatu bi Nafsi’hi Lilbani, (Published by : Dar-us-Salafia, Kuwait, 1st Edi., 1986),p.79.

### இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் கூறியதாவது

நான் கூறி இருக்கும் கருத்துக்கள் குர்ஆனுக்கும், முஹம்மது (ஸல்) அவர்களுடைய சுன்னாவுக்கும் எதிராக இருக்குமானால், என்னுடைய கருத்தை விட்டு விட்டு, குர்ஆனின் படியும், சுன்னாவின்படியும் செயல்படுங்கள் என்றும், இன்னொரு அறிவிப்பில் : முஹம்மது (ஸல்) அவர்களின் சுன்னாவை மட்டும் பின்பற்றுங்கள், மற்ற யாருடைய கருத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டாம், என்று கூறியிருக்கின்றார்கள். Mentioned in Haqeeeatul Fiqa by Muhammed Yusuf Jaipuri, p.75.

இமாம் அஹ்மது (ரஹ்) அவர்கள் கூறியதாவது

(நீங்கள்) என்னையும் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்ற வேண்டாம், இமாம் மாலிக்கையோ அல்லது இமாம் ஷாபிஈ-யையோ அல்லது இமாம் அவ்ஸாயியையோ அல்லது இமாம் அத்தவ்ரியையோ (ரஹ்) பின்பற்ற வேண்டாம். ஆனால், இவர்கள் அனைவரும் எங்கிருந்து இஸ்லாமிய மார்க்கம் சம்பந்தமான தங்களது கருத்துக்களைப் பெற்றுக் கொண்டார்களோ, அங்கிருந்து நீங்களும் பெற்றுக் கொள்ளுங்கள். (அதாவது, குர்ஆனில் இருந்தும், சுன்னா-விலிருந்தும் பெற்றுக்கொள்ளுங்கள், என்பதாகும்.) (Mentioned in Haqeeqatul Hujjatu bi Nafsi'hi Lilbani , p.80.)

இமாம் அபூ ஹனிபா (ரஹ்) அவர்கள் கூறியதாவது

மக்களே, உங்கள் புத்திசாலித்தனத்திலிருந்து நீங்கள் மார்க்கத்தைப் பற்றிப் பேசுபவைகளிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள், மேலும் முஹம்மது (ஸல்) அவர்களது சுன்னாவிற்கும் கீழ்ப்படிந்து நடங்கள். யார் சுன்னா காட்டிய பாதையினின்றும் மாறுகின்றாரோ அவர் வழிகேட்டில் பக்கம் சென்று விட்டார் Mentioned in Haqeeeatul Fiqa by Muhammed Yusuf Jaipuri, p.75.

இமாம் அபூ ஹனிஃபா அவர்கள் மேலும் ஒரு முறை கூறும் போது ,

மக்கள் சுன்னாவைப் பின்பற்றி அதன் மூலம் தங்களுக்கு நிலையான வழிகாட்டுதல்களைப் பெற்றுக் கொள்கின்றார்களோ அதுவரை அவர்கள் சுன்னாவைப் பின்பற்றும் மாணவர்களாக இருக்கின்றார்கள். இஸ்லாமிய மார்க்கத்திற்கான அறிவை சுன்னாவிலிருந்து தேடிப் பெற்றுக் கொள்ளாத பொழுது, மார்க்கத்தின் சட்டங்களை விடுவதும், அவற்றை மீறிச் செயல்படுவதும் மக்களிடையே மலிந்து விட ஆரம்பிக்கின்றது. Mentioned in Haqeeeatul Fiqa by Muhammed Yusuf Jaipuri, p.75.

இமாம் மாலிக் அவர்கள் கூறியதாவது

ஒரு முறை இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார், ஒரு விசயம் சம்பந்தமாக அவர் அவருடைய அறிவுரையைக் கேட்டுக் கொண்ட போது, இதற்கு முஹம்மது (ஸல்) அவர்களின் சுன்னா இருக்கின்றது என்று சுட்டிக் காட்டினார்கள். மேலும் அவர்கள் இது பற்றி உங்களது கருத்து என்ன என்று கேட்ட பொழுது, கீழ்க்கண்ட இறைவசனத்தை அவருக்கு ஓதிக் காண்பித்தார்கள். ஆகவே (நம் தூதராகிய) அவருடைய கட்டளைக்கு மாறுசெய்கிறார்களே அத்தகையவர்கள், (உலகில்) தங்களுக்கு யாதொரு துன்பம் பிடித்து விடுவதையோ அல்லது துன்புறுத்தும் வேதனை பிடித்து விடுவதையோ பயந்து கொண்டிருக்கவும். (அல் குர்ஆன் : 24-63) Reported in Shar;h Sunna (Arabic), (Published by : Maktabul Islami, Beirut, 2nd Ed., (1403) 1983), vol.1, p.216.

இமாம் ஷாபிஈ அவர்கள் சுன்னாவைப் பற்றி மேலும் கூறும் போது

யார் முஹம்மது (ஸல்) அவர்கள் அறிவித்துக் கொடுத்த ஒரு ஹதீஸைப் பற்றி அறிந்திருக்கின்றாரோ, அந்த ஹதீஸை விட்டு விட்டு அதற்குப் பதிலாக ஒரு தனிப்பட்ட நபரின் கருத்தைப் பின்பற்றுவது

கூடாது என்பதை அனைத்து முஸ்லிம்களும் ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். Reported in Hadith Hujjatu bi Nafsi'hi Lilbani, p.80.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் :

நான் முஹம்மது (ஸல்) அவர்களுடைய ஹதீஸு க்கு மாற்றமாகப் பேசுவதை நீங்கள் செவியுற்றால், என்னைப் பைத்தியக்காரன் என்று கருதிக் கொள்ளுங்கள். Reported in Wujoob ul Amal bi Sunnati Rasool by Sheik Abdul Aziz bin Baz, p.24.

ஒரு தரமான ஹதீஸ் உங்களுக்குக் கிடைத்து விட்டால், அது தான் என்னுடைய மார்க்கமுமாகும். மேலும், சுன்னாவுக்கு மாற்றமாக என்னுடைய சொற்கள் இருந்தால், சுன்னாவைப் பின்பற்றுவதற்கு முன்னுரிமை கொடுத்து, நான் கூறியவற்றை சுவற்றை நோக்கி தூக்கி எறிந்து விடுங்கள், என்று இமாம் ஷா..பிஈ (ரஹ்) அவர்கள் கூறினார்கள். Reported in Haqeeqatul Fiqa by Muhammed Yusuf Jaipur, p.74.

## சுன்னாவைப் பற்றி அஹ்மது இப்னு ஹம்பல் (ரஹ்) அவர்கள்

மு:ம்மது (ஸல்) அவர்களது சுன்னாவைத் தவிர்த்து ஒருவர் எவருடைய சொல்லைப் பின்பற்றினாலும், அப்படிப் பின்பற்றுபவர் அழிவில் இருக்கின்றார் என்று அஹ்மது இப்னு ஹம்பல் (ரஹ்) அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள் :

முஹம்மது (ஸல்) அவர்களின் சுன்னாவை யார் நிராகரிக்கின்றார்களோ அவர்கள் அழிவின் கரையில் நின்று கொண்டிருக்கின்றார்கள் என்று அஹ்மது இப்னு ஹம்பல் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

இமாம் அவ்ஸாய், இமாம் மாலிக், இமாம் அபூ ஹனி..பா (ரஹ்) ஆகியோர்கள் கூறியிருக்கின்றவைகள் அனைத்தும் அவர்களது சொந்தக் கருத்துக்களாகும். இவர்கள் அனைவரது கருத்துக்களும் ஒரே தரமுடையவைகளே. முஹம்மது (ஸல்) அவர்களது சுன்னாவானது ஒன்று மட்டுமே முழு அதிகாரத்தைப் பெற்றதாகவும் - அவற்றை மறுத்து எதுவும் பேச முடியாத தன்மையையும் பெற்றதாகவும் இருக்கின்றது. Reported by Ibne Abdul Barr in Jaame.

வழிகேட்டில் செல்வதிலிருந்தும் முஹம்மது (ஸல்) அவர்களின் சுன்னாவானது ஒருவரைப் பாதுகாக்க வல்லது என்று அனைத்து இமாம்களும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

முஹம்மது (ஸல்) அவர்களது சுன்னாவானது அனைவருடைய கருத்தையும் மிஞ்சக் கூடிய தன்மை கொண்டது. சுன்னாவிற்குக் கட்டுப்பட்டு, நூதனங்களைப் பின்பற்றாமல் எந்தளவுக்கு சுன்னாவை உறுதியாகப் பின்பற்றிக் கொண்டு அதில் நிலைத்திருக்கின்றீர்களோ, அது வரை நீங்கள் வழி தவற மாட்டீர்கள் என்று இமாம் ஷுரீஹ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள். Reported in Shar'h Sunnah (Arabic), Vol. 1, p.216.

## புதினங்கள் பற்றி முஹம்மது (ஸல்) அவர்களின் எச்சரிக்கைகள்

இஸ்லாத்தில் புதிதாக நுழைக்கப்படுபவைகள் அனைத்தும் நூதனங்களே. அனைத்து நூதனங்களும் வழிகேடுகளாகும். அனைத்து வழிகேடுகளும் நரகத்திற்குக் கொண்டு சேர்க்கும். (நஸயீ).

நன்மை என்று கருதி இஸ்லாத்தில் இல்லாத ஒன்றை புதிதாக இஸ்லாமியச் சட்டத்தில் நுழைப்பது என்பது, இத்தகைய செயல்கள் சுன்னாவினால் அங்கீகரிக்கப்பட்டதாக காணப்படவில்லை.

ஜாபிர் பின் அப்துல்லா (ரலி) அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறியது : நிச்சயமாக எல்லாவற்றையும் விட மிகவும் உண்மையான வார்த்தை அல்லாஹ்வின் வேதமாகும். அனைத்து வழிகாட்டுதல்களையும் விட மிகச் சிறந்தது இறைவனின் தூதரது வழிகாட்டுல்களாகும். மேலும், இஸ்லாத்தில் புதிதாக எதையொன்றை நுழைப்பதும் மிகவும் மோசமான செயலாகும், ஒவ்வொரு புதினமும் வழிகேட்டில் இட்டுச் செல்லும். Collected by Muslim (Sahih Muslim (English Trans.) Vol.2, p.410, No.1885 (part).

இர்பாத் பின் சாரியா (ரலி) என்பவர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக அறிப்பதாவது: முஹம்மது (ஸல்) அவர்கள், இஸ்லாத்தில் புதிதாக எதையும் நுழைப்பதில் இருந்து உங்களை நீங்கள் தற்காத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் ஒவ்வொரு புதியவைகளும் உங்களை வழிகேட்டில் (நரகத்தில்) கொண்டு சேர்க்கும், என்று கூறினார்கள். Collected by Ibne Maaja (Sunan Ibne Maaja (Arabic-English), Vol. 1 , p.22, No.42 (part) and authenticated (Sahih) by Albani in Sahih Sunan Ibne Maaja Lil Albani, Vol.1, p. 13, No.40.

### பித்அத் - களுக்கு எதிரான கண்டனங்களும், எச்சரிக்கைகளும்.

#### 1) ஒவ்வொரு பித்அத் - களும் நரக நெருப்பில் கொண்டு சேர்க்கும்

ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள் , முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனைப் புகழ்ந்து விட்டுக் கூறினார்கள், அல்லாஹ்வினால் நேர்வழி பெற்ற ஒருவரை யாரும் வழிகேட்டில் கொண்டு செல்ல இயலாது, அல்லாஹ்வினால் வழிகேட்டில் விடப்பட்ட ஒருவரை யாராலும் நேர்வழியில் செலுத்தி விட இயலாது. நிச்சயமாக, மிகவும் உண்மையான வாக்காக இறைவனுடைய வேதம் இருக்கின்றது மற்றும் மிகவும் நேரான வழிகாட்டுதல்களாக அவனுடைய தூதருடைய வழிகாட்டுதல்கள் இருக்கின்றன. இஸ்லாத்தில் புதியவைகளை நுழைப்பது வெறுக்கத்தக்க செயலாகும். இஸ்லாத்தில் புதிதாக நுழைக்கப்டுபவைகள் அனைத்தும் புதினங்களாகும், ஒவ்வொரு புதினங்களும் வழிகேடுகளாகும். ஒவ்வொரு வழிகேடும் நரக நெருப்பில் நுழைவிப்பதாக இருக்கும்.

#### 2) அனைத்து பித்அத் - களும் வழிகேடுகளே!

ஜாபிர் பின் அப்துல்லா (ரலி) அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறியது : நிச்சயமாக எல்லாவற்றையும் விட மிகவும் உண்மையான வார்த்தை அல்லாஹ்வின் வேதமாகும். அனைத்து வழிகாட்டுதல்களையும் விட மிகச் சிறந்தது இறைவனின் தூதரது வழிகாட்டுல்களாகும். மேலும், இஸ்லாத்தில் புதிதாக எதையொன்றை நுழைப்பதும் மிகவும் மோசமான செயலாகும், ஒவ்வொரு புதினமும் வழிகேட்டில் இட்டுச் செல்லும். Collected by Muslim (Sahih Muslim (English Trans.) Vol.2, p.410, No.1885 (part).

இர்பாத் பின் சாரியா (ரலி) என்பவர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக அறிப்பதாவது: முஹம்மது (ஸல்) அவர்கள், இஸ்லாத்தில் புதிதாக எதையும் நுழைப்பதில் இருந்து உங்களை நீங்கள் தற்காத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் ஒவ்வொரு புதியவைகளும் உங்களை வழிகேட்டில் (நரகத்தில்) கொண்டு சேர்க்கும், என்று கூறினார்கள். Collected by Ibne Maaja (Sunan Ibne Maaja (Arabic-English), Vol. 1 , p.22, No.42 (part) and authenticated (Sahih) by Albani in Sahih Sunan Ibne Maaja Lil Albani, Vol.1, p. 13, No.40.

3) பித்அத்களை உருவாக்குபவர்களுக்கு யார் உதவி புரிந்தார்களோ அவர்கள் மீது இறைவனது சாபம் இறங்குகின்றது

அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : யார் அல்லாஹ்வை விட்டு விட்டு பிறருக்கு தங்களது நேர்ச்சைப் பிராணிகளை பலியிடுகின்றார்களோ அவர்களையும் : எல்லைக் கற்களை யார் மாற்றி வைக்கின்றார்களோ அவர்களையும் : தன்னுடைய சொந்தத் தந்தையை யார் சபிக்கின்றார்களோ அவர்களையும் மற்றும் இஸ்லாத்தில் புதினங்களை உண்டாக்குபவர் யாரோ அவரைப் பாதுகாப்பவரையும் இறைவன் சபிக்கின்றான், என்று முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். Collected by Muslim (Sahih Muslim (English Trans.), Vol.3,p.1094, No.4878 (part)

4) அனைத்துப் பித்அத் - களும் இறைவனால் நிராகரிக்கப்படுகின்றது

மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யார் ஒருவர் செய்தாலும், அவரது அந்தச் செயல் இறைவனால் நிராகரிக்கப்படுகின்றது, என்று முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். Collected by Bukhari and Muslim (Al-Lu'lu'wal-Marjaan )Arabic-English), Vol.2, p.83, No.1120 and (Sahih Muslim (English Trans.), Vol.3, p.931, No.4266.

5) பித்அத் - களைச் செய்து கொண்டிருப்பவர், அதிலிருந்து அவர் ஒதுங்காதவரை அவரது பாவ இறைஞ்சுதலை இறைவன் ஏற்றுக் கொள்வதில்லை

(மார்க்கத்தில் இல்லாத ஒரு செயலை) யார் புகுத்தினாரோ அவரது அந்தச் செயலிலிருந்து அவர் விடுபடாதவரை அவரது பாவ இறைஞ்சுதலை இறைவன் ஏற்றுக் கொள்வதில்லை, என்று முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். Collected by At-Tabaraani (At-Tabaraani (Arabic) and authenticated (Hasan) by Albani in Sahih Targheeb wa Tarheeb Lil Albani, Vol.1, p.26, No.52.

6) பித்அத் - களிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

மக்களே! (இஸ்லாத்தில் நுழைக்கப்படுபவைகளில் இருந்து) புதினங்களிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று, இறைத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக இர்பாதா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். Collected by Ibne Abi Aasim and authenticated (Hasan) in Kitab-us-Sunnah Lil Albani, Vol.1, p.20, No.34.

7) இஸ்லாத்தில் பித்அத் - களை உண்டாக்குபவர்களுக்கு, நியாயத் தீர்ப்பு நாளன்று கவ்தர் தடாகத்தில் நீர் அருந்துவதற்கு தடை செய்யப்படுவார்கள்.

8) இஸ்லாத்தில் பித்அத் - களை உண்டாக்கியவர்களை நோக்கி முஹம்மது (ஸல்) அவர்கள் மிகுந்த வெறுப்பைக் காட்டுவார்கள்.

கவ்தர் தடாகத்தின் முன்பாக நான் தான் முதல் ஆளாக நின்று கொண்டிருப்பேன். யார் யாரெல்லாம் அங்கு வருகை தருகின்றார்களோ அவர்களெல்லாம் அதில் நீர் அருந்துவார்கள், யாரெல்லாம் அங்கு ஒரு முறை வந்து நீர் அருந்தினார்களோ அவர்களுக்கு இனி எப்பொழுதும் தாகம் எடுப்பதை உணரவே மாட்டார்கள். அப்பொழுது சில பேர் அங்கு வருவார்கள். அவர்கள் என்னைப் பின்பற்றியவர்கள் என்பதையும் நான் கண்டு கொள்வேன். அவர்களும் என்னை (நபி என) க் கண்டு கொள்வார்கள். ஆனால் அவர்கள் என்னை நெருங்கி வருவதனின்றும் (மலக்குகளால்) தடுக்கப்படுவார்கள்.

அப்பொழுது நான் அவர்கள் என்னுடைய சமுதாயத்தவர்கள் அல்லவா! என்னைப் பின்பற்றியவர்கள் அல்லவா! எனக் கூறுவேன். நபி முஹம்மது (ஸல்) அவர்களே உங்களுக்குப் (மரணித்த) பின்பு இவர்கள் என்னென்ன புதினங்களை உருவாக்கினார்கள் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள், என்று எனக்கு அறிவித்துக் கொடுக்கப்படும். அதன் பிறகு நான் கூறுவேன், தூரப் போய் விடுங்கள் !! எனக்குப் பின்பு மார்க்கத்தில் புதினங்களைப் புகுத்தியவர்களுக்கும் எனக்கும் தூரம் இருப்பதே சிறந்தது எனக் கூறுவேன், என்று முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக சஹ்ல் பின் சாத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். Collected by Bukhari & Muslim (Al-Lu'lu'wal-Marjaan (Arabic-English), Vol.2, p.260, No.1476 & 1477 and (Sahih Al-Bukhari (Arabic-English), Vol.8, p.381-382, No.585.

9) பித்அத்களை உருவாக்குபவர்கள் மீது அல்லாஹ்வின் சாபமும், மலக்குகள் மற்றும் மனிதர்களின் சாபமும் இறங்குகின்றது

ஆஸிம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதினாவைப் புனிதமிக்க நகரமாக ஆக்கியிருக்கின்றார்களா? என்று அனஸ் (ரலி) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அனஸ் (ரலி) அவர்கள் ஆம் எனக் கூறிவிட்டு, குறிப்பிட்ட இந்த இடத்திலிருந்து இந்த இடம் வரை மரங்களை வெட்டக் கூடாது என்று தெரிவித்து விட்டு, மேலும் முஹம்மது (ஸல்) கூறியதாக (கீழ் உள்ள) இவற்றையும் கூறியதாக, என்னிடம் தெரிவித்தார்கள். அதாவது, இங்கு யார் யாரெல்லாம் புதினங்களைப் புகுத்துகின்றார்களோ அவர்கள் மீது அல்லாஹ்வும், மலக்குகளும் மற்றும் அனைத்து மனிதர்களது சாபமும் இறங்குகின்றது என்று கூறினார்கள். Collected by Bukhari & Muslim (Al-Lu'lu'wal-Marjaan (Arabic-English), Vol.1, p.435-436, No.865 and (Sahih Al-Bukhari (Arabic-English), Vol.9, p.304-305, No.409.

10. பித்அத் - களைப் புகுத்தியவரது பாவங்களுக்கு தண்டனை பெறுவதுடன், அவரைப் பின்பற்றியவர்களின் பாவத்திற்கும் சேர்த்தே மறுமையில் தண்டனையைப் பெற்றுக் கொள்வார்

கதீர் பின் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அவ்.ஃப் அல் முஸ்னி என்பவர் கூறியதாவது : முஹம்முத (ஸல்) அவர்கள் கூறியதாக என்னுடைய பாட்டனார் என்னுடைய தந்தைக்குக் கூறியதை, என்னுடைய தந்தை எனக்கு அறிவித்ததாவது: யார் என்னுடைய ஓர சுன்னாவை உயிர்ப்பித்து, அந்த சுன்னாவின் படி நடப்பார்களேயானால், சுன்னாவை உயிர்ப்பித்தவருக்கு அதற்கான நன்மையும், அதைப் பின்பற்றுகின்ற அனைவரது நன்மையும் அவருக்குச் சேர்த்தே வழங்கப்படும். ஆனால் அந்த சுன்னாவைப் பின்பற்றுபவர்களின் நன்மையிலிருந்து எதுவும் குறைக்கப் பட மாட்டாது. ஒருவர் புதினங்களைப் புகுத்தி, அதன் பின் அந்தப் புதினங்களின்படி நடப்பாரேயானால், அந்தப் புதினங்களைப் புகுத்திய பாவமும், யார் யாரெல்லாம் அந்தப் புதினங்களின்படி நடந்தார்களோ அவர்களது பாவமும் சேர்த்தே, புதினங்களைப் புகுத்தியவருக்கு வழங்கப்படும். அந்தப் புதினங்களைப் பின்பற்றிய மக்களின் பாவங்கள் சிறிதளவும் குறைக்கப்பட மாட்டாது. Collected by Ibne Maaja (Sunan Ibn Maaja (Arabic-English), Vol.1, p.118, No.209 and authenticated (Sahih) by Albani in Sahih Sunan Ibne Maaja Lil Albani, Vol.1, p.41, No.173.

இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது : ஒருவர் நேர்வழியைப் பற்றி பிறருக்கு அறிவுறுத்துவாரேயானால், அதன்படி செயல்பட்ட அனைவரது நன்மையையும் இவருக்கு வழங்கப்படும். இவரைப் பின்பற்றியவர்களின் நன்மையிலிருந்து எதுவும்

குறைக்கப்படமாட்டாது. அதே போல ஒருவர் வழிகேட்டின் பக்கம் அழைப்பாரேயானால், அந்த வழிகேட்டைப் பின்பற்றிய அனைவரது பாவங்களும் இவர் மீது சுமத்தப்படும், (அதற்கான தண்டனையும் வழங்கப்படும்) அதைப் பின்பற்றியவர்களின் பாவங்களில் இருந்து எதுவும் குறைக்கப்பட மாட்டாது. collected by Muslim (Sahih Muslim (English Trans.), Vol.4, p.1406, No.6470.

11. இஸ்லாத்தில் புதினங்களைப் புகுத்துபவர்களின் ஸலாமிற்கு அப்துல்லா இப்னு உமர் (ரலி) அவர்கள் பதில் ஸலாம் கூற மாட்டார்கள்

நாபிஊ என்பவர் அறிவிக்கும் இந்த ஹதீஸில் அவர் கூறுவதாவது நான் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடம் இன்னார் உங்களுக்கு ஸலாம் தெரிவித்தார்கள் என்று கூறினேன். அதற்கு அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், அவர் மார்க்கத்தில் புதினங்களை உண்டாக்குவதாக நான் கேள்விப்படுகின்றேன். அது உண்மையாக இருக்குமானால் என்னுடைய பதில் ஸலாத்தை அவருக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டாம் , என்று என்னிடம் கூறினார்கள். Collected by At-Tirmidhi (Sunan At-Tirmidhi (Arabic) and reported in Mishkat-ul-Masabih (Arabic-Eng;ish), Vol.1, p.74, No.116.

12. யார் புதினங்களி (பித் அத்) - ன் படி நடக்கின்றார்களோ, அவர்கள் பின்பற்றும் புதினங்களின் அளவுக்கு அவர்களிடம் இருந்து இறைவன் முஹம்மது (ஸல்) அவர்களின் சுன்னாவைத் தூரமாக்கி விடுவான்.

ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், மார்க்கத்தில் யார் புதினங்களைப் (பித்அத்களை) புகுத்துகின்றார்களோ, அவர்கள் புகுத்தி அளவு சுன்னாவை, மறுமை நாள் வரையில் அவர்களுக்கு திரும்பக் கிடைக்காமல் இறைவன் செய்து விடுவான். Collected by Ad-Daarmi (Sunan Ad-Daarami (Arabic) and reported in Mishkat-ul-Masabih (Arabic-English), Vol.1, p.117, No.188.

13. மற்ற பாவங்களைக் காட்டிலும் மார்க்கத்தில் ஃபித் அத் நிறைந்திருப்பதை ஷைத்தான் மிகவும் விரும்புகின்றான்.

சுஃப்யான் தவ்ரி (ரஹ்) அவர்கள் அறிவிப்பதாவது , ஷைத்தானானவன் மனிதர்கள் புரியும் பாவங்களைக் காட்டிலும், மார்க்கத்தில் பித்அத்-கள் அல்லது புதினங்கள் ஏற்படுவதை அதிகம் விரும்புகின்றான். ஏனென்றால், மனிதர்கள் தங்கள் பாவங்களுக்கு இறைவனிடம் பாவ மன்னிப்பைக் கோரிக் கொள்கின்றார்கள். ஆனால், அவர்கள் பின்பற்றிக் கொண்டிருக்கும் பித்அதி-களுக்கு பாவமன்னிப்புக் கோருவதில்லை, என்பது தான்.

(ஏனெனில் பித்அத்-ஆனது மக்களால் நன்மைகளைப் பெற்றுத் தரக் கூடியது என்றே செயல்படுத்தப்படுவதாலும், அவர்கள் தாங்கள் செய்வது குற்றமல்ல என்றும் நினைப்பதாலும், அதற்காக அவர்கள் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருவதில்லை) Reported in Shar'h Sunnah (Arabic), (Published by: Maktabul Islai, Beirut, 2nd Ed, 1983), Vol.1, p.216, No.nil.

14. அப்துல்லா பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் பித் அத் (புதினங்கள்) செய்தவரை பள்ளிவாசலில் இருந்தே வெளியேற்றினார்கள்.

பள்ளியில் சில பேர் கூட்டாக அமர்ந்து கொண்டு, அல்லாஹ்வைப் புகழ்ந்து திக்ரு செய்து கொண்டிருப்பதாக இப்னு மஸ்ஊது (ரலி) அவர்கள் கேள்விப்பட்டதைத் தொடர்ந்து , அங்கு சென்று அங்குள்ளவர்களிடம், முஹம்மது (ஸல்) அவர்களது காலத்தில் இந்த மாதிரி மக்கள் உட்கார்ந்து அல்லாஹ்வைத் துதித்துக் கொண்டிருந்ததையோ அல்லது திக்ரு செய்து கொண்டிருந்ததையோ நாங்கள் கண்டதேயில்லை. எனவே நீங்கள் இங்கு செய்து கொண்டிருப்பது பித்அத் ஆகும். இப்னு

மஸ்ஊத் அவர்கள், அந்த திக்ரு ஓதிக் கொண்டிருந்த கூட்டம் பள்ளியை விட்டு அகலும் வரை இதைத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தார்கள். (அபூ நுஜம் வழியாக இந்த ஹதீஸ் அறிவிக்கப்படுகின்றது).

15. சுன்னாவைப் பின்பற்றுபவர்கள், இந்த பித்அத் செய்கின்ற நபர்கள் வழியாக அறிவிக்கப்படுகின்ற ஹதீஸ்களைப் பின்பற்ற மாட்டார்கள்.

முஹம்மது பின் சீரீன் (ரஹ்) அவர்கள் கூறுவதாவது, இஸ்லாத்தின் ஆரம்பக் காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் சுன்னாவைப் பற்றி எந்தக் கேள்விகளையும் கேட்காமல், சுன்னாவைப் பின்பற்றினார்கள். பிற்காலத்தில், சுன்னாவில் ஏகப்பட்ட பித்அத்-கள் புதிதாகப் பரவ ஆரம்பித்தவுடன் மக்கள், அந்த சுன்னாவின் அறிவிப்பாளர்களின் வரிசையைப் பற்றிக் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள். முதலில் அவர்கள் அந்த சுன்னாவை அறிவித்தவர் சுன்னாவைப் பின்பற்றக் கூடியவரா என்பதை அறிந்து கொண்ட பின்பு தான் அவர்கள் அந்த சுன்னாவைப் பின்பற்ற ஆரம்பிப்பார்கள். அதுவல்லாமல், அந்த அறிவிப்பாளர் தொடரில் ஒருவர் பித்அத் அல்லது புதினங்களைப் புகுத்துபவர் அல்லது அவற்றைப் பின்பற்றுபவர் எனத் தெரிந்தால் அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து விடுவார்கள். Collected by Muslim (Sahih Muslim (Arabic) in Preface, Charpter: Bayan Al-Isnad Minal Deen and in (Sahih Muslim (Urdu) in Preface, Chapter: Narrating the Chain of Hadith, Vol.1-2, p.23, No. nil, (Published by: Tableeghe Kutub Khana, Urdu Bazaar, Lahore, Pakistan, Ist Ed., 1405H.).

16. பித் அத் அல்லது புதினங்களைப் புகுத்துவது தனக்குத் தானே தீங்குவிளைவிப்பதாகும் அல்லது கடுமையாக தண்டனையை வரவழைத்துக் கொள்வதாகும்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் ஒருவர் கேட்டார், ஓ!!! அபூ அப்துல்லாஹ்!! எந்த இடத்திலிருந்து நான் என்னுடைய இஹ்ராமைக் கட்ட வேண்டும் என்றார். அதற்கு இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், துல் ஹுலைஃபா என்னும் இடத்தில் இருந்து தான் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்களது இஹ்ராமைக் கட்டினார்கள் என்று பதில் கூறினார்கள். அந்த மனிதர், முஹம்மது (ஸல்) அவர்களது பள்ளியிலிருந்தும், அவர்களின் அடக்கத்தலத்திற்கு அருகில் இருந்தும நான் இஹ்ராம் கட்ட விரும்புகின்றேன் எனக் கூறினார். இமாம் மாலிக் அவர்கள் அவரைப் பார்த்துக் கூறினார்கள், நீ அந்த மாதிரி செய்யக் கூடாது. நீ ஒரு தீங்கில் உன்னை உட்படுத்திக் கொள்ளப் பார்க்கின்றாய் என நான் அஞ்சுகின்றேன் எனக் கூறினார்கள். அந்த மனிதர் மீண்டும் சில மைல்களுக்கு அப்பால் நான் கட்டிக் கொள்ளலாம் என்று எண்ணுகின்றேன் என்று கூறினார். இமாம் அவர்கள் என்ன கைசேதம் உனக்கு! முஹம்மது (ஸல்) அவர்கள் காட்டித் தந்த நன்மையின் அளவு குறைவாக இருக்கின்றது என்று எண்ணிக் கொண்டு அவரையே நீங்கள் மிஞ்சப் பார்க்கின்றீர்களா? அல்லாஹ் கூறியவற்றிலிருந்து நான் ஞாபகப்படுத்திக் கொண்டதைச் சொல்கின்றேன், இறைவன் கூறுகின்றான், யார் என்னுடைய தூதர் முஹம்மது (ஸல்) அவர்களது கட்டளைகளுக்குப் புறம்பாக நடக்கின்றார்களோ அவர்கள் தங்களுக்கு ஏற்படவிருக்கும் தீங்கைக் குறித்துப் பயந்து கொள்ளட்டும் அல்லது கடினமான வேதனையைப் பயந்து கொள்ளட்டும். Collected by Al-E'tesam (Iman Shatibi's book) for Shatibi, Al-Qawlul Asma Fee Zammul Ibtadaa Li Abi Abdul Rehman Saleem Hamed Salim, p.21-22.,.

17. மார்க்கத்தின் அடிப்படையில் தான் சுயமாக அல்லது தன்னிச்சைக்குச் செயல்படுவதிலிருந்தும் பாதுகாக்கும்படி இறைவனிடம் பாதுகாவல் தேட வேண்டும்.

முஹம்மது (ஸல்) அவர்கள் மூலம் கேட்டதாக அபூ பஸ்ரா அஸ்லமி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள். எனது மரணத்திற்குப் பின்பு கீழ்க்கண்ட

விசயங்களினால் நீங்கள் வழிதவறி விடுவீர்களோ என்று நான் பயப்படுகின்றேன் எனக் கூறி விட்டு, பேராசை, வெறுக்கத்தக்க செயல்களில் ஈடுபடுவது மற்றும் தவறான நோக்கங்கள் ஆகியவற்றினால் நீங்கள் வழி தவறி விடுவீர்களோ என்று தான் பயப்படுகின்றேன் என்றார்கள். இவற்றில் நீங்கள் ஈடுபடாதவரை வழி தவற மாட்டீர்கள்) Collected by Ibne Abi Aasim (Kitab-us-Sunnah, (Arabic) and reported (sahih), (Published by : Maktabul Islami, Beirut, Ist Ed., 1985), Vol. 1, p.12, No.13.

18. பித்அத்-ல் ஈடுபடுபவரது நன்மைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஃபுதைல் பின் அய்யாழ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது, உங்களை நோக்கி ஒரு பித்அத்-தைப் பின்பற்றக் கூடியவன் வந்தால், அவன் வரும் வழியை விடுத்து நீங்கள் மாற்று வழியில் சென்று விடுங்கள். பித்அத் செய்யக் கூடியவரிடம் இருந்து இறைவன் எந்த வித நல்ல அமல்களையும் ஏற்றுக் கொள்ள மாட்டான். யார் ஒருவன் ஒரு பித்அத் செய்யக் கூடியவனுக்கு உதவுகின்றானோ அவன் தன்னுடைய மார்க்கத்தையே அழிக்க உதவிக் கொண்டிருக்கின்றான் என்பதாகும். Reported in Qasa'is Ahle Sunnah (Araboc), Published by: Moo'assasa Qurtuba, Cairo, Egypt, p.2

## ஹதீஸைத் தொகுப்பதில் இமாம்களின் அர்ப்பணிப்பு

கதீப் (ரஹ்) அவர்கள் தன்னுடைய ஆசிரியராகிய இமாம் யஹ்யா பின் முஈன் (ரஹ்) அவர்கள், ஹதீஸ்களைச் சேகரிப்பதற்காக அவர் ஒன்னேகால் மில்லியன் திர்ஹம்களைச் செலவிட்டதாகவும், இதன் காரணமாகவே அவர் அணிந்து கொள்வதற்குக் காலணி வாங்கக் கூட வசதியற்றவாராகி விட்டார் என்று கூறுகின்றார். ஹதீஸ்களைச் சேகரிப்பதற்காகவே அலி பின் ஆஸிம் (ரஹ்) அவர்கள் ஒரு லட்சம் திர்ஹம்களையும், இமாம் தஹபி (ரஹ்) அவர்கள் ஒரு லட்சத்தி ஐம்பதினாயிரம் திர்ஹம்களையும், இப்னு ருஷ்தும் (ரஹ்) மூன்று லட்சம் திர்ஹம்களையும் செலவிட்டுள்ளார்கள். மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவரான இமாம் புகாரி அவர்கள், ஹதீஸ்களைச் சேகரிப்பதற்காக பல்வேறு இன்னல்களைத் தாங்கியுள்ளார்கள் என்பது மட்டுமல்ல, மிக நீண்ட தூரப் பயணங்களையும் மேற்கொண்டுள்ளார்கள். புஸ்ராவில் இமாம் புகாரி அவர்களுடன் உடன் பயின்ற தோழரான இமாம் உமர் பின் ஹஃப்ஸ் (ரஹ்) அவர்கள் தன்னுடைய தோழரைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள் : பஸரா நகரத்தில் எங்களுடன் ஹதீஸு களைப் பற்றிக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தவர்களில் இமாம் முஹம்மது பின் இஸ்மாயீல் (புகாரி) (ரஹ்) அவர்களும் ஒருவராவார். ஒரு சில தினங்களுக்குப் பின் புகாரி அவர்கள் ஹதீஸு களைப் பற்றிக் குறிப்பெடுக்கும் வகுப்பறைக்கு வராததை நாங்கள் கண்ணுற்றோம். ஏன் அவர்கள் சமீபத்தில் வகுப்புகளுக்கு வருவதில்லை என்பதை அறியும் பொருட்டு அவரது இல்லத்திற்கு நாங்கள் சென்ற பொழுது, உடுப்பதற்குச் சரியான ஆடை வாங்குவதற்கு வசதியில்லாததன் காரணமாக, உடுப்பதற்குத் தகுந்த ஆடை இல்லாததன் காரணமாக ஒரு இருட்டறையில் அரைகுறை ஆடைகளுடன் இருக்கக் கண்டோம். பின் நாங்கள் மாணவர்களாகச் சேர்ந்து பணம் வசூல் செய்து அவருக்கு ஆடைகள் வாங்கிக் கொடுத்த பின்பு அவர், வழக்கம் போல வகுப்பறைகளில் கலந்து கொண்டா

இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் (ரஹ்) அவர்களின் வகுப்பறைத் தோழராகிய இஸாக் பின் ரஹ்வியா (ரஹ்) அவர்கள் இமாம் அஹ்மது (ரஹ்) பற்றி இவ்வாறு கூறுகின்றார்: இமாம் அஹ்மதுஇப்னு ஹம்பல் (ரஹ்) அவர்கள் ஹதீஸ்களைக் கற்றுக் கொள்வதற்காகவே யமன் நாட்டுக்கு வந்தார்கள்.

காலாடைக்கு உபயோகப்படுத்தும் கயிற்றைத் தயாரித்து அதனை விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு ஆவருடைய வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டார்கள். சுன்னாவைப் பற்றி அறிந்து கொண்ட பின் அவர் யமனை விட்டுச் செல்லும் பொழுது, ரொட்டிக் கடைக்காரரிடம் அவர் கடன்பட்டிருந்தார். அந்தக் கடனை அடைப்பதற்குத் தன்னுடைய காலணியைக் கொடுத்து விட்டு, வெறுங்காலுடன் யமனை விட்டுக் கிளம்பினார்கள், வழிச் செலவுகளுக்கு ஒட்டகத்திலிருந்து பொருட்களை ஏற்றி இறக்கும் கூலி வேலை செய்து, அதிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு, பயணத்தைத் தொடர்ந்துள்ளார்கள்

மேலே சொன்னவை மட்டுமல்ல, ஹதீஸ்களைச் சேகரிக்கும் பணியில் இன்னும் ஏராளமான கஷ்டங்களையும், துன்பங்களையும் அடைந்துள்ளார்கள். ஆனால் இந்தக் கஷ்டங்களையும் துன்பங்களையும் ஹதீஸ்களைச் சேகரிப்பதற்காக அவர்கள் சகித்து வந்துள்ளது மட்டுமல்ல, கொடுமைக்கார ஆட்சியாளர்கள் கொடுத்து வந்த அதிகப்பட்ச தண்டனைகளையும், அவர்களுக்கு இழைத்த கொடுமைகளையும், அநீதிகளையும் தாங்கிக் கொண்டு, தங்களது பணிகளைத் தொடர்ந்துள்ளார்கள். பனூ உமைய்யா கோத்திரத்தைச் சேர்ந்த (உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) தவிர) ஆட்சியாளர்கள் கொடுத்த எண்ணற்ற படுபாதகமான எண்ணிப்பார்த்திராத கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்ட பொழுதும், அவர்கள் சுன்னாவை நிலைநாட்டுவதில் எந்த வகையிலும் அவர்கள் சளைக்கவுமில்லை, பின்வாங்கவுமில்லை. இத்தகைய கொடுமைக்குள்ளானவர்களில், இமாம் முஹம்மது பின் சீரீன் (ரஹ்), ஹஸன் பஸரி (ரஹ்), ஒபைதுல்லாஹ் பின் அபி ர∴பாய் (ரஹ்), யஹ்யா பின் ஒபைத் (ரஹ்), இப்னு அபீ ஹதீர் (ரஹ்) ஆகியோர்களாவார்கள். பனூ அப்பாஸ் குலத்தவர்கள் ஆட்சி செய்த பொழுது, தாருல் ஹிஜ்ராவின் இமாமான மாலிக் பின் அனஸ் (ரஹ்) அவர்களை, இந்தக் கோத்திரத்தவர்கள் வெறும் முதுகில் சாட்டையால் அடித்துத் தண்டனை கொடுத்தார்கள். சு∴ப்யான் அத் தவ்ரி (ரஹ்)அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களைக் கைது செய்து தலைநகரான பாக்தாதுக்கு நடத்தியே கூட்டிச் சென்றார்கள், அங்கு சிறையில் அடைத்து சித்தரவதை செய்தார்கள். இமாம் அஹ்மது இப்னு ஹம்பல்(ரஹ்) அவர்கள் சுன்னாவை நிலைநாட்டுவதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக அவர் அடைந்த துன்பங்களும், சிறைவாசங்களும், சிறைவாசச் சித்திரவதைகளும் வரலாற்று ஏடுகளில் மிகவும் கறைபடிந்த தருணங்களாகும் என்பது வரலாறு அறிந்த அனைவரும் அறிந்த செய்தியாகும். இமாம் அபு ஹனீ∴பா (ரஹ்) அவர்களது உடல் நடு இரவில் சிறைச் சாலையின் குப்பை கூளங்கள் நிறைந்த அறையிலிருந்து அடக்கத்தளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இறைவன் இந்த நல்லுள்ளங்களின் மீது கருணை புரிந்து, அவனது அருளை வழங்குவானாக! இவர்கள் தான் எத்தனை துன்பம் வந்த பொழுதும், துயரங்கள் தாக்கிய பொழுதும், தங்கள் கொள்கையிலிருந்து சிறிதும் மாறாமல், மலை போல் நின்று சுன்னாவைப் பாதுகாத்தவர்கள், தங்கள் மீது சொல்லொண்ணாக் கொடுமைகள் இழைத்த போதும், அவற்றைத் துச்சமாக மதித்தவர்கள், சுன்னாவைப் பாதுகாப்பதற்காக தங்களது சுகங்களைத் தீயிட்டுப் பொசுக்கி, சுன்னாவுக்காகவே தங்களது இவ்வுலக வாழ்க்கையை அழிவுக்கு உட்படுத்திக் கொண்டவர்கள்.

இந்த உடல் ரீதியான, பொருள் ரீதியான, மன ரீதியான சோதனைகளைத் தாங்கிக் கொண்டு சுன்னாவை உயிர்ப்பிப்பதில் இன்பங்கண்ட இவர்களது, ஹதீஸு த் தொகுப்புகள் யாவும், இஸ்லாமிய அறிவுலகத்தின் சாதனைகளாக இன்றளவும் போற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த ஹதீஸு களைத் தொகுப்பதில் அவர்கள் எந்தளவு கவனமாக இருந்திருக்கின்றார்கள் என்றால், அபுபக்கர் (ரலி) அவர்களும், உமர் (ரலி)அவர்களும் தகுந்த ஆதாரம் இல்லாமல் எந்த ஹதீஸையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அலி (ரலி) அவர்கள் ஒரு ஹதீஸைப் பற்றிக் கேள்விப்பட்டார்கள்

என்றால், அதன் மீது சத்தியமிடச் சொல்வார்களாம். முன்னெச்சரிக்கையின் காரணமாக ஒரு சில ஹதீஸ்களைத் தான் உதுமான் (ரலி) அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அப்துல்லா பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் ஒரு ஹதீஸை அறிவித்தார்கள் என்றார்கள், அதன் மீது மிகவும் கவனமாக இருப்பதுடன், அவர் அந்த ஹதீஸை அறிவிக்கும் பொழுது, அவரது முகமே மாறி விடும். அனஸ் (ரலி) அவர்கள் ஒரு ஹதீஸை அறிவித்தால், முன்னெச்சரிக்கையின் காரணமாக, முஹம்மது(ஸல்) அவர்கள் அறிவித்தது போல என்றும் கூறுவார்கள். இன்னும் நபித்தோழர்கள் தங்களது முதுமைக்காலத்தில் நினைவாற்றலை இழந்திருக்கக் கூடும் என்று எண்ணியதன் காரணமாக ஹதீஸு களை அறிவிப்பதை நிறுத்திக் கொண்டார்கள். ஸைத் பின் அர்க்கம் (ரலி) அவர்களின் முதுமைக் காலத்தில் ஏதாவது ஒரு ஹதீஸைப் பற்றிக் கூறுங்களேன் என்று வேண்டினால், நான் முதுமையடைந்து விட்டேன், ஞாபக மறதியும் அதிகமாவிட்டது, நினைவாற்றல் இழந்ததன் காரணமாக என்னால் ஹதீஸு களை அறிவிக்க இயலாது, ஹதீஸ்களை அறிவிப்பது என்பது மிகப் பெரிய பொறுப்பு வாய்ந்ததொரு பணியாகும் என்று கூறுவார்கள்.

இமாம் அனஸ் பின் மாலிக் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : ஹதீஸைக் கேட்டு அதனைப் பதிவு செய்யக் கூடியவர்கள், ஹதீஸை அறிவிக்கக் கூடியவரின் நம்பகத் தன்மையைப் பொறுத்து அதனைப் பதிவு செய்து கொள்வார்கள், அல்லது அந்த நபர் அரசு கஜானாவின் அதிகாரியாக இருந்து, அவர் ஒரு பட்டாணிக் கடலை அளவு மோசடி செய்திருந்தாலும், அவர் அறிவிக்கக் கூடிய ஹதீஸைப் பதிவு செய்ய மாட்டார்கள் என்பதை சில ஹதீஸ்களைத் திரட்டும் அறிஞர்களிடம் நாங்கள் பார்த்திருக்கின்றோம். மிகப் பிரபலமான ஹதீஸ் கலை அறிஞராகிய யஹ்யா பின் சயீத் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : நாங்கள் ஒரு மனிதரை ஆயிரக்கணக்கான திர்ஹம்களையும், தினார்களையும் பெற்றுக் கொண்ட ஒருவரைப் பொறுத்து, அவரை நம்பக் கூடியவர்களாக நாங்கள் இருக்கின்றோம், ஆனால் ஹதீஸ்களைப் பொறுத்தவரை இது போன்றதொரு நிலையை நாங்கள் எடுக்க முடியாது

ஹதீஸ்களை அறிவிக்கக் கூடியவரான முஃன் பின் ஈஸா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : நான் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் மூலம் கேட்டறிவிக்கக் கூடிய ஹதீஸ்களை, அவை ஒவ்வொன்றையும் ஒன்றுக்கு முப்பது தடவைகள் கேட்டறிந்த பின்பே அறிவித்துள்ளேன் என்று கூறுகின்றார்கள்.

மேலும், இன்னொரு அறிவிப்பாளாரான இப்றாஹீன் பின் அப்துல்லா அல் ஹர்வி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னுடைய ஆசிரியர் ஹாஸிம் (ரஹ்) அவர்கள் மூலம் கேட்டறிந்து அறிவிக்கக் கூடிய ஒவ்வொரு ஹதீஸையும், குறைந்தபட்சம் முப்பது தடவைகளாவது நான் அவரிடம் கேட்டறிந்த பின்பே அறிவிக்கின்றேன்.

இன்னொரு அறிவிப்பாளரான இப்றாஹீம் சயீத் அல் ஜவ்ஹரி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : ஒரு ஹதீஸைப் பற்றி ஒரு நூறு வழிமுறைகள் வழியாக நான் அதனை அறிந்து கொள்ளத் தவறுவேனேயானால், அந்தக் ஹதீஸை நான் பலவீனமான ஹதீஸ் என்று நான் குறிப்பிட்டுக் கொள்வேன் என்று கூறுகின்றார்கள்.

மேலும், சுன்னாவைத் தொகுத்து வழங்குவதில் அந்தப் பேரறிஞர்கள் ஆற்றிய மகத்தான சேவை இன்றளவும், எந்த சமுதாயத்திலும் காண முடியாததொரு சேவையாக இருந்து கொண்டிருக்கின்றது. ஆஸ்மாவுல் ரிஜால் என்ற நூலைப் பற்றி பிரபலமான ஜெர்மனைச் சேர்ந்த மேற்கத்திய சிந்தனைவாதியான டாக்டர். ஸ்பிரிங்கியர் இவ்வாறு கூறுகின்றார் : இந்த அஸ்மாவுர் ரிஜாலைத் தொகுக்கும் பணிக்கு முஸ்லிம்கள் உழைத்ததைப் போன்றதொரு செயல்பாட்டை கடந்த சமுதாயத்திலும் சரி அல்லது இன்றைய சமுதாயத்திலும் சரி நாம் காண முடியாததொரு சாதனைச்

செயலாகும், அதில் அந்த நேரத்தில் வாழ்ந்த 5 லட்சம் பேர்களைப் பற்றி இன்றைக்கு நாம் அறிந்து கொள்ள முடியும் என்று கூறுகின்றா

அந்த அஸ்மாவுர் ரிஜால் என்ற நூலில், ஹதீஸ்களை அறிவிக்கக் கூடிய அறிவிப்பாளரது நம்பிக்கை, ஈமான், நடத்தை, நம்பகத்தன்மை, இறையச்சம், உண்மை, நேர்மை, ஞாபகசக்தித் திறன், புரிந்து கொள்ளக் கூடிய திறன் ஆகியவற்றைப் பற்றிக் குறிப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன. அந்த அறிவிப்பாளரது ஒப்புதல் அல்லது அவரிடம் எழும் கண்டனங்கள் ஆகிய எதனைப் பற்றியும் பொருட்படுத்தாது, அவரைப் பற்றிய தெளிவான ஆய்வறிக்கையை அந்தப் புத்தகத்திலே தொகுத்திருக்கின்றார்கள். ஹதீஸ்களைப் புனைந்து அறிவிக்கக் கூடியவர்களின் பெயர்களைத் தனித்தனியாக வகைப்படுத்திப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் யாராவது, ஹதீஸ்களில் தன்னுடைய சொந்த வார்த்தையைச் செறுகி இருந்தாலும், அதனையும் அதில் குறிப்பிட்டுள்ளார்கள். ஹதீஸ்களை அறிவிக்கக் கூடிய அறிவிப்பாளர்களது தொடரில் ஏதாவது குளறுபடிகள், அல்லது தொடர்பறுந்து இருந்தால், எந்த இடத்தில் ஆரம்பத்திலா, நடுவிலா அல்லது இறுதியிலா என்ற விவரங்கள் யாவும் தனித்தனியே குறிப்புகளிடப்பட்டிருக்கின்றது. ஹதீஸ்களில் பித்அத்தான ஹதீஸ்களை அறிவிக்கக் கூடியவர்கள், சரியான இறைநம்பிக்கையற்றவர்கள் அறிவிக்கக் கூடிய ஹதீஸ்களும் தனித்தனியே வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும் மிகைப்படுத்திச் சொல்லக் கூடியவர்கள் அல்லது நினைவாற்றல் குறைந்தவர்கள் அறிவிக்கக் கூடிய ஹதீஸ்களும் தரம் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

## சுன்னா - ஹதீஸ்கள் தொகுக்கப்பட்ட முறைகள்

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சுன்னா - ஹதீஸ்களைத் தொகுக்கும் பணி, அவர்கள் மரணமடைந்ததன் பின்னால், 200-250 ஆண்டுகள் கழித்துத் தான் ஆரம்பமானது. இமாம் புகாரி (ரஹ்), இமாம் முஸ்லிம், இமாம் அபூதாவூது, இமாம் நஸயீ, மற்றும் இமாம் இப்னு மாஜா இன்னும் பலர் இந்தக் காலப் பிரிவில் தான் சுன்னாவைத் தொகுக்குப் பணியை ஆரம்பித்தார்கள். இதன் காரணமாகவே சிலர், அதாவது, முஹம்மது (ஸல்) அவர்களது காலப் பிரிவிற்குப் பின் வந்தவர்களால் ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டிருப்பதனால், அவற்றைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று கூறுகின்றார்கள்.

ஆனால் நாம் இங்கொன்றைக் கவனிக்க வேண்டும். முஹம்மது (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலப் பிரிவில், இன்றுள்ளது போன்ற எழுத்துப் பணிகள் போன்ற வசதிகள் இல்லை என்பதை விட, மக்கள் தாங்கள் அறிந்ததை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, அதன் மூலம் தங்களது மார்க்க விசயங்களை செயல்படுத்த ஆரம்பித்தார்கள். இங்கே நாம் கீழே கொடுத்திருக்கின்ற நபித்தோழர்கள் யாவும், பல்வேறு குலங்கள், கோத்திரத்தார்களுக்கு அழைப்புப் பணிக்காகவும், ஒப்பந்தங்களை எழுதுவதற்காகவுமே, முஹம்மது (ஸல்) அவர்களுடன் இருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் ஒவ்வொருவரது தனிப்பட்ட கடமைகள் என்னவாக இருந்தது என்பது பற்றி வரலாற்றின் பக்கங்களில் தெளிவாகவே குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பது நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மையாகும்.

1. காலித் பின் சயீத் பின் அல் ஆஸ் (ரலி)
2. முகீரா பின் சுப்பா (ரலி)
3. ஹஸீன் பின் நுமைர் (ரலி)
4. ஜஹீம் பின் ஸல்த் (ரலி)

5. ஹு தைஃபா பின் யமான் (ரலி)

6. முகைப் பின் அபி ஃபாத்திமா (ரலி)

7. அப்துல்லா பின் அர்கம் (ரலி)

8. அலா பின் உக்பா (ரலி)

9. ஜு பைர் பின் அவ்வாம (ரலி)

10. உஸ்மான் பின் அஃபான் (ரலி)

11. முஅவியா பின் சுஃப்யான (ரலி)

12. அலி பின் அபிதாலிப் (ரலி)

13. ஜைத் பின் சாபித் அன்சாரி (ரலி)

14. ஹன்ழலா பின் ரபீஹ் (ரலி)

15. அலா பின் ஹழ்ரமி (ரலி)

16. அபான் பின் சயீத் (ரலி)

17. உபை இப்னு கஃப் (ரலி)

மேலும், கீழே கொடுக்கப்பட்டுள்ள இவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்ததோடு, இறைத்தூதர் (ஸல்) அவர்களது கட்டளைப்படி எழுதவும், வாசித்துக் காட்டவுமே பணிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு வேறு பணிகள் எதுவும் ஒதுக்கப்படவில்லை.

1. கஅப் பின் மாலிக் (ரலி)

2. உமர் பின் கத்தாப் (ரலி)

3. அப்துல்லா பின் உமர் (ரலி)

4. கப்பாப் பின் அர்த் (ரலி)

5. சயீத் பின் ஜைத் (ரலி)

6. அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி)

7. அனஸ் பின் மாலிக் (ரலி)

8. அப்துல்லா பின் அபீ அவ்ஃபா (ரலி)

9. சயீத் பின் உபாதா (ரலி)

10. சமுரா பின் ஜு ன்துப் (ரலி)

11. அப்துல்லா பின் அம்ர் பின் ஆஸ் (ரலி

12. ஜாபிர் பின் அப்துல்லா (ரலி)

13. ஹாதிப் பின் அபீ பல்தா (ரலி)

14. அபூ ஹு ரைரா (ரலி)

15. ராஃபீ பின் கதீஜ் (ரலி)

16. அபூ ராஃபீ மஸ்ரீ (ரலி)

17. அப்துல்லா பின் மஸ்ஊது (ரலி)

18. ஃபாத்திமா பின்த் கத்தாப் (ரலி)

முஹம்மது (ஸல்) அவர்களின் பல்பேறு பணிகளைக் கவனித்து வந்த இவர்கள், தங்களது விருப்பம் மற்றும் பற்றுதல் காரணமாக முஹம்மது (ஸல்) அவர்களது செயல்களையும் இவர்கள் பதிவு செய்து வந்தார்கள். முஹம்மது (ஸல்) அவர்களும் கூட தன்னுடைய சுன்னாவைப் பதிவு செய்து கொள்ளுமாறு தன்னுடைய சில தோழர்களுக்குக் கட்டளையும் இட்டுள்ளார்கள்.

ருஃபீ பின் கதீஜ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : எங்களை அர்ப்பணித்தோம்: நாங்கள் உங்களது திருநாவினால் பல்வேறு விசயங்களைப் பற்றிக் கேட்டறிந்தோம் மற்றும் அவற்றைப் பதிவு செய்து வைத்திருக்கின்றோம். இதனைப் பற்றி நீங்கள் என்ன சொல்கின்றீர்கள் என்று முஹம்மது (ஸல்) அவர்களிடம் கேட்டதற்கு, அவர்கள் கூறினார்கள் : எழுதிக் கொள்ளுங்கள், அதில் எந்தத் தவறும் இல்லை, என்றார்கள்.

ஆபு ரஃபீ மஸ்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நான் முஹம்மது (ஸல்) அவர்களது சுன்னாவை எழுதிக் கொள்வதற்கு அனுமதி கேட்டேன், அனுமதி வழங்கப்பட்டது.

ஆனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : ஒரு மனிதர் சுன்னாவை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள இயலவில்லை என்று முஹம்மது(ஸல்) அ வர்களிடம் தன்னைப் பற்றிக் குறை கூறிக் கொண்டார். முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உன்னுடைய கையைப் பயன்படுத்திக் கொள் (அதாவது, எழுதிக் கொள்) என்று கூறினார்கள்.

ஆப்துல்லா பின் அம்ர் பின் அல்ஆஸ் (ரலி) அறிவிக்கின்றார்கள் : ஆசீர்வதிக்கப்பட்ட திருத்தூதரின் நாவினால் நான் எதனையெல்லாம் கேட்டேனோ அவற்றையெல்லாம் நான் பதிவு செய்து வைத்திருக்கின்றேன், எனவே, அதனை ஞாபகப்படுத்திக் கொள்ள முடியும்.

ஆனால் குறைஷியர்கள் நான் இவ்வாறு செய்வதைக் குறை கூறி ஆர்வம் குன்றச் செய்தார்கள் மேலும் அவர்கள் சொன்னார்கள் : அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் மனிதரே! கோபத்தில் அவர் எதையாவது சொன்னால் அதையும் எழுதி வைத்து விடுவதா? ஏன்று அவர்கள் அறிவுறுத்தியதைக் கேட்ட நான் எழுதிவதை விட்டு விட்டேன். இந்த விசயத்தை முஹம்மது (ஸல்) அவர்களிடம் நான் கொண்டு சென்ற போது, என் மூலம் நீ எதை எதை எல்லாம் கேள்விப்பட்டாயோ, அவற்றை எழுதி வைத்துக் கொள், என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக, என்னிலிருந்து உண்மையைத் தவிர வேறெதுவும் வெளிவருவதில்லை என்று கூறி முஹம்மது (ஸல்) அவர்கள் எனக்கு அனுமதி தந்தார்கள், என்று அப்துல்லா பின் அம்ர் பின் அல் ஆஸ் (ரலி) அவர்கள் மேலும் கூறினார்கள்.

ஜைத் பின் தாபித் (ரலி) அவர்களை அயல் மொழிகளைக் கற்றுக் கொள்ளுமாறு முஹம்மது (ஸல்) பணித்தார்கள். ஆது மட்டுமல்ல அவற்றின் எழுத்துக்களையும் இணைத்தே கற்றுக் கொள்ளுமாறும் கூறினார்கள்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாசகங்களை நாம் சற்று விளக்குவதற்குக் கடமைப்பட்டுள்ளோம் :

நான் சொல்வதில் குர்ஆனைத் தவிர வேறெதனையும் எழுதி வைக்காதீர்கள். ( லா தக்துபு அன்னீ ஷைஅன் கைரில் குர்ஆன்)

முஹம்மது (ஸல்) அவர்களது காலத்தில் அவர்கள் எதைஎதையெல்லாம் கூறினார்களோ அவற்றை எல்லாம், ஒரே இடத்தில் நபித்தோழர்கள் எழுதி வைக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ஒரு சமயம் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு நபித்தோழரைப் பார்த்துக் கேட்டார்கள்: என்ன செய்து

கொண்டிருக்கின்றீர்கள்? நாங்கள் எதனை உங்கள் மூலம் கேட்டோமோ அதனைத் தான், என்று பதில் கூறினார்கள். ஆப்பொழுது முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வினுடைய வேதத்தை அடுத்து இன்னொரு வேதத்தையுமா நீங்கள் எழுதிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டு விட்டு, அல்லாஹ்வினுடைய வேதத்தைத் தனித்துவப்படுத்துங்கள், அதனை முழுமையாக வைத்திருங்கள் என்று கூறினார்கள்.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்னவென்றால், நபித் தோழர்கள் குர்ஆனையும் அதற்கு விளக்கமான சுன்னாவையும் ஒரே இடத்தில் எழுதி வைக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்கள் குர்ஆனையும், சுன்னாவையும் தனித்துப் பகுத்துக் காட்டக் கூடிய அளவில் எழுதி வைக்கவே அவ்வாறு கூறியிருக்கின்றார்கள் என்பதையும், சுன்னாவை எழுதவே வேண்டாம் என்ற அடிப்படையில் அவ்வாறு கூறவில்லை என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

திருக்குர்ஆனின் வசனங்கள் அந்தத் நபித்தோழர்களால் மனனமிடப்பட்டு, அதனைத் தெளிவாக அவர்கள் ஓதிய விதத்திலிருந்தே நாம் புரிந்து கொள்ளலாம், முஹம்மது (ஸல்) அவர்கள் இட்ட அந்தக் கட்டளை (அதாவது, குர்ஆனுடன் எதனையும் இணைத்து எழுதாதீர்கள்) க்கு அவசியமின்றிப் போய் விட்டது. ஏனெனில் குர்ஆன் முழுமையாக இறங்கி விட்ட பின், இந்த கட்டளைக்கான தேவை அங்கு இருக்கவில்லை என்பதேயாகும்.

இந்த ஒரு விளக்கத்திற்குப் பிறகு பல்வேறு காலகட்டங்களில் சுன்னா எவ்வாறு தொகுக்கப்பட்டது என்பது குறித்து, முஹம்மது (ஸல்) அவர்களது வாழ்க்கையில் 11 வது ஹிஜ்ரி வரை, நபித்தோழர்களது காலமான 110 வது ஹிஜ்ரி வரை, அதன் நபித்தோழர்களைப் பின்பற்றிய தாபியீன்களது காலமான 181 ஹிஜ்ரி வரை குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

முஹம்மது (ஸல்) அவர்களது சொல் மற்றும் செயல் ஆகியவற்றைப் பற்றிய பதிவுகள் தவிர்த்து, அவர்களது தொடர்புகள், ஒப்பந்தங்கள், கட்டளைகள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு அவர்கள் விடுத்த அறிவுறுத்தல்கள் ஆகிய அனைத்தும் இந்த சுன்னாவில் அடங்கக் கூடியதாக இருக்கின்றது. இவை அனைத்தும் ஹதீஸ்கள் என்றே அழைக்கப்படுகின்றன என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

### நபி (ஸல்) காலத்திலும், நபித்தோழர்கள் காலத்தில் தொகுக்கப்பட்ட ஹதீஸு த் தொகுப்புகள்

**1. ஜகாத் பற்றி தொகுப்பு :** அப்துல்லா பின் உமர் (ரலி) அறிவிக்கின்றார்கள் : அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது இறுதிக் காலத்தில் ஜகாத் - ஏழை வரி சம்பந்தப்பட்ட புத்தகம் அரசு ஊழியர்களுக்கு வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஆதில் பிராணிகளுக்கான ஜகாத் பற்றி சட்டமும் அதில் கூறப்பட்டிருந்தது. (திர்மிதி).

**2. அம்ர் பின் ஹஸ்ம் (ரலி) தொகுப்பு :** முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு தொகுப்பை, எமன் தேசத்தின் கவர்னராக இருந்த அமர் பின் ஹஸ்ம் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். இந்தத் தொகுப்பில் குர்ஆன் ஓதுவது, தொழுகை, ஜகாத், மணவிலக்கு, அடிமைகளை விடுதலை செய்வது, அதிகபட்ச தண்டனைகள், மற்றும் இரத்த இழப்பீட்டுப் பணம் ஆகியவைகள் பற்றிய குறிப்புகள் இந்தன. மேலும், பர்ளான கடமைகள், சுன்னா மற்றும் பெரும் பாவங்கள் ஆகியவற்றைப் பற்றியும் அதில் இணைக்கப்பட்டிருந்தன. (அஹ்மது, அபூதாவூது, நஸயீ, தாரகுத்னீ, தாரமீ, ஹாக்கிம்).

**3. அலி (ரலி) தொகுப்பு :** முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு தொகுப்பைப் பெற்று அதனை அலி (ரலி) அவர்கள் வசம் ஒப்படைத்தார்கள். இந்தத் தொகுப்பைப் பற்றித் தான் அலி (ரலி) அவர்கள் இவ்வாறு

வியந்து கூறினார்கள் : இறைவன் மீது சத்தியமாக! படிப்பதற்கும் அல்லது எழுதுவதற்கும் சிறப்பானதொரு புத்தகமாக குர்ஆனையும், இந்தத் தொகுப்பையும் தவிர வேறெதனையும் நாங்கள் பெற்றிருக்கவில்லை என்றார்கள். ஆதில் ஜகாத் - ஏழை வரி பற்றிய குறிப்புகள் அடங்கி இருந்தன. (அஹ்மது).

4. வாயில் பின் ஹு ஜைர் (ரலி) தொகுப்பு : வாயில் பின் ஹு ஜஜர் (ரலி) அவர்கள் தன்னுடைய சொந்த ஊரான ஹதரல் மவ்த்திற்கு திரும்புவதற்காக இருந்தார்கள். ஆப்பொழுது, முஹம்மது (ஸல்) அவர்கள், தொழுகை, நோன்பு, ஜகாத், திருமண ஒப்பந்தம், வட்டி மற்றும் மதுபானங்கள் இன்னும் இது போன்ற ஏராளமான தலைப்புகள் சம்பந்தமாக உள்ள ஒரு தொகுப்பை, அவர்களுக்கு வழங்கினார்கள். (தபரானி).

5. சஅத் பின் உபாதா (ரலி) தொகுப்பு : சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள், முஹம்மது (ஸல்) அவர்களிடம் தான் கேட்டறிந்தவற்றைக் கொண்டு, தன்னுடைய சொந்த முயற்சியால் இந்த தொகுப்பை உருவாக்கினார்கள். (திர்மிதி).

6. ஸமுரா பின் ஜு ன்துப் (ரலி) தொகுப்பு : இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உயிருடன் இருந்த பொழுதே இந்தத் தொகுப்பை ஸமுதரா பின் ஜு ன்துப் (ரலி) அவர்கள் தன்னுடைய சொந்த முயற்சியால் தொகுத்தார்கள். பின் இந்தத் தொகுப்பு அவரது மகன் சல்மான் (ரஹ்) அவர்களிடம் இருந்து வந்தது. (ஹி∴பாஸத் ஹதீஸ்).

7. ஜாபிர் பின் அப்துல்லா தொகுப்பு : ஹஜ் பற்றிய விளக்கங்கள் அடங்கிய சுன்னாவை ஜாபிர் பின் அப்துல்லா (ரலி) அவர்கள் தொகுத்திருந்தார்கள். (முஸ்லிம்).

8. அனஸ் பின் மாலிக் (ரலி) தொகுப்பு : அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் பணியாளாகப் பணிபுரிந்து வந்தவர்கள். முஹம்மது (ஸல்) அவர்களின் மூலமாகக் கேட்டறிந்தவற்றை எழுதிப் பாதுகாத்து வந்ததோடல்லாமல், தான் எழுதியவற்றை முஹம்மது (ஸல்) அவர்களிடமே வாசித்துக் காட்டி, அவர்களால் திருத்தங்களும் வழங்கப்பட்டு, அதனைப் பதிவு செய்தும் வந்தார்கள் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள்.

9. அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி) : அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் சுன்னா அடங்கிய பல புத்தகங்களை வைத்திருந்தார். (திர்மிதி). அப்துல்லா பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் மரணமடைந்த போது, அவர் வைத்திருந்த புத்தகங்கள் யாவும் ஒரு ஒட்டகம் சுமக்கும் அளவுக்கு இருந்தது. (இப்னு சாத்).

10. உண்மையின் தொகுப்புகள் : அப்துல்லா பின் அம்ர் பின் அல் ஆஸ் (ரலி) அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் சுன்னா அடங்கிய ஒரு புத்தகத் தொகுப்பை வைத்திருந்தார். இந்தப் புத்தகம் முஹம்மது (ஸல்) அவர்களிடம் நேரடியாகக் கேட்டறிந்த விசயங்கள், இது உண்மையின் தொகுப்பு என அவர் இந்தத் தன்னுடைய புத்தகத்தைப் பற்றி எப்பொழுதும் பெருமையுடன் பேசக் கூடியவராக அம்ர் பின் அல் ஆஸ் (ரலி) அவர்கள் இருந்தார்கள். (தாரமீ).

செய்யிது அபுபக்கர் கஜ்னவி (ரஹ்) அவர்களது ஆய்வின்படி, இந்தத் தொகுப்பு கிட்டத்தட்ட 5374 ஹதீஸ்களைக் கொண்டிருந்தது. இதில் உள்ள ஹதீஸ்களில் 4000 க்கும் குறைவில்லாத ஹதீஸ்கள் புகாரியிலும், முஸ்லிமிலும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதும், இந்த ஹதீஸ்கள் யாவும் ஒரே அறிவிப்பாளர் வரிசையில் இருக்கக் கூடியதும், மீண்டும் மீண்டும் அறிவிப்புச் செய்யப்படாததுமாகும்.

11. உமர் பின் அல் கத்தாப் (ரலி) தொகுப்பு : இந்தப் புத்தகத்தில் தான தர்மங்கள் பற்றியும், ஜனாத் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : உமர் (ரலி)

அவர்களால் தொகுக்கப்பட்ட ஹதீஸ்களடங்கிய புத்தகத்தை நான் வாசித்திருக்கின்றேன் என்று கூறியுள்ளார்கள். (முவத்தா - இமாம் மாலிக்).

12. உஸ்மான் (ரலி) தொகுப்பு : ஜகாத் பற்றிய அனைத்துச் சட்டங்களும் இதில் பதிவு செய்யப்பட்டிருந்தன. (புகாரி)

13. அப்துல்லா இப்னு மஸ்ஊது (ரலி) தொகுப்பு : அப்துல்லா இப்னு மஸ்ஊது (ரலி) அவர்களது மகனார் அப்துர் ரஹ்மான் (ரஹ்) அவர்கள், தன்னுடைய தந்தை தன் சொந்தக் கரங்களால் இந்த நூலைத் தொகுத்திருக்கின்றார்கள் என்று இறைவன் மீது சத்தியமிட்டுக் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள். (ஆஇனே பர்வேஸியத்).

14. முஸ்னத் அபூஹுரைரா (ரலி) : இந்தப் புத்தகத்தின் நகல்கள் நபித்தோழர்களின் காலத்தில் இருந்திருக்கின்றன. இந்த புத்தகத்தின் ஒரு நகல் எகிப்தின் கவர்னராக இருந்த அப்துல் அஜீஸ் (ரஹ்) பின் மர்வான் (இறப்பு ஹிஜ்ரி 86) அவர்களிடம் இருந்தது. இவர் தான் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் தந்தையுமாவார். (இன்திகாப் ஹதீஸ் என்ற நூலின் முன்னுரையில் உள்ளது).

15. மக்கா வெற்றியின் போது நிகழ்த்தப்பட்ட உரை : எமன் தேசத்தவரான அபு ஷாஹ் (ரஹ்) அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க, மக்கா வெற்றியின் பொழுது முஹம்மது (ஸல்) அவர்கள் ஆற்றிய உரை, அதன் முழு வடிவில் அப்படியே எழுதப்பட்டது. (புகாரி).

16. ஆயிஷா (ரலி) அவர்களது அறிவிப்புகள் : ஆயிஷா (ரலி) அவர்கள் மூலமாக அறிவிக்கப்பட்ட ஹதீஸ்கள், அவரது மாணவர் உர்வா பின் சுபைர் (ரலி) என்பவர் மூலமாகப் பதிவு செய்யப்பட்டது. (இன்திகாப் ஹதீஸ் - ன் முன்னுரையில் உள்ளது).

17. நற்சான்று பகரப்பட்ட தொகுப்பு : இந்தத் தொகுப்பைத் தொகுத்தவர் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஆவார்கள். இவர் தன்னுடைய மாணவர் ஹமாம் பின் முனப்பா (ரஹ்) என்பவருக்கு சொல்லிக் கொடுத்ததைப் பதிவு செய்யப்பட்ட தொகுப்பாகும். இது 138 சுன்னா - ஹதீஸ்களைக் கொண்டதாகும். இவை முக்கியமாக ஒழுக்கப் பண்புகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இந்தத் தொகுப்பு இப்பொழுது இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் வெளியிடப்பட்டும் இருக்கின்றது. அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 59 ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். இந்தத் தொகுப்பு நபித்தோழர்கள் வாழ்ந்த அந்தக் காலத்தில் மிகவும் போற்றத்தக்கதாக, பெருமை மிக்கதொரு கலைக்கலஞ்சியமாகவும் திகழ்ந்திருக்கின்றது. இந்தத் தொகுப்பின் முதல் பிரதி ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கின்றது. மிகப் புகழ்பெற்ற ஹதீஸ் கலையில் தேர்ச்சி பெற்ற, அவற்றை ஒப்புநோக்கும் திறமை பெற்ற டாக்டர். முஹம்மது ஹமீதுல்லா-பாரீஸ் என்பவர், டமாஸ்கஸ் நகரில் உள்ள மக்தபா ஸஹிரிய்யா நூல் நிலையத்தில் இந்தப் புத்தகத்தையும், பெர்லின் நகரில் உள்ள நூல் நிலையத்தில் உள்ள இன்னொரு தொகுப்பு, இது ஹிஜ்ரி 12 ல் வெளிவந்தது, இரண்டையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்ததில் இரண்டு தொகுப்புகளும் ஒன்றே என்பதும், ஒரே மூலத்திலிருந்து வெளி வந்தவையே என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. ஹமம் பின் முன்ப்ப (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸ்கள் இந்த நூலில் மட்டுமல்ல, முஸ்னத் அஹ்மதிலும் மற்றும் ஏனைய 6 ஹதீஸ் நூல்களிலும் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவித்தபடியே, வார்த்தைக்கு வார்த்தை மிகச் சரியான முறையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது

இதுவே சுன்னாவானது முஹம்மது (ஸல்) அவர்களது காலம் தொடங்கி, நபித்தோழர்களது காலத்திலும் பதிவு செய்யப்பட்டு வந்திருக்கின்றது என்பதற்கு, மிகச் சிறப்பானதொரு சான்றாகும்.

இந்த ஹதீஸ் தொகுப்பில் காணப்படக் கூடிய ஹதீஸ்கள் முஸ்னத் அஹ்மதில் மட்டுமல்ல, மற்ற 6 ஹதீஸ் தொகுப்புகளிலும் காணப்படுகின்றன. இந்த நூலில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்கின்றதோ, அதேபோலவே எந்த வார்த்தை மாற்றங்களும் இல்லாமல் மற்ற நூல்களிலும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது என்பதும், ஹதீஸ்களின் உண்மைத்துவத்திற்கு மிகப் பெரிய சான்றுகளாகும

18. பஷீர் பின் நஹீக் (ரஹ்) அவர்களின் தொகுப்பு : இவரும் அபூஹுரைரா (ரலி) அவர்களது மாணவருமாவார். இவர் தான் பதிவு செய்த ஹதீஸ்களை அபூஹுரைரா (ரலி) அவர்களிடம் வாசித்துக் காட்டி அவற்றைத் திருத்திய பின் பதிவு செய்திருக்கின்றார்கள். (ஜாமி பயானுல் இல்ம்).

19. நாஃபி (ரலி) அவர்களது ஏடுகள் : அப்துல்லா பின் உமர் (ரலி) அவர்கள் வாசிக்க, அவற்றை நாஃபி (ரலி) அவர்களால் எழுதப்பட்ட ஏடுகளாகும்.

### கடிதத் தொடர்புகளும், சான்றிதழ்களும்

மேலே நாம் எடுத்துக் காட்டியிருக்கும் மலை போன்ற ஹதீஸுத் தொகுப்புகள் அன்றி, முஹம்மது (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில், பல்வேறு நாடுகள், குலங்களுக்கிடையே நடந்த கடிதத் தொடர்புகள், ஒப்பந்தங்கள், சான்றிதழ்கள் ஆகியவை யாவும் எழுத்து வடிவில் தான் செய்து கொள்ளப்பட்டன. அவற்றில் சிலவற்றை நாம் இங்கே பார்ப்போம் :

அரசியலமைப்பு ஒப்பந்தம் : முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து கிளம்பி மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து வந்த பின், மதினாவில் இஸ்லாமிய அரசு ஒன்றிற்கு அடிக்கல் நாட்டிய பொழுது, அங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கிடையே உள்ள உரிமைகள், கடமைகள் தொடர்பான 53 பரிவுகளைக் கொண்ட மதினா சாசனம் ஒன்று வரையப்பட்டது. (இப்னு ஹிஸாம்).

2. ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பின்னர், முஹம்மது (ஸல்) அவர்கள் பல்வேறு நாட்டு மன்னர்கள் - கெய்ஸர், கிஸ்ரா மகாகஸ், நஜ்ஜாஸி ஆகிய மன்னர்களுக்கும், இன்னும் பஹ்ரைன், அம்மான், டமாஸ்கஸ், யமாமா, நஜ்து தமத்துல் ஜன்தல் ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்களுக்கும் இன்னும் ஹமீர் குலத்தவர்களுக்கு இஸ்லாமிய அழைப்பிதழ் அடங்கிய கடிதத்தை அனுப்பி, இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

3. ஒரு போர் நடவடிக்கைக்காக ஒரு குழு அனுப்பப்பட்ட பொழுது, எழுதப்பட்ட கடித உறை ஒன்றை அந்த இராணுவக் குழுவின் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டு, அந்தக் கடிதத்தை இன்ன இடத்தில் வைத்து பிரித்துப் பார்க்கும்படி அந்தத் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதன்படியே அந்த இராணுவத் தளபதி அந்தக் கடித உறைப் பிரித்து, முஹம்மது(ஸல்) அவர்கள் இட்டிருந்த கட்டளையின் பிரகாரம் தன்னுடைய இராணுவ நடவடிக்கையை அமைத்துக் கொண்டார். (புகாரி).

4. முஹம்மது (ஸல்) அவர்களது ஹிஜ்ரத்தின் பொழுது, அமைதி ஒப்பந்தம் ஒன்றைப் எழுதப் பெற்று, அதனை சுரக்கா பின் மாலிக் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். (இப்னு ஹிஸாம்).

5. முஹம்மது (ஸல்) அவர்கள் தன்னுடைய அடிமைகளாகிய ராஃபி (ரலி) மற்றும் அலா (ரலி) அகியோர்களை விடுதலை செய்யும் பொழுது, எழுதப்பட்டதொரு விடுதலை ஒப்பந்தப் பத்திரத்தை அவ்விருவரிடமும் முஹம்மது (ஸல்) அவர்கள் கையளித்தார்கள். (ஸஹிஃபா ஸஹிஹியா, முஸ்னத் அஹ்மது).

6. எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் பல இடையிலேயே முறிக்கப்பட்டன : ஹிஜ்ரி 2 ல் சும்ரா குலத்தவர்களுடனும், ஹிஜ்ரி 5 ல் ஃபரஸா மற்றும் கதஃபான் குலத்தவர்களுடனும், ஹிஜ்ரி 6 ல்

மக்கத்துக் குறைஷிகளுடனும், ஹிஜ்ரி 9 ல் அகீதர் பின் அப்துல் மாலிக் என்பவருடனும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் முறிக்கப்பட்டன. (இப்னு சாத், தபரானீ, இப்னு ஹிஸாம் அல் வஸைக்)

7. ஒரு நபித்தோழரைக் கொலை செய்ததற்குப் பகரமாக, இரத்த இழப்பீட்டுத் தொகையைச் செலுத்துமாறு கைபரில் வசித்த யூதர்களுக்கு முஹம்மது (ஸல்) கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்கள்.

8. முஆத் இப்னு ஜபல் (ரலி) அவர்களது மகன் இறந்த செய்தியை அறிந்த முஹம்மது (ஸல்) அவர்கள், எழுதப்பட்ட இரங்கற் கடிதம் ஒன்றைப் பெற்று, எமனின் கவர்னராக இருந்த முஆத் இப்னு ஜபல்(ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். (முஸ்தத்ரிக் ஹாகிம்).

9. மக்காவிற்குச் செல்லக் கூடிய உணவுப் பொருட்களைத் தடுக்க வேண்டாம் என்று அறிவுரையுடன் கூடிய கடிதம் ஒன்றை துமாமா (ரலி) அவர்களுக்கு முஹம்மது(ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். (ஃபத்ஹு ல் பாரி).

10. ஜபல் குத்ஸ் ன் அடிவாரத்தில் பிலால் பின் ஹாரிஸ் முஸ்னி என்பவருக்கு நிலம் கொடுக்குமாறு உத்தரவடங்கிய கடிதம் ஒன்றை முஹம்மது (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.

11. இரத்த இழப்பீட்டுத் தொகையைச் செலுத்துமாறு பல்வேறு குலத்தவர்களுக்கு முஹம்மது (ஸல்) அவர்கள் பல கடிதங்கள் எழுதியுள்ளார்கள்.

## தாபியீன்கள் (நபித்தோழர்களைப் பின்பற்றியவர்கள்) காலத்தில் தொகுக்கப்பட்ட ஹதீஸ்கள் (ஹிஜ்ரி 181 வரை).

முஹம்மது (ஸல்) அவர்கள் காலத்தில் தொகுக்கப்பட்ட சுன்னா - ஹதீஸ்களை மட்டுமல்ல, நபித்தோழர்களது காலத்தில் தொகுக்கப்பட்ட சுன்னா - ஹதீஸ்களையும் சேர்த்தும், இன்னும் கிடைக்கப் பெற்ற ஹதீஸ்களையும் சேர்த்து பாகம் பாகமாக ஹதீஸ் நூல்களைத் தொகுக்கும் பணியில் தாபியீன்களினுடைய காலத்தில் வாழ்ந்த ஹதீஸ் கலை இமாம்கள் ஈடுபட்டார்கள். அவர்களில் போற்றத்தக்க பணிகள் செய்த, நினைவு கூறத்தக்கவர்களில் சிலரை உங்களுக்கு நாம் அறிமுகப்படுத்தி வைக்கின்றோம் :

1. உர்வா (ரலி) அவர்கள் புனிதப் போர்கள் குறித்த ஹதீஸ் தொகுப்புகளைச் சேகரித்தவர். (தஹ்ஸீப் வ தஹ்ஸீப்).

2. தாவூஸ் (ரஹ்) இரத்த இழப்பீட்டுத் தொகை சம்பந்தமாக ஹதீஸ்களைத் தொகுத்தவர். (பைஹகி)

3. காலித் பின் மதான் அல் கலாயீ (ரஹ்) அவர்கள் பல்வேறு ஹதீஸ்களைத் தொகுத்தவர். (தத்கிரா குஃப்பாஸ் பாகம் 1)

4. வஹ்ஹாப் பின் முனப்பா (ரஹ்) அவர்கள் ஜாபிர் பின் அப்துல்லா (ரலி) அவர்கள் வழியாக அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸ்களைத் தொகுத்தவர். (தஹ்ஸீப் அத் தஹ்ஸீப்).

5. சல்மான் யஷ்கரி (ரஹ்) அவர்கள் ஜாபிர் பின் அப்துல்லா (ரலி) அவர்கள் வழியாக அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸ்களைத் தொகுத்தவர். (தஹ்ஸீப் அத் தஹ்ஸீப்).

6. அபூ ஸினாத் (ரஹ்) அவர்கள் தன்னுடைய ஆசிரியர் மூலம் கேள்விப்பட்ட அனைத்து ஹலால் மற்றும் ஹராம் சம்பந்தமான அனைத்து ஹதீஸ்களையும் தொகுத்தளித்தார். (ஜாமி பயானுல் இல்ம், பாகம் 1).

7. இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் நற்சான்றுகளுடன் கூடிய ஹதீஸ்களைத் தொகுத்து, அல் முவத்தா என்ற ஹதீஸ் நூலை உருவாக்கினார். இன்றைக்கு இருக்கும் ஹதீஸ் நூல்களில் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களுடைய இந்த அல் முவத்தா நூல் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கின்றது.

8. முஹம்மது பின் முஸ்லிம் பின் ஷிஹாப் சுஹ்ரி (ரஹ்) அவர்கள் தான் மாணாக்கராக இருந்த பொழுது, நபித்தோழர்களது செயல்பாடுகளையும், அவர்களது கருத்துக்களையும் உள்ளடக்கிய தொகுப்பு ஒன்றைத் தயாரித்தார். (ஜாமி பயான் அல் இல்ம்).

9. உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபாக இருந்த (சஃபர் 99 முதல் ரஜப் 101 வரை) காலத்தில், ஹதீஸ்களைச் சேகரித்து தொகுப்பதற்காக என அரசின் மேற்பார்வையில் அமைந்த குழு ஒன்றை ஏற்படுத்தினார். ஹதீஸ்களைச் சேகரித்து தொகுப்பதற்காக வேண்டி, இஸ்லாமிய நாடுகளில் உள்ள அனைத்து அறிஞர் பெருமக்களுக்கும் இவர் உத்தரவு பிறப்பித்து, அதனைச் சட்டமாகவும் இயற்றினார். இதன் காரணமாக தலைநகர் டமாஸ்கஸை நோக்கி மிகப் பெரிய ஹதீஸ் தொகுப்புகள் வந்து குவியத் துவங்கின. இவ்வாறு வந்த ஹதீஸ்களைத் தரம் பிரித்து, அதன் நம்பகத் தன்மை போன்றவற்றை ஆய்வு செய்து, அவற்றை வகைப்படுத்துவதில் மிகப்பெரிய சுன்னா - ஹதீஸ் கலை அறிஞராகிய முஹம்மது பின் முஸ்லிம் பின் ஷிஹாப் சுஹ்ரி (ரஹ்) அவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். இவர் ஹிஜ்ரி 124 ல் மரணமடைந்தார். இவ்வாறு தொகுக்கப்பட்ட ஹதீஸ்களின் நகல்கள் பல்வேறு முஸ்லிம் நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த காலகட்டத்தில் சுன்னாவைத் தொகுப்பதில் ஈடுபட்டவர்களில் சிலரை இங்கு தருகின்றோம் :

1. அப்துல் அஜீஸ் பின் ஜரீஹ் அல் பஸ்ரி (ரஹ்), மக்கா நகரைத் தயாகமாகக் கொண்டவர், இறப்பு 150 ஹி.

2. முஹம்மது பின் இஸாக் (ரஹ்) மதினாவைச் சேர்ந்தவர், இறப்பு 151 ஹி.

3. முஅம்மர் பின் ரஷீத் (ரஹ்), எமனைச் சேர்ந்தவர், இறப்பு 153 ஹி.

4. சயீத் பின் உர்வா (ரஹ்) பஸ்ரா நகரைச் சேர்ந்தவர், இறப்பு 16 ஹி.

5. அப்துர் ரஹ்மான் பின் அம்ர் அவ்ஸாயி (ரஹ்) சிரியாவைச் சேர்ந்தவர். இறப்பு 157 ஹி.

6. முஹம்மது பின் அப்துர் ரஹ்மான் ( ரஹ்), மதினாவைச் சேர்ந்தவர், இறப்பு 157 ஹி.

7. ரபீஃ பின் சபீஹ் (ரஹ்), பஸ்ராவைச் சேர்ந்தவர், இறப்பு 160 ஹி.

8. சுஃப்யான் சவ்ரி (ரஹ்), கூஃபா வைச் சேர்ந்தவர், 161 ஹி.

9. ஹமத் பின் அபி முஸ்லிம் (ரஹ்) பஸ்ராவைச் சேர்ந்தவர், இறப்பு 167 ஹி.

10. மாலிக் பின் அனஸ் (ரஹ்) மதினாவைச் சேர்ந்தவர், இறப்பு 179 ஹி.

11. இமாம் சாபி, இமாம் சுஹ்ரி, இமாம் மஹ்கூல், இமாம் காஜி அபுபக்கர் ஹஸ்மி (ரஹி), தாபியீன்கள் காலத்தில் வாழ்ந்த நினைவு கூறத்தக்க அளவில் மிகச் சிறப்பாக ஹதீஸ்களைத் தொகுத்தளித்தவர்கள். (ஹிஃபஸத் ஏ ஹதீஸ்).

12. ஜாமிஇ சுஃப்யான் சவ்ரி, ஜாமிஇ இப்னுல் முபாரக், ஜாமிஇ இமாம் அவ்ஸாயி

13. ஜாமிஇ இப்னு சுரைஜ், முஸ்னத் அபு ஹனிஃபா, கிதாபுல் கராஜ் காஸி அபு யூசுப், இமாம் முஹம்மது அவர்களின் கிதாப் அல் அஸார், ஆகியவைகளும் இந்த கால கட்டத்தில் எழுதப்பட்ட மிகச் சிறந்த ஹதீஸ் நூல்களாகும். (அஈனே பர்வேஸியத் பாகம். 4).

இந்த மறுமலர்ச்சிக் கால கட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஹதீஸ்களைத் தொகுக்கும் இந்தப் பணி கிட்டத்தட்ட 3 நூற்றாண்டுகள், இதே வலிமையுடன் இந்தப் பணி தொய்வின்றி மார்க்க அறிஞர்களால் தொகுக்கப்பட்டது, மட்டுமல்ல தாபியீன்களைப் பின்பற்றி தபாதாபியீன்களின் காலத்திலும், அதாவது ஹிஜ்ரி 181 க்குப் பிறகும் இந்தப் பணி தொடர்ந்தது. மூன்று நூற்றாண்டுகளுக்குள்ளாக இப்படித் தொகுக்கப்பட்ட ஹதீஸ்களில், முஸ்னத் வகையில் அமைந்த ஹதீஸ் தொகுப்புகள் மட்டும் 100 க்கும் அதிகமாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மிகச் சிறப்பான கால கட்டத்தில் தொகுக்கப்பட்ட சான்று பகரக் கூடிய அளவில் மிகச் சிறப்பான ஆதாரங்களுடன் தொகுக்கப்பட்ட ஹதீஸ் தொகுப்புகள் பல தொகுக்கப்பட்டன. அவையாவன : சுனன் அத் தாரமீ, ஸஹீஹ் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம், சுனன் அபூதாவூது, ஜாமிஇத் திர்மிதி, சுனன் இப்னு மாஜா, சுனன் நஸயீ ஆகிய ஹதீஸ் தொகுப்புகளாகும்.

மேலே இது வரை நாம் பார்த்த விளக்கங்கள், ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஹதீஸ்களானது முறையே

முதலாவது : முஹம்மது (ஸல்) அவர்களது காலத்திலேயே எழுத்தில் எழுதி தொகுக்கப்பட்டது

இரண்டாவது : முஹம்மது (ஸல்) அவர்களது காலத்தில், அவர்களது தோழர்களால் எழுதப்பட்ட பல ஹதீஸ் தொகுப்புகள் தாபியீன்களது காலத்திலும் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. அதன் மூலம் தாபியீன்கள் தொகுத்த ஹதீஸ் நூல்களில் முஹம்மது (ஸல்) அவர்கள் முதலாக யார் யாரெல்லாம் அந்த ஹதீஸை அறிவிப்புச் செய்தார்களோ, அதன் தொடராகவே ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டிருப்பதுடன், முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் இறுதி அறிவிப்பாளருக்கும் இடையே எந்தவித தொடர்பறுந்து போய் விடாமல், இன்று வரை ஆதாரங்களுடன் ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்டு இருந்து வருவதை நாம் கண்டு வருகின்றோம்.

மூன்றாவதாக : மிகச் சரியான ஆதாரங்களுடன் அமைந்த ஹதீஸ் நூல்கள் இன்று நம்மிடையே இருந்து வருகின்றன, அவை சந்தேகத்திற்கு இடமில்லாமல் மிகச் சிறப்பாகத் தொகுக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, அது எந்தத் தொடர்புகள் வழியாக யார் யார் மூலமாக அறிவிக்கப்பட்டதோ அவ்வாறே, முஹம்மது (ஸல்) அவர்கள் காலம் முதல் இனி வரக் கூடிய சந்ததிகள் வரை பாதுகாக்கப்பட்ட அளவில் தொகுப்புகளாக நம்மிடையே இருந்து வருகின்றன.

என்னருமைச் சகோதரர்களே!

இன்று நம்மிடையே பல சகோதரர்கள் ஹதீஸ்களைப் பற்றியும், அதன் நம்பகத் தன்மை பற்றியும் அடிப்படையே இல்லாத கேள்விகளை எழுப்புவதைப் பார்த்து வருகின்றோம். மேலும் அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்திற்கு பின், 200 – 250 ஆண்டுகள் கழித்து எழுதப்பட்டவைகள் தானே இந்த ஹதீஸ் நூல்கள் என்று தவறானதொரு பிரச்சாரத்தையும் இவர்கள் செய்து வருகின்றார்கள்.

நிச்சயமாக இந்த வாதத்தின் பின்னால் ஒரு சதி அடங்கி இருக்கின்றது. அதாவது அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனை விட்டும், அந்தத் திருக்குர்ஆனுக்கு விளக்கமாக அமைந்திருக்கின்ற முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்வியல் நடைமுறைகளான இந்த ஹதீஸ் தொகுப்புகளை விட்டும், இந்த முஸ்லிம் உம்மத்தை அப்புறப்படுத்தி, அவர்கள் மீது மேற்கத்திய சிந்தனைகளின் தாக்கத்தைப் படிய வைப்பதே அந்த சதியின் நோக்கமாகும். முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய வேதத்திற்கும் தாய்-சேய் உறவு போல் இருந்த வருகின்ற அந்த பந்தத்தை அறுத்தெறிவதே இந்தக் கயவர்களின் நோக்கமாகும் என்பதை என்னருமை சமுதாயத்தவர்களே உணர்ந்து கொள்ளுங்கள்.

அல்லாஹ் நாடினால், இத்தகைய கயவர்களின் கபட நாடகத்தை வெற்றி பெறச் செய்ய மாட்டான். அவர்களது நோக்கத்தில் தோல்வியையே தழுவ வைப்பான்.

## ஹதீஸ் அல் குத்ஸீ

சில ஹதீஸ்கள் அல்லாஹு த்தஆலா கூறுகின்றான் என்ற தொடரையும் இணைத்து நபி (ஸல்) அவர்களால் அறிவிப்புச் செய்யப்பட்டன. இந்த ஹதீஸ்கள் ஹதீஸ் அல் குத்ஸீ என்றழைக்கப்படுகின்றன. இந்த ஹதீஸ்களின் கருத்து நபி (ஸல்)அவர்களுக்கு அருள் செய்யப்பட, தன்னுடைய சொந்த வார்த்தைகள் மூலம் மக்களுக்கு அதனைத் தெளிவுபடுத்தினார்கள்.

அல்லாஹ்வின் வசனங்களால் மட்டும் உருவானது புனித திருமறைக் குர்ஆன். அவற்றைப் பெற்று, மக்களுக்குஅவற்றைக் கற்பித்து, விளக்கி, அதன் ஆணைகளைப் பின்பற்றி நடக்கும்படி வேண்டுவது நபிகாளரின் கடமை யாக அமைந்தது. எவ்வாறாயினும் குத்ஸீ என அழைக்கப்படாத ஏனை ஹதீஸ்கள் முற்றும் அலலாஹ்வின் உந்துதல் இன்றியே உருவானவை என்று கூற முடியாது. நபிகளார் ஒரு போதும் அல்லாஹ்வின் வழிகாட்டுதல் இன்றி இருந்தவர் அல்லர். நபிகளாரின் இஜ்திஹாத் கூட அல்லாஹ்வின் அங்கீகாரம் பெற்றன. அவற்றின் விளக்கங்கள் குறைந்த கட்டங்களில் அல்லாஹ்வால் திருத்தி அமைக்கப்பட்டன. ஆகவே ஹதீஸ்களில் ஒரு குறிப்பிட்ட வகை ஹதீஸ்களைக் குத்ஸீயான ஹதீஸ்கள் எனக் கொள்ளலாம்.

ஹதீஸ் குத்ஸிக்கான ஓர் உதாரணம் :

அபூதர் (ரலி) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : பெருமையும் புகழும் மிக்க அல்லாஹ் கூறுகின்றான் : என் அடியார்களே! நான் அடக்குமுறையை எனக்குத் தடைசெய்யப்பட்டதாக்கி உள்ளேன். உங்களுக்கும் அதனைத் தடை செய்யப்பட்டதாக்கி உள்ளேன். எனவே நீங்கள் ஒருவர் மீதொருவர் அடக்கு முறையைக் கைக்கொள்ளாதிருப்பீர்களாக! எனது அடியார்களே! என்னால் நேர்வழி காட்டப்படாதவர்கள் அனைவரும் தவறிழைக்கக் கூடியவர்களாயிருப்பர். எனவே என்னிடமிருந்து நேர்வழியை வேண்டி நில்லுங்கள். நான் உங்களை நேர்வழியில் செலுத்துவேன். ஓ! என் அடியார்களே! என்னால் உணவளிக்கப்படுபவர்கள் தவிர்ந்த நீங்கள் அனைவரும் தேவைகள் மிகுந்தவர்களாகவே இருப்பீர்கள். எனவே என்னிடமிருந்து உணவை யாசியுங்கள். நான் அதனை உங்களுக்குத் தரச் சித்தமாக இருக்கின்றேன். ஓ! என் அடியார்களே! என்னிடமிருந்து ஆடைகள் பெற்றோர்தவிர மற்ற அனைவரும் நிர்வாணமாகவே இருக்கின்றீர்கள். எனவே என்னிடமிருந்து ஆடைகளைக் கேளுங்கள். நான் உங்கைள ஆடைகள் அணிந்தவர்களாய்ச் செய்யலாம். ஓ என் அடியார்களே! நீங்கள் இரவும் பகலும் தவறுகள் இழைத்தவர்களாயிருக்கின்றீர்கள். நான் உங்கள் பாவங்களை மன்னிக்கத் தயாராகி இருக்கின்றேன். எனவே என்னிடம் மன்னிப்புக் கேளுங்கள். நான் உங்களை மன்னிக்கக் கூடுமாயிருக்கும். ஓ என் அடியார்களே! நீங்கள் எனக்குத் தீங்கிழைக்கவோ, நன்மைகள் செய்யவோ இயலாது. ஓ என் அடியார்களே! உங்கள் வரிசையில் இருக்கும் ஆக முந்தியவரும், ஆகப் பிந்தியவரும் அதாவது உங்களது முழு மனித சமூகமும் இணைந்து ஜின்களையும் சேர்த்துக் கொண்டு நீங்கள அனைவரும் ஒருவரே போன்று இணைந்து இறையுணர்வு கொண்டோராயிருந்தாலும் கூட, நீங்கள் எனது சக்திக்கு எதனையும் சேர்ப்பவர்களாக மாட்டீர்கள். ஓ என் அடியார்களே! உங்களில் ஆக முந்தியவரும், ஆகப் பிந்தியவரும் உங்களது முழு மனித சமூகமும் இணைந்து ஜின்களையும் சேர்த்துக் கொண்டு, தனியொரு மனிதனின் இதயனே போலத் தீங்கு இழைப்பதில் ஒன்றுபட்டிருந்தாலும் கூட, எனது சக்திக்கு எவ்வித பாதகமும்

இழைத்தவர்களாக மாட்டீர்கள். ஓ என் அடியார்களே! உங்களில் ஆக முந்தியவரும் ஆகக் கடைசியானவரும், உங்களது முழு மனித சமூகமும் இணைந்து, ஜின்களையும் சேர்த்துக் கொண்டு ஒரு வெளியில் நின்றவர்களாக என்னிடம் யாசித்து, ஒவ்வொருவருக்கும் நான் அவரவர்கள் வேண்டுவனவற்றைக் கொடுத்தாலும், சமுத்திரத்தில் ஓர் ஊசியை நுழைத்து எடுப்பதனால் அதற்கேற்படக் கூடிய நஷ்டத்தினும் பார்க்க எவ்வித நஷ்டமும் எனக்கேற்படுவதில்லை. ஓ என் அடியார்களே! நான் பதிவு செய்து வைத்திருக்கும் உங்கள் செயல்களனைத்துக்குமான கூலியை, நிச்சயம் நான் உங்களுக்குத் தருவேன். அதனால் நன்மையே பெறுவோர் அல்லாஹ்வைப் போற்றுவார்களாக! அதனைப் பெறாதோர் தன்னைத் தான் குறை கூறுவதேயன்றி வேறு எவரையும் குறை கூறாதீர்கள்.

## நபித்தோழர்கள் ஹதீஸ்கள் ஒப்பிட்ட விதம்

### அபூபக்கர் (ரலி) :

ஒரு முறை ஒரு முதிய மாது அபூபக்கர் (ரலி) அவர்களிடம் சென்று, தனது பேரன் விட்டுச் சென்ற சொத்திலிருந்து தனக்கு கிட்ட வேண்டிய பங்கு குறித்து வினவினார். அதற்கு அபூபக்கர் (ரலி), உமக்குக் கிட்ட வேண்டிய பங்கு குறித்து அல்லாஹ்வின் திருமறையில் நான் எதனையும் காணவில்லை, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் இது குறித்து எதுவும் கூறியதையும் நான் அறியவில்லை என்றும் அவர் கூறினார்.

பின்னர் அபூபக்கர் (ரலி) இது குறித்து தன்னுடைய தோழர்களிடம் வினவினார். நபி (ஸல்) பேரனின் சொத்தில் ஆறில் ஒரு பங்கு பாட்டிக்குச் சேருமெனக் கூறியதாக முகீரா என்ற தோழர் கூறினார். அப்போது, நீங்கள் கூறியதை உறுதிப்படுத்த உம்மோடு யாரும் இருக்கின்றார்களா? என்று வினவினார்கள் அபூபக்கர் (ரலி) அவர்கள். அப்போது, முஹம்மது பின் மஸ்லமா அல் அன்சாரி (ரலி) எழுந்து முகீரா (ரலி) அவர்கள் கூறியவாறே கூறினார்.

இவற்றைச் செவிமடுத்த அபூபக்கர் (ரலி) அவர்கள் அம் முதிய மாதுவுக்கு, அவருடைய பேரன் சொத்திலிருந்து ஆறில் ஒரு பங்கை வழங்குமாறு உத்தரவிட்டார்கள்.

இச்சம்பவம் குறித்து நான்காம் நூற்றாண்டின் பேரறிஞரான அல் ஹாகிம், நபி (ஸல்) அவர்களின் ஹதீஸை ஏற்பதில் மிகவும் கவனத்துடன் முதன் முதலில் செயல்பட்டவர் அபூபக்கர் (ரலி) அவர்களே என்று கூறினார். அவர் ஒரு சுன்னாவைக் கேட்ட பொழுது, முதலாமவர் கூற்றிலிருந்து அதனை ஏற்று விடவில்லை. மற்றும் ஒருவரைக் கொண்டு அது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர் ஏற்றார்.

### உமர் (ரலி) :

இரண்டாம் கலீபா உமர், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒப்பீட்டு முறையைக் கையாண்டார்கள் என்பதை நாம் காணலாம்.

அபூமூஸா அல் அஷ் அரீ (ரலி) அவர்கள் உமர் (ரலி) அவர்களைக் காணச் சென்றார்கள். உமர் (ரலி) அவர்களின் வீட்டு வாசலில் நின்று மும்முறை ஸலாம் கூறினார். பதில் கிட்டாது விடவே அவர் திரும்பிச் செல்லலானார்.

அப்போது உமர் (ரலி), அவரை அழைத்து, அபூ மூஸாவை வீட்டினுள் நுழையாது தடுத்ததென்ன என வினவினார். அபூ மூஸா (ரலி) கூறினார்கள் : அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூற நான் கேட்டேன். உங்களில் ஒருவர் மும்முறை அனுமதி கேட்டு அது கிட்டாவிடின் அங்கிருந்து சென்று விட வேண்டும்.

உமர்(ரலி) அவரிடம், நபி (ஸல்) அவர்களின் கூற்றை உறதிப்படுத்தும்படியும் அவ்வாறு செய்யாவிடின் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூறினார். பின்னர் தனக்குச் சாட்சியாக அபூ மூஸா (ரலி) அவர்கள் ஒருவரைக் கூட்டி வந்தார். உமர் (ரலி) அவர்கள் அபூ மூஸா (ரலி) அவர்களிடம், அவரது கூற்றை தான் ஏற்பதில் சந்தேகம் கொள்ளவில்லை என்றும், நபிகளாரின் ஸு ன்னாவை அறிவிப்புச் செய்வதில் ஒவ்வொருவரும் மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தவே தான் அவ்வாறு கூறியதாகவும் கூறினார்.

### அபூஹுரைரா (ரலி):

நபிகளாரிடமிருந்து அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஒரு ஹதீஸை அறிவிப்புச் செய்தார். மரணமுற்ற ஒருவருக்கான தொழுகையை நிறைவேற்றப்படும் வரை அந்த ஜனாஸாவோடு இருப்பவருக்குரிய நன்மை ஒரு கீராத் ஆகும். மரணமுற்றவர் அடக்கம் செய்யப்படும் வரை காத்திருப்பவருக்குரிய நன்மை இரண்டு கீராத் ஆகும். அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி), அபூ ஹுரைரா (ரலி) விடம், அவர் நபி (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து கூறுவன குறித்துக் கவனமாக இருக்கும்படிக் கூறினார். உடன் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், இப்னு உமர் (ரலி) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு நேரே ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூட்டிச் சென்றார். ஆயிஷா (ரலி) அவர்கள் அபூஹுரைரா (ரலி) அவர்களின் அறிவிப்பை உறுதி செய்தார்கள். நாம் ஏராளமான கராரீத்களை இழந்து விட்டோம் என்று பின்னைய காலங்களில் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறலானார்கள்.

### சுன்னாவைப் பின்பற்றுவதன் அவசியம் :

எண்ணங்கள் : எண்ணங்கள் தான் செயலின் மூளையாக இருக்கின்றது. நமது எண்ணங்களைப் பொறுத்தே இறைவன் கூலியும் வழங்குகின்றான் :

உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நான் முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டிருக்கின்றேன் :

செயல்கள் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொரு மனிதனும் அவனது எண்ணத்தைப் பொறுத்தே கூலியைப் பெறுகின்றான். எனவே, ஒருவன் இந்த உலக ஆதாயத்திற்காக ஒரு இடத்தை விட்டு இன்னொரு இடத்திற்கு ஹிஜ்ரத் செய்திருப்பானேயாகில் அல்லது ஒரு பெண்ணை மணமுடிப்பதற்காக அவன் அவ்வாறு இடம் விட்டு இடம் பெயர்ந்து ஹிஜ்ரச் செய்திருப்பானேயாகில், அவன் எதற்காக ஹிஜ்ரத் செய்திருக்கின்றானோ அதனுடைய நோக்கத்தைத் தான் அவன் பெறுவான். (புகாரி).

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ் உங்களது தோற்றங்களையோ அல்லது முகங்களையோ அல்லது உங்களது செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக, உங்களது உள்ளத்தையும், அதில் உள்ள நேர்மையையும் கொண்டு நீங்கள் செய்திருக்கின்ற செயல்களைத் தான் பார்க்கின்றான். (முஸ்லிம்).

### முஹம்மது(ஸல்) அவர்களது சுன்னாவின் விளக்கங்கள் :

அபூஜுஹைஃபா (ரலி) அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறுகின்றார்கள் : யாரொருவர் நல்லதொரு செயலை ஆரம்பித்து, அதனை பிரிதொருவர் பின்பற்றும்பொழுது, அதனைப் பின்பற்றிய அனைவரது நன்மைகளையும் சேர்த்தே முன்னவருக்கும், இன்னும் யார் யாரெல்லாம்

அதனைப் பின்பற்றுகின்றார்களோ அவர்களது நன்மைகளும் சேர்த்தே எழுதப்படும், மற்றும் அந்த நற்செயலைப் பின்பற்றுகின்ற எவரது நற்செயலும் குறைக்கப்படவும் மாட்டாது. ஒரு மனிதன் கெட்ட செயல் ஒன்றைச் செய்ய ஆரம்பிக்கின்றான் என்றால், அதனைப் பின்பற்றுகின்றவர்களின் தீங்கும் முன்னவருக்குச் சேர்த்தே எழுதப்படும், இன்னும் அதனை யார் யாரெல்லாம் பின்பற்றுகின்றார்களோ அவர்களுடைய தீமைகளும் முதலாமவருக்குச் சேர்த்தே எழுதப்படும், பின்னவர்களின் தீங்கிலிருந்து எதனையும் குறைக்கப்படவும் மாட்டாது. (இப்னு மாஜா)

சுன்னாவின் சட்டங்களைப் பின்பற்றுவது இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதாகும் :

அனஸ் (ரலி) அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் மூலம் அறிவிக்கின்றார்கள் : யார் என்னுடைய வழிமுறையைப் புறக்கணிக்கின்றார்களோ, அவர்கள் என்னைச் சார்ந்தவர்களல்லர். (புகாரி)

தல்ஹா பின் அப்துல்லா பின் அவ்.்ப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நான் ஒரு ஜனஸா தொழுகையின் பொழுது (அப்துல்லா) பின் அப்பாஸ் (ரலி) அவர்களுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தேன். குர்ஆனின் ஆரம்ப அத்தியாத்திலிருந்து அவர்கள் அந்தத் தொழுகையில் ஓதி விட்டுக் கூறினார்கள் : (நான் அந்த ஆரம்ப அத்தியாத்தை ஓதியதன் காரணம்) நீங்கள் இது அல்லாஹ்வின் தூதரது வழிமுறையாகும் இது என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். (புகாரி).

சுன்னா மூன்று வகைப்படும் :

1 வாய் மூலமாகக் கிடைத்த அனுமதி

2 சைகை மூலம் கிடைத்த அனுமதி

3 சுன்னாவினால் அனுமதிக்கப்பட்டது

1 ஹு தை.்பா (ரலி) அவர்கள் முஹம்மது (ஸல்) கூறியதாக அறிவிக்கின்றார்கள் : உணவை உட்கொள்வதற்கு முன்பு பிஸ்மில்லாஹ் எனச் சொல்லி ஆரம்பிக்கவில்லை என்றால், அந்த (தட்டிலிருக்கும்) உணவு தனக்கு ஆகுமானது என எண்ணிக் கொள்கின்றான். (முஸ்லிம்)

2 நு.்மான் பின் பஷீர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நாங்கள் தொழுகைக்காகத் தயாராகி விட்டோமென்றால், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எங்களது வரிசைகளை ஒழுங்குபடுத்துவார்கள், (நேராக ஆக்குவார்கள்). நாங்கள் நேராக நின்று விட்டது அல்லாஹு அக்பர் எனக் கூறி தொழுகையை ஆரம்பித்து விடுவார்கள். (அபூதாவூது)

3 சில செயல்கள் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முன் செய்யப்படும் பொழுது, அதனை அவர்கள் ஆமோதிக்கும் முகமாக அந்தச் செயலில் திருப்தி கொண்டவர்களாக அதனைப் பற்றி எந்தத் கருத்தும் தெரிவிக்காமல் இருந்து விடுவார்கள் அல்லது அமைதியாக இருந்து விடுவார்கள். இந்த வகை ஹதீஸிற்கு ஹதீஸே தக்ரீன் என்று சொல்வார்கள்.

கைஸ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : ஒரு மனிதர் காலை (.்ப்ஜ்ர்) யின் கடமையான பர்ளுத் தொழுகைக்குப் பின்பு இரண்டு ரக்அத் தொழுகையைத் தொழுது கொண்டிருக்க முஹம்மது (ஸல்) அவர்கள் கண்டு விட்டு, காலை .்ப்ஜ்ருத் தொழுகை என்ன இரண்டு தடவைகள் தொழக் கூடியதா? என வினவினார்கள். அந்த மனிதர் இவ்வாறு பதில் கூறினார்: கடமையான பர்ளுத் தொழுகைக்கு முன்பு தொழக் கூடிய இரண்டு ரக்அத் (சுன்னத்தான) தொழுகையை நான்

தொழவில்லை. எனவே அதனை நான் இப்பொழுது நிறைவு செய்கின்றேன் எனக் கூறினார். முஹம்மது (ஸல்) அவர்களோ இது பற்றி எதனையும் கூறவில்லை அமைதியாக இருந்தார்கள் (அதாவது, அதற்கு ஒப்புதல் அளித்தார்கள்). (அபூதாவூது)

மேலே உள்ள மூன்று ஹதீஸு களும் ஒரே தரத்திலமைந்தவைகள் என்றும் இஸ்லாமிய ஷரீஅத்தினால் இறுதி முடிவாக ஏகோபித்து ஏற்றுக் கொள்ளப்பட்டதுமாகும்.

### சுன்னாவானது குர்ஆனின் விளக்கத்திற்கு ஒளி போன்றதாகும்

இஸ்லாத்தைப் பொறுத்தவரை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பது பர்ளான அடிப்படைக் கடமையாகும்.

இறைவன் தன்னுடைய திருமறையில் கூறுகின்றான் :

முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கும் நிலையிலேயே அவரை புறக்கணிக்காதீர்கள். (அல்குர்ஆன் 8:20)

(முஃமின்களே!) நீங்கள் கிருபை செய்யப்படும் பொருட்டு, நீங்கள் தொழுகையை நிலைநிறுத்துங்கள் இன்னும் ஜகாத்தைக் கொடுங்கள் மேலும், (அல்லாஹ்வின்) தூதருக்குக் கீழ்படியுங்கள்.

எவர் (அல்லாஹ்வின்) தூதருக்குக் கீழ்படிகிறாரோ, அவர் அல்லாஹ்வுக்குக் கீழ்படிகிறார் யாராவது ஒருவர் (இவ்வாறு கீழ்படிவதை) நிராகரித்தால் (நீர் வருந்த வேண்டியதில்லை, ஏனெனில்) நாம் உம்மை அவர்களின் மேல் கண்காணிப்பவராக அனுப்பவில்லை.

அல்லாஹ்வின் கட்டளைக்கு கீழ்படிவதற்காகவேயன்றி (மனிதர்களிடம்) நாம் தூதர்களில் எவரையும் அனுப்பவில்லை.

அல்லாஹ்வுக்கும், (அவன்) தூதருக்கும் கீழ்படியுங்கள் நீங்கள் (அதனால் அல்லாஹ்வினால்) கிருபை செய்யப்படுவீர்கள். (3:132).

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள் இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள் உங்களில் ஏதாவது ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்படுமானால் - மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் - அதை அல்லாஹ்விடமும், (அவன்) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள் - இதுதான் (உங்களுக்கு) மிகவும் சிறப்பான, அழகான முடிவாக இருக்கும். (4:59)

உம் இறைவன் மேல் சத்தியமாக, அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக, ஏற்றுப் பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரையில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள். (4:65)

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிபடுங்கள். இன்னும் இத்தூதருக்கு வழிபடுங்கள். - உங்கள் செயல்களை பாழாக்கிவிடாதீர்கள். (47:33)

மேலும், (நம்) தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள் இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள் மேலும், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். (59:7)

முஹம்மது (ஸல்) அவர்களது சுன்னாவைப் பின்பற்றுவது வெற்றிக்கு வழிவகுக்கும்.

இன்னும் எவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படிந்து அல்லாஹ்வுக்கு பயபக்தி கொள்கிறார்களோ அவர்கள் தாம் வெற்றி பெற்றவர்கள். (24:52)

முஃமின்களிடம் அவர்களுக்கிடையே (ஏற்படும் விவகாரங்களில்) தீர்ப்புக் கூறுவதற்காக அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் (வரும்படி) அழைக்கப்பட்டால், அவர்கள் சொல்(வது) எல்லாம் "நாங்கள் செவியேற்றோம், (அதற்குக்) கீழ்படிந்தோம்" என்பது தான் இ(த்தகைய)வர்கள் தாம் வெற்றியடைந்தவர்கள். (24:51)

(அவ்வாறு செய்வீர்களாயின்) அவன் உங்களுடைய காரியங்களை உங்களுக்குச் சீராக்கி வைப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான் அன்றியும் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் எவர் வழிப்படுகிறாரோ, அவர் மகத்தான வெற்றி கொண்டு விட்டார். (33:71)

இவை அல்லாஹ்வின் வரையறைகளாகும் எவர் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்களோ அவர்களை சுவனபதிகளில் பிரவேசிக்கச் செய்வான் அதன் கீழே ஆறுகள் சதா ஓடிக்கொண்டிருக்கும், அவர்கள் அங்கே என்றென்றும் இருப்பார்கள் - இது மகத்தான வெற்றியாகும். (4:13)

அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களுக்கும் முழுமையாகக் கட்டுப்படுவது, முழுமையான வெகுமதிகளைப் பெற்றுத் தரக் கூடியதாகும்.

நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடப்பீர்களாயின் அவன் உங்களுடைய நற்செய்கைகளில், எதையும் உங்களுக்குக் குறைக்க மாட்டான்" நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவன் மிக்க கிருபையுடையவன். (49:14)

பாவங்களுக்கான மன்னிப்பு என்பது இறைத்தூதர் (ஸல்) கட்டுப்படுவதில் இருக்கின்றது.

(நபியே!) நீர் கூறும் "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான் மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான். (3:31

முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிகின்றவர் இறைத்தூதர்களுடனும், உண்மையாளர்களுடனும், ஷஹீதுகளுடனும் மற்றும் நேர்வழி பெற்றவர்களுடனும் இருப்பார்கள்.

யார் அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்களோ அவர்கள் அல்லாஹ்வின் அருளைப்பெற்ற நபிமார்கள், ஸித்தீகீன்கள் (சத்தியவான்கள்) ஷு ஹதாக்கள் (உயிர்த்தியாகிகள்) ஸாலிஹீன்கள் (நற்கருமங்களுடையவர்கள்) ஆகியவர்களுடன் இருப்பார்கள் - இவர்கள் தாம் மிக்க அழகான தோழர்கள் ஆவார்கள். (4:69)

ஈமான் கொள்வதற்காக அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்படுகின்றோம் என்று கூறுகின்ற சிலர், ஈமான் கொண்ட பின் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிய வேண்டிய முறைப்படி உண்மையாகக் கீழ்ப்படிவதில்லை. இவர்கள் உண்மையான இறைநம்பிக்கையாளர்களல்லர்.

"அல்லாஹ்வின் மீதும், (இத்)தூதர் மீதும் நாங்கள் ஈமான் கொண்டோம் (அவர்களுக்குக்) கீழ்படிகிறோம்" என்று சொல்லுகிறார்கள். (ஆனால் அதன்) பின்னர் அவர்களிலிருந்து ஒரு பிரிவார் புறக்கணித்து விடுகின்றனர் - எனவே, இவர்கள் (உண்மையில்) முஃமின்கள் அல்லர். (24:47)

மேலும் அவர்களிடம் “அல்லாஹ் இறக்கிய (வேதத்)தின் பக்கமும், (அவனுடைய) தூதரின் பக்கமும் (தீர்ப்புப் பெற) வாருங்கள்” என்று கூறப்பட்டால், அந்த முனா∴பிக்குகள் (நயவஞ்சகர்கள்) உம்மிடமிருந்து முற்றிலும் நீங்கிக் கொள்வதையே நீர் பார்ப்பீர். (4:61)

(நபியே! இன்னும்) நீர் கூறும் “அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் வழிப்படுங்கள்.” ஆனால் அவர்கள் புறக்கணித்துத் திரும்பி விடுவார்களானால் - நிச்சயமாக அல்லாஹ் கா∴பிர்களை நேசிப்பதில்லை. (3:32).

முஹம்மது (ஸல்) அவர்களுக்கு கட்டுப்பட மறுப்பது குழப்பத்திலும், தர்கத்திலும், பகைமையிலும் தான் முடியும்.

இன்னும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் - நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் (அவ்வாறு கொண்டால்) கோழைகளாகி விடுவீர்கள் உங்கள் பலம் குன்றிவிடும் (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) நீங்கள் பொறுமையாக இருங்கள் - நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான். (8:46)

அல்லாஹ்வுக்கும் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்கும் கீழ்படிய மறுப்பது வழிகேட்டிற்கே இட்டுச் செல்லும்.

மேலும், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப்பற்றிக் கட்டளையிட்டு விட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ உரிமையில்லை ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்மான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள். (33:36)

அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட மறுப்பவர்கள் தங்களைத் தாங்களே நொந்து கொள்ளட்டும்.

இன்னும் அல்லாஹ்வுக்கும் வழிபடுங்கள் (அவன்) தூதருக்கும் வழிபடுங்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள் (இதனை) நீங்கள் புறக்கணித்துவிட்டால், (நம் கட்டளைகளைத்) தெளிவாக எடுத்து விளக்குவது மட்டுமே நம் தூதர்மீது கடமையாகும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். (5:92)

ஆகவே, நீங்கள், அல்லாஹ்வுக்கு வழிபடுங்கள் (அவனுடைய) இத்தூதருக்கும் வழிபடுங்கள் இதை நீங்கள் புறக்கணித்துப் பின்வாங்கினீர்களானால் (உங்களுக்கே இழப்பாகும்) - நம் தூதர் மீதுள்ள கடமை, தெளிவாக எடுத்துரைப்பதுதான். (64:12)

“அல்லாஹ்வுக்கு நீங்கள் கீழ்படியுங்கள் இன்னும் (அவனுடைய) ரஸூலுக்கும் கீழ்ப்படியுங்கள்” என்று (நபியே!) நீர் கூறுவீராக் ஆனால் நீங்கள் புறக்கணித்தால் அவர் மீதுள்ள கடமையெல்லாம் தம் மீது சுமத்தப்பட்ட (தூதுவச் செய்தியை உங்களிடம் அறிவிப்ப)துதான் (24:54)

அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிய மறுப்பவர்களுக்கு நரகமும், அதன் கொடுமையான தண்டனைகளும் தான் கிடைக்கும்.

எவர் அல்லாஹ்வுக்கும், அவருடைய தூதருக்கும் வழிப்படுகிறாரோ, அவரை (அல்லாஹ்) சுவர்க்கங்களில் பிரவேசிக்கச் செய்வான் அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் ஆனால் எவன் பின் வாங்குகிறானோ, அவனை (அல்லாஹ்) நோவினை தரும் வேதனையாக வேதனை செய்வான். (48:17)

**சந்தர்ப்பங்கள் சாக்காக அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களது கட்டளைகளைத் தவிர்ப்பது கூட தண்டனைக்கு உட்படுத்தி விடும்.**

(முஃமின்களே!) உங்களில் ஒருவர் மற்றொருவரை அழைப்பதுபோல் உங்களுக்கிடையில் (அல்லாஹ்வுடைய) தூதரின் அழைப்பை ஆக்காதீர்கள். உங்களிலிருந்து (அவருடைய சபையிலிருந்து) எவர் மறைவாக நழுவி விடுகிறார்களோ அவர்களை திடமாக அல்லாஹ் (நன்கு) அறிவான் - ஆகவே எவர் அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களோ அவர்கள் தங்களை சோதனை பிடித்துக் கொள்வதையோ, அல்லது தங்களை நோவினை தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும். (24:63)

**இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சுன்னாவின் சிறப்புக்கள்**

**இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவோருக்கு சுவனமே நற்செய்தியாகும்.**

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : என்னைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் சொர்க்கம் புகுவார்கள், என்னை யார் பின்பற்ற மறுத்தார்களோ அவர்களைத் தவிர! உங்களை மறுத்தவர்கள் யார்? இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பதில் கூறினார்கள் : யார் எனக்குக் கீழ்படிந்தாரோ அவர் சொர்க்கம் புகுவார், யார் எனக்குக் கீழ்ப்படியவில்லையோ, அவர் என்னை மறுத்து விட்டார், அவர் செர்க்கம் புகவே மாட்டார். (புகாரி)

**இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குக் கீழ்படிவது அல்லாஹ்வுக்குக் கீழ்படிவதாகும்**

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : யார் எனக்குக் கீழ்படிகின்றாரோ அவர் அல்லாஹ்வுக்குக் கீழ்படிகின்றார். யார் எனக்குக் கீழ்படிய மறுக்கின்றாரோ அவர் அல்லாஹ்வுக்குக் கீழ்படிய மறுக்கின்றார். யார் கலீபாவுக்கு (தலைவருக்குக்) கீழ்படிகின்றாரோ அவர் எனக்குக் கீழ்படிகின்றார், யார் தன்னுடைய கலீபாவுக்குக் கீழ்படியவில்லையோ அவர் எனக்குக் கீழ்படிய மறுக்கின்றார். (முஸ்லிம்).

**குர்ஆனையும், சுன்னாவையும் உறுதியாகக் கடைபிடிப்பவர்கள் வழிகேட்டிலிருந்து நீங்கி விட்டனர்.**

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தங்களுடைய இறுதி ஹஜ் உரையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது இவ்வாறு கூறினார்கள் என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : மீண்டும் இந்தப் பூமியில் ஷைத்தான் தன்னை வணங்கப்படுவது குறித்து அவன் நிராசையடைந்து விட்டான். எனவே, அவன் இப்பொழுது ஒரு விசயத்தில் அவன் நம்பிக்கையோடு இருக்கின்றான், அதாவது (ஷிர்க்கிற்கு அப்பால்)எதனை நீங்கள் சிறிய விசயமாகக் கருதுகின்றீர்களோ, அதன் மூலம் நீங்கள் அவனைப் பின்பற்றுவீர்கள், எனவே எப்பொழுதும் (ஷைத்தானின் வழிகேட்டில் செல்வதில் இருந்தும்) கவனமாக இருங்கள், (அறிந்து கொள்ளுங்கள்!) நான் இங்கு விட்டுச் செல்கின்றவைகளை நீங்கள் உறுதியாகப் பற்றிப் பிடித்திருக்கும் காலம் வரைக்கும் நீங்கள் வழிதவற மாட்டீர்கள். ஒன்று அல்லாஹ்வின் திருவேதமான குர்ஆன், மற்றது என்னுடைய சுன்னாவா (ன வாழ்வியல் நடைமுறைகளா)கும். (ஹாகிம்).

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : உங்கள் அனைவருக்கும் பின்னால் இரண்டு விசயங்களை நான் விட்டுச் செல்கின்றேன். அதன்படி நீங்கள் நடக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவற மாட்டீர்கள். ஒன்று இறைவனது வேதமான குர்ஆன் மற்றது என்னுடைய சுன்னாவாகும். (ஹாகிம்).

### நம்பிக்கையாளர்களுக்குள் பிணக்குகள் ஏற்பட்டால், சுன்னா தான் தீர்வாகும்.

இர்பாத் பின் சாரியா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எங்களுடன் தொழுததன் பின்பு, எங்களை நோக்கித் திரும்பி எங்களது மனங்களில் பதியத்தக்க அளவில் ஓர் உரையை நிகழ்த்தினார்கள், அந்த உரையின் தாக்கத்தினால் எங்களது இதயங்கள் நடுநடுங்கின, கண்கள் கண்ணீரைச் சிந்தின. அப்பொழுது) ஒருவர் கூறினார் : இறைத்தூதர் (ஸல்) அவர்களே, இந்த உரையானது உங்களது இறுதி உரை போலல்லவா உள்ளது. தயவுசெய்து எங்களுக்கு அறிவுரை வழங்குகங்கள் என்று கூறினார். அப்பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள், உங்களது தலைவரது சொல்லுக்கு செவிசாயுங்கள், அவருக்குக் கீழ்படியுங்கள், உங்களுக்குத் தலைவராக ஒரு அடிமை நீக்ரோ நியமிக்கப்பட்டாலும் (அவருக்குக் கீழ்படியுங்கள்), (அறிந்து கொள்ளுங்கள்), எனக்குப் பின் வாழ்பவர்களில் என்னைப் பின்பற்றுபவர்களுள் மிகுந்த வேறுபாடைக் காண்பார்கள். அந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய சுன்னாவைப் பின்பற்றுவதை உங்கள் மீது கடமையாக்கிக் கொள்ளுங்கள், நேர்வழிகாட்டப்பட்ட உங்களது கலீபாக்களின் வழியையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். இன்னும், புதினங்கள் அல்லது பித்அத் களிலிருந்து மார்க்கத்தில் புதிதாக ஒன்றை நுழைப்பதிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள், ஏனென்றால் மார்கத்தில் ஒன்றை புதிதாக நுழைப்பது பித்அத் ஆகும், ஒவ்வொரு பித்அத் தும் வழிகேட்டிற்கே இட்டுச் செல்லும். (அபூதாவூது)

### சுன்னாவை உயிர்ப்பிப்பவர், அதற்கான கூலியை மட்டுமல்ல, அதனைப் பின்பற்றுபவர்களது கூலியையும் சேர்த்தே பெறுவார்.

கதீர் பின் அப்துல்லா பின் அம்ர் பின் அஃப் முஸ்னி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : என்னுடைய தந்தை, அவரது தந்தை கூறியதாக என்னிடம் கூறியதாவது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யாரொருவர் என்னுடைய சுன்னாவை உயிர்ப்பித்து, அதன் படி செயல்பட்டாரோ, அந்த நபர் என்னுடைய சுன்னாவை உயிர்ப்பித்த நன்மையை மட்டுமல்ல, யார்யாரெல்லாம் அதன்படிச் செயல்பட்டார்களோ, அவர்களது நன்மைகளையும் சேர்த்தே வெகுமதியாகப் பெறுவார், செயல்படுபவர்களது நன்மையிலிருந்து எதனையும் குறைத்துக் கொள்ளப்பட மாட்டாது. யாரொருவர் புதினங்களை உண்டுபண்ணி, அதன்படிச் செயல்பட ஆரம்பிக்கின்றாரோ அவர், அவரது அந்த புதினத்தை உண்டுபண்ணி, அதன்படிச் செயல்பட்டதன் தீமையை மட்டுமல்ல, யாரெல்லாம் அதன்படிச் செயல்பட்டார்களோ அவர்களது தீமைகளையும் சேர்த்தே வெகுமதியாகப் பெறுவார், புதினங்களின்படி செயல்பட்டவர்களின் தீமைகளில் இருந்து எதனையும் குறைத்து விடவும் மாட்டாது. (இவர்களும் அந்த தீமைக்கு உடந்தையாக இருந்த காரணத்தால் இவர்களும் அந்தத் தீங்கிற்கு உட்பட்டவர்களாகவே கணிக்கப்படுவார்கள்). (இப்னு மாஜா)

### சுன்னாவைப் பரப்புபவர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களது பிரார்த்தனை உண்டு

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக, தன்னுடைய தந்தை தனக்குக் கூறியதாக அப்துர் ரஹ்மான் பின் அப்துல்லா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

அப்துர் ரஹ்மான் பின் அப்துல்லா (ரலி) அவர்கள் தனது தந்தை மூலமாகக் கேட்டதாக, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள் : எங்களிடமிருந்து இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சுன்னாவைக் கேட்டறிந்து, அதனை எந்த விதக் குறைவும் இல்லாமல் பிறருக்கு எடுத்து

வைத்தவர்களுக்கு இறைவன் நல்ல உடல்நலத்தையும், நல்ல மனநலத்தையும் இறைவன் வழங்குவானாக! கேட்டறிந்தவர்களை விட அதனைச் செவிமடுத்தவர்கள் நல்ல ஞாபக சக்தியைக் கொண்டிருக்கலாம். (இப்னு மாஜா).

அப்துல்லா பின் மஸ்ஊது (ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள் : இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன்:

சுன்னாவைக் கேட்டறிந்து, தான் கேட்டறிந்தவாறு பிறருக்கும் அதனை எடுத்து வைக்கின்றார்களே அவர்களுக்கு இறைவன் நல்ல உடல்நலத்தையும், நல்ல மன நலத்தையும் வழங்குவானாக! (ஏனென்றால்) கேட்டறிந்தவர்களை விட அதனைச் செவிமடுத்தவர்கள் நல்ல ஞாபக சக்தியைப் பெற்றிருக்கக் கூடும். (திர்மிதி).

## சுன்னாவின் முக்கியத்துவம்

### சுன்னாவின்படிச் செயல்படுவது ஒன்றே அதிக நன்மைகளைப் பெற்றுத் தரும்

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : மூன்று இறைத்தூதர் (ஸல்) அவர்களது தோழர்கள் தங்களது பாவங்களுக்குப் பிராயச்சித்தம் தேடி அவற்றைப் போக்கிக் கொள்ளக் கூடிய இபாதத்துக்களை அறிந்து கொள்வதற்காக, இறைத்தூதர் (ஸல்) அவர்களது வணக்க வழிபாடுகள் எவ்வாறு இருந்தன எனக் கேட்டறிந்த பின், தங்களது வணக்க வழிபாடுகளுடன் இறைத்தூதர் (ஸல்) அவர்களது வணக்க வழிபாடுகளை ஒப்பிடும் பொழுது, அது மிகக் குறைந்த அளவில் இருப்பதாக அவர்கள் தங்களுக்குத் தாங்களே முடிவு கட்டிக் கொண்டு, இறைவன் நம்முடைய கடந்த மற்றும் நிகழ்காலப் பாவங்களை மன்னிக்க வேண்டும் என்றால், இறைத்தூதர் (ஸல்) அவர்களை விட நாம் அதிகமான அமல்களைச் செய்தாக வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டார்கள். ஆவர்களில் ஒருவர் கூறினார் : நான் இனி வரும் இரவுகளில் தூங்குவதில்லை என்றும் இரவு முழுவதும் நின்று வணங்கப் போவதாகவும் கூறினார். இரண்டாமவர் கூறினார் : இனி நான் எப்பொழுதும் பகல் காலங்களில் நோன்பு நோற்றுக் கொண்டே இருப்பேன், அதில் எதையும் தவற விட மாட்டேன் என்று கூறினார். மூன்றாமவர், நான் பெண்களிடமிருந்து விலகியே இருப்பேன் என்றும் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளவே மாட்டேன் என்றும் கூறினார். ஆப்பொழுது, அங்கு வந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அந்த மூன்று நபர்களிடமும், நீங்கள் இவ்வாறு இவ்வாறு கூறினீர்களா? என்று கேட்டு விட்டு, இவ்வாறு அவர்களுக்குக் கூறினார்கள் : எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்! இறைவன் மீது சத்தியமாக! நீங்கள் இறைவனைப் பயப்படுவதைக் காட்டிலும் நான் அதிகம் பயப்படக் கூடியவனாக இருக்கின்றேன், உங்களைக் காட்டிலும் இறைவனுக்கு அதிகம் கட்டுப்பட்டு அல்லது பணிந்து நடக்கக் கூடியவனாக இருக்கின்றேன். நூன் நோன்பு வைக்கிறேன், நோன்பு வைக்காமலும் இருக்கின்றேன். நூன் இரவில் எழுந்திருக்கவும் செய்கின்றேன், தூங்கவும் செய்கின்றேன்: நான் பெண்களைத் திருமணம் செய்தும் இருக்கின்றேன். (நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்) யார் என்னுடைய சுன்னாவை விட்டும் விலகிச் சென்று விடுகின்றார்களோ, அவர்களுடன் எனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று கூறினார்கள். (புகாரி).

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : தன்னுடைய தோழர்களை ஒரு விசயம் குறித்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கட்டளையிடும் பொழுது, அவர்கள் எதனைச் செய்ய வேண்டுமோ அதைக் குறித்தே இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அவர்களுக்குக் கட்டளையிடுவார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களது தோழர்கள் கூறுவார்கள் : அல்லாஹ்வின் மீது கொண்ட நேசத்தின் காரணமாக) நாங்கள் உங்களை விரும்புகின்றோம். ஆல்லாஹ் உங்களது கடந்த கால மற்றும் நிகழ்காலப்

பாவங்களை மன்னித்துவிட்டான், எனவே நாங்கள் அதிகமதிகம் அமல்களைச் செய்வதற்கு எங்களை அனுமதியுங்கள் என்றும் அவர்கள் கூறுவார்கள். தும் தோழர்கள் இவ்வாறு கேட்கும் பொழுதெல்லாம் இறைத்தூதர் (ஸல்)அவர்கள் கடினமாகக் கோபப்படக் கூடியவர்களாகவும், அந்தக் கோபத்தின் சாயல் அவர்களது முகத்தில் தெரியக் கூடிய அளவுக்கு, அதிகமாகக் கோபப்படக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆப்பொழுது அவர்கள் தோழர்களைப் பார்த்து இவ்வாறு கூறுவார்கள் : நிச்சயமாக, நான் உங்களைக் காட்டிலும் இறைவனுக்கு அதிகம் பணிந்து நடக்கக் கூடியவனாக இருக்கின்றேன், இறைவனுடைய கட்டளைகளைப் பற்றி உங்கள் அனைவரைக் காட்டிலும் அதிகம் அறிந்தவனாகவும் இருக்கின்றேன். (புகாரி)

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒரு செயலைச் செய்தார்கள் என்றால், மற்றவர்களும் அதன்படிச் செயல்படுவதற்கு விட்டு விடுவார்கள். ஆனால் சில தோழர்கள் அந்த அனுமதியை எடுத்துக் கொண்டு செயல்படுவதில்லை. இத்தகையோர்களது செயல்பாடுகளைப் பற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அறிய வந்த பொழுது, இறைவனைப் புகழ்ந்து விட்டு ஒரு உரையை நிகழ்த்தினார்கள், நான் ஒரு செயலைச் செய்து விட்டதன் பின்பு, அதன்படி நீங்களும் செயல்படுவதிலிருந்து ஏன் தவிர்ந்து கொள்கின்றீர்கள்? ஏன்று கேட்டு விட்டு இறைவன் மீது சத்தியமாக! முற்றவர்களுடன் என்னை ஒப்பிடும் பொழுது, அவர்களை விட நான் இறைவனைப் பயப்படக் கூடியவனாக இருக்கின்றேன். (இதனை வேறு ஒரு வார்த்தைகளில் கூற வேண்டுமெனில், இறைவனுடைய கட்டளைகளைப் பற்றி நீங்கள் அறிந்தவர்களாகவுமில்லை மற்றும் என்னைக் காட்டிலும் அவனுக்கு அச்சப்பட்டவர்களாகவும் இல்லை) என்று கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்).

### சுன்னாவின் மீது செயல்படாதவர்களை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தண்டிக்க நாடினார்கள்

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : எதனையும் உண்ணாமல் தொடர்ந்து நோன்பு நோற்காதீர்கள். நபித்தோழர்கள் வினவினார்கள் : இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நீங்கள் மட்டும் தொடர்ந்து நோன்பு நோற்கின்றீர்களே! நான் உங்களைப் போன்றவனல்லன் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறிவிட்டுக் கூறினார்கள் : என்னுடைய இறைவன் எனக்கு இரவில் உணவூட்டுகின்றான் மேலும் என்னுடைய தாகத்தைத் தணிக்கவும் செய்கின்றான். இருந்தும் சில தோழர்கள் (இந்தப் பதிலால்) திருப்தியடைந்தவர்களாக இல்லை. மேலும் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள் : இதனை அடுத்து, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தொடர்ந்து இரண்டு நாட்கள், இரண்டு இரவுகள் நோன்பு நோற்றார்கள். பின்பு ஷவ்வால் மாதத்துப் பிறை தெரிந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : இந்தப் பிறை மட்டும் தெரியவில்லை என்றால், நான் தொடர்ந்தும் நோன்பு நோற்றிருப்பேன் என்றார்கள். இதை வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமெனில், இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் அந்தத் தோழர்களும் தொடர்ந்து நோன்பு வைத்து, அதன் மூலம் இறைத்தூதர் (ஸல்) அவர்களது கட்டளையைப் புறக்கணித்த அந்தத் தோழர்களை தண்டிக்க நாடினார்கள்.) (புகாரி)

### சுன்னாவைப் பற்றிய செய்தி கிடைத்த பின்பும் அதன்படி யார் செயல்படவில்லையோ அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குக் கீழ்படியாதவர்கள்.

ஜாபிர் பின் அப்துல்லா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள் : மக்காவை வெற்றி கொள்வதற்காக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ரமளான் மாதத்தில் மதினாவை விட்டுக் கிளம்பினார்கள். குராஅல் கமீம் என்ற இடம் வந்ததும் ஒரு பாத்திரத்தை எல்லோரும் காணும் அளவில் தூக்கிப் பிடித்து, அந்த பாத்திரத்திலிருந்து பானத்தைப் பருகி (நோன்பை முறித்தார்கள்) னார்கள். இருந்தும், பல நபித்தோழர்கள் தங்கள் நோன்பைத் தொடர்ந்தார்கள் (தங்களது நோன்பை முறிக்கவில்லை). இவ்வாறு பல

தோழர்கள் இன்னும் நோன்பு நோற்றிருக்கின்றார்கள் என்பதைக் கேள்விப்பட்ட இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அவர்கள் கீழ்படியாதவர்கள், அவர்கள் கீழ்ப்படியாதவர்கள் என்று கூறினார்கள்

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சுன்னாவினால் அங்கீகரிகப்படாத எதனையும் இறைவனும் ஏற்றுக் கொள்வதில்லை.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : யாரொருவர் மார்கத்தில் இல்லாத ஒன்றை செய்கின்றாரோ, அந்தச் செயல் தள்ளுபடி செய்யப்பட்டதாகும். (இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை). (புகாரி).

குர்ஆனையும் சுன்னாவையும் பின்பற்றாதிருப்பது வழிகேட்டில் கொண்டு போய்ச் சேர்க்கும்

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தங்களுடைய இறுதி ஹஜ் உரையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது இவ்வாறு கூறினார்கள் என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : மீண்டும் இந்தப் பூமியில் ஷைத்தான் தன்னை வணங்கப்படுவது குறித்து அவன் நிராசையடைந்து விட்டான். எனவே, அவன் இப்பொழுது ஒரு விசயத்தில் அவன் நம்பிக்கையோடு இருக்கின்றான், அதாவது (ஷிர்க்கிற்கு அப்பால்)எதனை நீங்கள் சிறிய விசயமாகக் கருதுகின்றீர்களோ, அதன் மூலம் நீங்கள் அவனைப் பின்பற்றுவீர்கள், எனவே எப்பொழுதும் (ஷைத்தானின் வழிகேட்டில் செல்வதில் இருந்தும்) கவனமாக இருங்கள், (அறிந்து கொள்ளுங்கள்!) நான் இங்கு விட்டுச் செல்கின்றவைகளை நீங்கள் உறுதியாகப் பற்றிப் பிடித்திருக்கும் காலம் வரைக்கும் நீங்கள் வழிதவற மாட்டீர்கள். ஒன்று அல்லாஹ்வின் திருவேதமான குர்ஆன், மற்றது என்னுடைய சுன்னாவா (ன வாழ்வியல் நடைமுறைகளா)கும். (ஹாகிம்).

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : உங்கள் அனைவருக்கும் பின்னால் இரண்டு விசயங்களை நான் விட்டுச் செல்கின்றேன். அதன்படி நீங்கள் நடக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவற மாட்டீர்கள். ஒன்று இறைவனது வேதமான குர்ஆன் மற்றது என்னுடைய சுன்னாவாகும். (ஹாகிம்).

இறைத்தூதர் (ஸல்)அவர்களுடன் - ஏனைய நபிமார்களையோ, உலமாவையோ, சுன்னத் வல் ஜமாத் தலைவரையோ, பிக்ஹு வில் தேர்ச்சி பெற்றவரையோ அல்லது தலைவரையோ அல்லது மார்க்க அறிஞரையோ ஒப்புநோக்கி, சுன்னாவை விட இவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பது, இவர்கள் அனைவரும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு முன்பாக ஒன்றுமில்லாதவர்கள், அவர்களைப் பின்பற்றுவது வழிகேடே அன்றி வேறில்லை.

ஜாபிர் (ரலி) அறிவிக்கின்றார்கள் : உமர் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களைச் சந்தித்தார்கள் அப்பொழுது: நாங்கள் யூதர்களிடமிருந்து சில விசயங்களைக் கேள்விப்பட்டோம், அதனை நாம் விரும்பவும் செய்வோம், அவற்றை நல்லனவாக எடுத்துக் கொண்டு அதனைக் குறித்துக் கொள்ளலாமா என்று உமர் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அப்பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், யூதர்களும், கிறிஸ்தவர்களும் தங்களது மார்க்த்தில் சந்தேகம் கொண்டது போல், நீர் உம்முடைய மார்க்கத்தில் சந்தேகம் கொள்கின்றீரா? (ஏதேனும் குறை இருப்பதாகக் கருதுகின்றீரா?) இருப்பினும் நான் மிகத் தெளிவான பின்பற்றத்தக்க இறைச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றேன். மூஸா இன்றைக்கு உயிரோடிருப்பாரேயாகில், என்னைப் பின்பற்றுவதைத் தவிர அவருக்கு வேறு ஒன்று இல்லை, எனக் கூறினார்கள்.

ஜாபிர் (ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள் : உமர் (ரலி) அவர்கள் தன்னுடைய கையில் தவ்ராத் வேதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு இறைத்தூதர் (ஸல்) அவர்களைச் சந்தித்தார்கள். (இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பார்த்து, இறைத்தூதர் (ஸல்) அவர்களே!) இது தான் தவ்ராத்!

(என்றார்கள்). இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எதனையும் கூறாமல் அமைதியாக இருந்தார்கள். ஊமர் (ரலி) அவர்கள் தவ்ராத்திலிருந்து சில வாசகங்களை வாசிக்க ஆரம்பித்தார்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களது முகம் கோபத்தால் நிறம் மாற ஆரம்பித்தது. இதைக் கண்ட அபுபக்கர் (ரலி) அவர்கள், உமரே! இறைத்தூதர் (ஸல்) அவர்களது முகத்தை நீர் பார்க்கவில்லையா? நீர் இங்கிருந்து போய் விடும் என்று கூறினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களது முகத்தைப் பார்த்த உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வினதும், அவனது தூதர் (ஸல்) அவர்களினதும் கோபத்தின் பாதகங்களில் இருந்து பாதுகாக்கத் தேடுகின்றேன் என்று கூறி விட்டு, வணங்கத்தக்க இறைவன் அல்லாஹ் ஒருவன் தான் என்பதில் நாங்கள் முழு திருப்தி கொண்டவர்களாக இருக்கின்றோம். இஸ்லாம் எங்களது மார்க்கமாகும், முஹம்மது (ஸல்) அவர்கள் எங்களது திருத்தூதருமாவார்கள் என்று கூறினார்கள். இதனைக் கேட்ட பின்பு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எவனுடைய கையில் என்னுடைய உயிர் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக, மூஸா இன்றிருந்திருப்பாரேயாகில், என்னைப் பின்பற்றுவதை விட்டு விட்டு அவரை நீர் பின்பற்றுவீராயானால், நேர் வழியை விட்டு விட்டு நீர் வழிகேட்டில் சென்றவராவீர். இன்று மூஸா அவர்கள் உயிரோடிருந்திருப்பாரேயானால், என்னுடைய நபித்துவத்தை அவர் ஏற்று சாட்சிபகர்வார், அவரும் எனக்குக் கீழ்படிய வேண்டும் என்றும் கூறினார்கள்.

### இறைத்தூதர் (ஸல்) அவர்களது கட்டளைக்கு பணிய மறுத்த பொழுது, உஹது யுத்தத்தில் வெற்றி தோல்வியை நோக்கிச் சென்றது

பராஅ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : உஹதுப் போர் நடந்த அந்த நாளிலே பல தெய்வ வணக்கக்காரர்களை நாங்கள் எதிர் கொண்டோம் - இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வில் வித்தையில் தேர்ச்சி பெற்ற ஒரு குழுவை ஏற்படுத்தி, அவர்களை மலையின் உச்சியின் ஓரிடத்தில் இருக்குமாறும், அந்தக் குழுவுக்கு அப்துல்லா பின் ஸு பைர் (ரலி) அவர்களை அக்குழுவுக்குத் தலைவராகவும் நியமித்து விட்டுக் கூறினார்கள், நாங்கள் வெற்றி கொள்ளப்பட்டு விட்டோம் என்று நீங்கள் கருதினாலும் சரி, இந்த இடத்தை விட்டு நீங்கள் நகர வேண்டாம், எங்களது உதவிக்கும் நீங்கள் வர வேண்டாம் என்று அவர்களுக்கு கட்டளையும் இட்டார்கள். இரு குழுக்களும் பொருதிக் கொண்ட அந்த நேரத்தில், இறைநிராகரிப்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்பதை, இறைநிராகரிப்பாளர்களின் குழுவைச் சேர்ந்த பெண்கள் தங்களது கீழாடைகளைத் தூக்கிக் கொண்டு, அவர்களது கணுக்காலில் அணிந்திருக்கின்ற ஆபரணங்கள் தெரிகின்ற அளவுக்கு அவற்றை தூக்கிப் பிடித்துக் கொண்டு மலை உச்சியை நோக்கி ஓடக் கண்டோம். (இந்த நிலையைக் கண்ட வில் வித்தை வீரர்கள்) கனிமத்துப் பொருட்கள், கனிமத்துப் பொருட்கள் (போரில் எதிரிகள் விட்டுச் சென்ற பொருட்கள்) எனக் கூவிக் கொண்டே, (அவர்கள் நின்றிருந்த இடத்தை விட்டுக் கீழே) இறங்க ஆரம்பித்த பொழுது, அப்துல்லா பின் ஸு பைர் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களது கட்டளையை முடிந்த மட்டும் அவர்களுக்கு ஞாபகமூட்டிய பொழுதும், வில்வித்தை வீரர்கள் அதனைச் செவிமடுக்காது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நிறுத்தி வைத்திருந்த இடத்தை விட்டும் கீழே இறங்கலானார்கள். இதன் விளைவாக முஸ்லிம்களுக்கு கிடைக்க வேண்டிய எளிதான வெற்றியில் பின்னடைவு ஏற்பட்டது மட்டுமல்ல, எழுபது நபித்தோழர்கள் படுகொலையாகவும் காரணமாக அமைந்தது. (புகாரி

### இறைத்தூதர் (ஸல்) அவர்களினால் அங்கீகரிக்கப்படாத சுன்னா ஒன்றை, அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது என மக்கள் முன் கூறுபவர்களுக்கு, நரகமே தண்டனையாகும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: யாரொருவர் அறிந்து கொண்டே (நான் கூறாத ஒன்றை) தவறானதை என்மீது கூறுகின்றாரோ, அவரது இருப்பிடம் நரகமேயாகும். (புகாரி, முஸ்லிம்).

அலி (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள் : என் மீது எதனையும் இட்டுக் கட்டிக் கூறாதீர்கள், ஏனெனில் எவரொருவர் என் மீது இட்டுக் கட்டிக் கூறுகின்றாரோ அவர் நரகத்தில் நுழைவார். (புகாரி, முஸ்லிம்).

ஸலமா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள் : நான் கூறாத ஒன்றை எவரொருவர் என் மீது இட்டுக் கட்டிக் கூறுகின்றாரோ, அவர் தன்னுடைய இருப்பிடத்தை நரகத்தில் ஆக்கிக் கொள்ளட்டும். (புகாரி).

அபூஹுரைரா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள் : இந்த உலகத்தின் இறுதிக் கட்டத்தில், கிறிஸ்தவர்களும், பொய்யர்களும் (சேர்ந்து கொண்டு) நீங்களும், உங்களது முன்னோர்களும் அது வரை கேள்விப்படாத பல ஹதீஸ்களை உங்கள் முன் கொண்டு வருவார்கள். அவர்கள் உங்களை வழிகேட்டில் கொண்டு செல்வதனின்றும் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் அல்லது அந்த வழிகேட்டில் நீங்கள் வீழ்ந்து விடுவீர்கள். (முஸ்லிம்).

### யாராவது சுன்னாவைப் புனைந்துரைக்க முயன்றால், அவர் அல்லாஹ்வின் கோபத்தைப் பெற்றுக் கொள்வார்.

க.:பாவின் புனிதத் தன்மையை அமைப்பை மாற்றுகின்ற வகையில் அதன் மீது கலங்கத்தை ஏற்படுத்துகின்றவர்

இறைத்தூதர் (ஸல்) அவர்களது வழிமுறையை விட்டு விட்டு, அறியாமைக் காலத்துப் பழக்கத்தைத் தேடிக் கொண்டிருப்பவர்

தவறான முறையில் ஒரு முஸ்லிமைக் கொலை செய்வதற்காக அவனுடைய இரத்தத்தை பலி ஈடாகப் பெற்றுக் கொள்பவர்.

ஆகிய இந்த மூன்று நபர்கள் மீது இறைவனின் கோபம் இறங்குவதாக, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புகாரி).

### இறைத்தூதர் (ஸல்) அவர்களது சுன்னாவைப் பின்பற்றாதவர்களுக்கு இந்த உலகத்திலும் தண்டனை உண்டு.

சலமா பின் அக்வா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : ஒரு மனிதர் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் உணவு உண்டு கொண்டிருக்கும் பொழுது தன்னுடைய இடது கையைக் கொண்டு உணவருந்திக் கொண்டிருந்தார். அப்பொழுது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அந்த நபரைப் பார்த்து, வலது கையினால் உணவருந்துவீராக எனக் கூறினார்கள். அதற்கு அந்த மனிதர், என்னால் இயலாது எனப் பதில் கூறினார். அதற்கு இறைத்தூதர் (ஸல்) அவ்வாறு செய்வதற்கு இயலாமலேயே போகட்டும் என்று கூறினார்கள். அந்த மனிதர் அதை ஒரு தற்பெருமையடித்தவாறே அவ்வாறு கூறினார். மேலும் இந்த ஹதீஸை அறிவிக்கக் கூடிய அறிவிப்பாளர் கூறுகின்றார் : அந்த மனிதர் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தன்னுடைய வலது கையை தன்னுடைய வாய்க்கு அருகில் கொண்டு செல்ல இயலாத நிலையிலேயே இருந்தார். (முஸ்லிம்).

### சுன்னாவின் மீதான மதிப்பு

சுன்னாவில் ஏற்படக் கூடிய சிறிய அளவிலான மாறுபாட்டைக் கூட நபித்தோழர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஆட்சியாளர் மர்வான் என்பவரின் மகன் பஷீர் என்பவர் ஒரு நாள் ஜு ம்ஆத் தொழுகைக்காக மிம்பரில் குத்பா உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் பொழுது, நின்று கொண்டிருந்த நிலையில் இரு கைகளையும் உயரே தூக்கிக் கொண்டு உரை நிகழ்த்தியதைக் கண்ட உமாரா பின் ருவைபா (ரலி) அவர்கள் : அல்லாஹ் உன்னுடைய இரண்டு கைகளையும் அழித்து விடட்டும் என்று கூறி விட்டு, தன்னுடைய ஆட்காட்டி விரலை உயர்த்திக் காட்டி, இதைவிட இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தங்களது கைகளைத் தூக்கி உரை நிகழ்த்தியதை நான் பார்த்ததே இல்லை எனக் கூறினார்கள். (முஸ்லிம்).

காப் பின் உஜ்ரா (ரலி) அவர்கள் உம்முல் ஹக்கம் என்பவரின் மகன் அப்துர் ரஹ்மான் அவர்கள் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் பொழுது பள்ளிவாசலினுள் நுழைகின்றார். அப்பொழுது காப் பின் உஜ்ரா (ரலி) அவர்கள் என்ன இது கொடுமை! எனக் கூறி விட்டு, அவர் என்ன உட்கார்ந்து கொண்டே உரை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார் (இது சுன்னாவிற்கு மாற்றமாயிற்றே!). அல்லாஹ் தன்னுடைய திருமறையிலே கூறுகின்றான் : **இன்னும், (நபியே!) அவர்களில் (சிலர்) ஒரு வியாபாரத்தையோ, அல்லது ஒரு வேடிக்கையையோ, கண்டால், அதன்பால் அவர்கள் சென்று விடுகின்றனர். மேலும், நின்ற வண்ணமே உம்மை விட்டுவிடுகின்றனர் (62:11) (முஸ்லிம்)**

சுன்னாவை இலேசாக எடுத்துக் கொண்டாலும் அல்லது அதனைப் பற்றிக் கண்டு கொள்ளாதவர்களையும் நபித்தோழர்கள் வெறுத்து ஒதுக்கினார்கள்

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லா இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : இறைநம்பிக்கை கொண்ட பெண்கள் பள்ளிவாசலுக்கு வருவதை யாரும் தடுக்கக் கூடாது என்பதை அப்துல்லா பின் உமர் (ரலி) அவர்கள் கூற, அப்துல்லா (ரலி) அவர்களின் மகன், நாங்கள் அவர்களைத் தடுப்போம் எனக் கூறினார்கள். இதனைக் கேட்ட அப்துல்லா (ரலி) அவர்கள் மிகவும் கோபம் கொண்டவர்களாக : நான் உன்னிடம் இறைத்தூதர் (ஸல்) அவர்களது சுன்னாவைக் கூறிக் கொண்டிருக்கின்றேன், நீ அதற்கு மாற்றமாக இப்படிப்பட்ட பதிலையா நீ கூறுகின்றாய் எனக் கூறினார்கள். (இப்னு மாஜா)

அப்துல்லா பின் முகஃப்பல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : அதாவது தன்னுடைய மருமகன் தன் மடியில் அமர்ந்து கொண்டு கற்களை எறிந்து கொண்டிருந்தார். அப்துல்லா (ரலி) அவர்கள் தன் மருமகன் அவ்வாறு செய்வதைத் தடுத்து, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கற்களை எறிந்து விளையாடுவதைத் தடை செய்துள்ளார்கள் என்று கூறினார்கள். மேலும் கூறினார்கள் : இவ்வாறு எறிந்து விளையாடுவதால் நீ எந்த மிருகத்தையும் வேட்டையாடவோ அல்லது உமது எதிரி நஷ்டத்திற்குள்ளாகவோ போவதில்லை எனக் கூறி விட்டு, இவ்வாறு நீ செய்வதால் எதையாவது உடைத்து விடவோ அல்லது பிறரது கண்களை காயப்படுத்தி விடவோ கூடும் என்றும் கூறினாலும், அவரது மருமகன் மீண்டும் கற்களை எறிந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்துல்லா (ரலி) அவர்கள் கூறினார்கள் : நான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கல்லை எறிந்து விளையாடுவதை தடுத்திருக்கின்றார்கள் என்று கூறிக் கொண்டிருக்கின்றேன், நீ மறுபடியும் மறுபடியும் (அதனைச் செவிமடுக்காமல்) எறிந்து கொண்டிருக்கின்றாய், எனவே, இனி எப்பொழுதும் உன்னிடம் நான் மீண்டும் பேசவே மாட்டேன் என்று கூறினார்கள். (இப்னு மாஜா).